உ

கடவுள் துணை

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும்பிரசுரமாகும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி ௰.] விரோதிகிருது௵ கார்த்திகைமீ [பகுதி-க

உள்ளுறை.


முடிசூட்டு மங்கல வாழ்த்து:—தமிழ்ச் சங்கத்தார். (அநுபந்தம்) க.

பட்டாபிஷேகமும் டில்லி தர்பாரும், ஷை சிறப்பும்:— ஸ்ரீமத்-பி. எஸ். சுப்பிரமணியஐயர். ச,கூ.

தமிழ் வரலாறும் அதன் மகிமையும்:— ஸ்ரீமத்-சே.ரா. சுப்பிரமணியக்கவிராயர். க.

ஜைநர்களின் ஆதிபாஷை:— ஸ்ரீமத்-டி. எஸ். குப்புஸ்வாமிசாஸ்திரிகள். கசா.

சுத்தாத்துவித சைவசித்தாந்த மகத்துவம்:— ஸ்ரீமத்-சு. சரவணமுத்துப்பிள்ளை. உங.

முத்தகச்செய்யுட்டிரட்டு:—ஒரு தமிழ்நேயன். ஙக.

மேருமலை:—ஸ்ரீமத்-சி. கணேசையர். ஙஎ.

கைத்தொழிற்கண்ணாடி:—தேசசஞ்சாரி. சச.

வானசாஸ்திரம்:—ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகர். ருO.

புத்தகக்குறிப்பு:—பத்திராதிபர். ருரு.

கையறுநிலை:—பத்திராதிபர். ருஎ.

பரமபதமடைந்தவிஷயம்:—P. S. சுப்பிரமணியஐயர். ருஅ.



பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1911. [தனிப்பிரதி அணா-8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

# மறந்துவிடாதீர்கள்!

## உண்மையில் லாபம் அடைவீர்கள்.

உங்களுக்குப் பட்டுப்புடவைகள், ரவிக்கைக்குட்ட
கள், வெண்பட்டு வேஷ்டிகள், பட்டுபேஸ்காணுக்கள், ம
தாவளிகள், உருத்திராக்ஷங்கள் முதலிய சாமான்கள்வா
விருப்பமுண்டானால் உடனே ஸ்ரீ காசிப் பட்டுப் பீதாம்
வேர்ஹவுஸ், கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனிச்
எழுதுங்கள். உங்களுக்கு அவர்கள் அனுப்பும் தினுசுக
நல்ல திருப்தியைக்கொடுக்கும். சகலவிதப் பட்டுப்புட
களின் விலைகளடங்கிய பெரியகேட்லாக் இனாமாக அனு
புவார்கள். உடனே உங்கள் விலாசம் தெரிவியுங்கள்.

**K. S. MUTHIAH & Co.,**

**The Silk Pitamber Ware-House,**

**BENARES CITY.**

எழுதும் நண்பர்கள் இப்பத்திரிகையிற் கண்டதாக எழுத
வேண்டுகிறேன்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

---

## பத்தாந்தொகுதி.

மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

மதுரைத் தமிழ்ச்சங்கம்
THE MADURA TAMIL SANGAM

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1911—1912.

111

உ

## "செந்தமிழ்" பத்தாந்தொகுதியின்

# உள்ளுறை.

---


அச்சிட்டகாழியந்தாதி:—ஸ்ரீமத்-சோமசுந்தர தேசிகர் அவர்கள். [உரு௦.

ஆசாரவிளக்கம்:—கர்னல், உ. ஜி. கிங்கு. ஸி. ஐ. இ. ஐ. எம். எஸ். சானிடரி கமிஷனர் அவர்கள். சஉஎ.

ஆன்மபோதம்:—ஸ்ரீமத்-பொ. முத்தையபிள்ளையவர்கள். ஙகஎ.

இரங்கற்பாக்கள்:—வயி. நாக. ராம. அ. இராமநாதச்செட்டியார் அவர்கள். ககஅ.

ஷை:— ச. பூபாலபிள்ளையவர்கள். ஙஅரு.

இராமாவதாரச்செய்யுட் பாடாந்தரம்:— சி. கணேசையரவர்கள். க௦ச.

இருவகையுடம்பு:—அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். உருஅ.

இலக்கணவிளக்க மங்கலவாழ்த்து:—ச. பூபாலபிள்ளையவர்கள். ஙசக.

ஐயவினாத்தொடர்:—ஒரு மாணவச் சிறுவன். கஅக.

ஐயவினாவின்விடையுரை:—திரு. நாராயணையங்கார், பத்திராதிபர். ஙருஎ, ஙகூஎ, சஙஎ, சசுகூ, ரு௦க.

ஐயவினாவுக்குவிடை:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள். [ங௦ங.

ஒரு நிருப விடயம்:—எம். எஸ். பிச்சுவையரவர்கள். சஙக.

ஒளவையாரதுநீதிநூல்கள்:—குப்புஸ்வாமிசாஸ்திரிகள். சஎசு, ருகஉ.

கவிசித்தாந்தம்:—அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். உசுகூ.

காவியம்:—திரு. நாராயணையங்கார், பத்திராதிபர். உசுக, ங௦கூ.

காவிய நாடகச்சுவை:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். [கஅ௦.

குவனி:—ச. பூபாலபிள்ளையவர்கள். ஙஎ௦.

கூடலந்தாதி:—P. S. S. அவர்கள் பிரஸிடெண்டு, மதுரைத் தமிழ்ச் [சங்கம். ௩௩௯.

கைத்தொழிற்கண்ணாடி:—தேசசஞ்சாரி. சச, ககஉ.

கையறுநிலை:—திரு. நாராயணையங்கார், பத்திராதிபர். ௫௭.

ஷை:—கவிஞர்கள். ௬௧, க௩௬, ௩0ச.

சாவாவுடம்பு:—ஸ்ரீமத்-சி. கணேசையரவர்கள். க௩௧.

சுதர்மகலாவதீயம்:—திரு. நாராயணையங்கார். ௩௬உ.

சுத்தாத்துவித சைவசித்தாந்த மகத்துவம்:— ஸ்ரீமத்-சு. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள். உ௩.

சூரிய சித்தாந்தம்:—சோமசுந்தரதேசிகரவர்கள். ௩௭௭.

சைவாகம மிருபத்தெட்டு:— காரை. மு. சபாரத்தினஐயரவர்கள். உகஎ, ௩ச௯.

சொல்வேறுபடுத்தல்:—அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ச0௫.

தமிழ் வரலாறும் அதன்மகிமையும்:— சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்அவர்கள். க.

தனித்தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சி:— பிரஸிடெண்டவர்கள், தமிழ்ச்சங்கம்; மதுரை. கஎ0.

திருவள்ளுவரும் சமரச சன்மார்க்கமும்:— மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள். சஅச.

தீப்பாய்தல்:—ச. பூபாலபிள்ளையவர்கள். உச௫.

நச்சினார்க்கினியர்:—எஸ். சாமிநாதையரவர்கள், உஎக, ௩௬௫.

நடேசர்துதி விரிவுரை:—க. ப. இராமநாதன் செட்டியார் அவர்கள். ௫உ௫.

நாலடியாராராய்ச்சி:—குப்புஸ்வாமி சாஸ்திரிகள். கக௩,உஉஅ,உஅக,

நுண்பொருண்மாலை:—திரு-நாராயணையங்கார், பத்திராதிபர். உ௫ச, [௩௫உ, ச௬௯.

நோட்டீஸ்:—பிரஸிடெண்டவர்கள், தமிழ்ச்சங்கம், மதுரை. கஎக.

பக்திவைபவம்:—வி. தி. ஸ்ரீநிவாஸையங்கார்அவர்கள். ௩அஅ.

பட்டாபிஷேகச்சிறப்பு:—பி. எஸ். சுப்பிரமணியஐயரவர்கள். செந் [தமிழநுபந்தம் பக்கம் 9.

பட்டாபிஷேகமும் டில்லிதர்பாரும்:— } பி எஸ். சுப்பிரமணியஐயரவர்கள் ஷை பக்க்ம் 4.

பரமபதமடைந்தவிஷயம்:—பி. எஸ். சுப்பிரமணியஐயரவர்கள். ௫௮.

பாடசாலை:—தி. சதாசிவஐயரவர்கள். ௧௦௯.

பாண்டியசாசநம்:—A. சடகோபராமாநுஜாசாரியர். ௪௫௩, ௫௨௨.

பாரதரகசியம்:—பி. எஸ். சுப்பிரமணியஐயரவர்கள். ௧௨௫, ௨௧௩,
[௩௩௪.

பிழைதிருத்தம்:—பத்திராதிபர் ௧௬௯, ௪௩௬.

புட்பபந்தம்:—ஸ்ரீமத். ப. அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளையவர்கள். ௪௪௫,
[௪௯௩.

புத்தகக்குறிப்பு:—பத்திராதிபர். ௫௫, ௧௨௧, ௧௬௯, ௩௦௭, ௩௫௫,
[௩௯௬, ௪௩.௫, ௪௬௮, ௫௩௧.

பூகோளம்:—ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகரவர்கள். ௧௬௨, ௧௮௪.

மங்கலவாழ்த்து:—அரங்கசாமிஐயங்காரவர்கள். ௧௫௮.

மலையாளம்:—து. அ. கோபிநாதராவ் அவர்கள் ௯௪.

முடிசூட்டு மங்கலவாழ்த்து:—தமிழ்ச்சங்கத்தார் (அநுபந்தம்) ௧.

முடிசூட்டுவைபவம்:—ஸ்ரீமத்-P. R. கிருஷ்ணமாச்சாரியர். ௧௫௨.

முத்தகச்செய்யுட்டிரட்டு:—ஒரு தமிழ்நேயன் ௩௧.

முத்தகச்செய்யுட்டிரட்டு:—ஸ்ரீமத். அ. சிதம்பரமுதலியார்அவர்கள்
[௩௩௧.

முத்திரை:—சோமசுந்தரதேசிகரவர்கள். ௪௨௨.

முருகதாஸஸ்வாமி:—வீ. சுப்பிரமணியஐயரவர்கள். ௧௬.

மேருமலை:—சி. கணேசையரவர்கள் ௩௭.

‘ராவ்சாஹிப்’பட்டம்:—வே. முத்துஸாமிஐயரவர்கள் ௩௮௧.

வடமொழியுந்தமிழும்:—திரு-நாராயணையங்கார் பத்திராதிபர் ௧௭௩,
[௨௨௧.

வறுமையிற்செம்மை;—எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் [அவர்கள் ௩௨௪.

வாழ்த்துக்கவிகள்:—எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தர் அவர் [கள். வி. சாமிநாதபிள்ளையவர்கள். ௩௫௪, ௩௫௫.

வானசாஸ்திரம்:—ஸ்ரீமத். சோமசுந்தர தேசிகரவர்கள். ௫0. ௨0௧. ௨௩௭, ௨௮௮, ௪0௮, ௪௫௬.

வினைப்பகுதிவேறுபடுகை:--அ.குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௫0௮.

வெண்பா:—(இரங்கற்பா) ஜூலியன்வின்ஸன் துரையவர்கள். ௨௬0.

வெள்ளியந்திருமலைகிழார்:—ஸ்ரீமத். ச.கந்தையபிள்ளையவர்கள்௩௭௪.

ஸ்ரீஜகத்குரு அவர்கள் விதேக கைவல்யமடைந்தது:— } பி. எஸ். சுப்பிரமணியஐயர் அவர் [கள். ௨0௫.

ஜார்ஜ்சக்ரவர்த்தியவர்களின் முடிசூட்டு வாழ்த்து:— } வி. தில்லைநாயகமுதலியார் அவர்கள். [௨௧௯.

ஜைனர்களின் ஆதிபாஷை:—டி. எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரிகள். [௫௯.

ஸ்ரீமீனாக்ஷி பதிகம்:—உமாதாஸ். ௧௬0.

---

## "செந்தமிழ்"ப் பத்தாந்தொகுதியில் வெளிவந்த நூல்கள்

(முற்றுப் பெற்றது.)

1. அகப்பொருள்விளக்க மூலமுமுரையும்:— } ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைத்தேவரவர்கள். ௩, ௪, ௫, ௬, ௭, ஆம் பகுதிகள்.

(முற்றுப் பெறாதவை.)

1. திருமந்திரநூறுபாட்டுக்குரை:—ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள். ௩, ௫, ௮, ௧0, ௧௧, ௧௨, ஆம் பகுதிகள்.

2. மாறனலங்காரம்:—திரு-நாராயணையங்கார் பத்திராதிபர் ௮, ௯, [௧0, ௧௧, ௧௨, ஆம் பகுதிகள்.

---

# நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம் .

# பூரண ஆரோக்கியம்

என்பது யாதொரு வியாதியுமின்றி வெகுசுத்தமாய் அமைந்திருக்கிறது ஆகையினாலே எப்பொழுதாவது மாறுதல் ஏற்பட்டாலும் அல்லது அற்ப இடையூறுண்டாவதாய் நீங்கள் உணர்ந்தாலும் உடனே தற்கால பலவிருத்தி ஔஷதமாகிய

## ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களைத் தஞ்சமெனக் கைப்பற்றுங்கள்

அதி சீக்கிரத்தில் இம்மாத்திரைகள் கொடுக்கக்கூடிய குணம் என்னவெனில், முதலாவது ஜீரணசக்தியை ஒழுங்கு படுத்துகிறது. இதைச் சீர்படுத்தியபொழுது உங்கள் சரீரத்திலுள்ள பாதிப்பிணிகள் நீங்கிவிடுகின்றன. மாத்திரைகளைத் தொடர்ச்சியாய் உபயோகித்துவரின் சீதோஷ்ண வேறுபாடு முதலிய காரணங்களால் உண்டாகும் சகல குழப்பங்களை நீக்குவதுமல்லாமல், பலவித தொத்து வியாதிகளையும் தடுக்கின்றன.

இந்த மாத்திரைகளைச் செய்வதில் கெடுதி விளைவிக்கக்கூடிய எந்த பதார்த்தமும் உபயோகிக்கப்படுவதில்லை இதன்றி அவைகள் தீங்கற்றவை.

ஒரு டப்பி மாத்திரையை முயற்சித்துப் பாருங்கள். விலை ரூபா ஒன்று தான்

இன்னும் சவிஸ்தாரமாய் அறியவிரும்பினால் இனாமாய்க் கொடுக்கப்படுகிற எங்கள் 180 பக்கங்கொண்ட புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி
**மணிசங்கர் கோவிந்தஜி,**
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
22 பிராட்வே மதிராஸ்

பல கண்காக்ஷிகளில் மெடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்

# மெர்கல்.

## கொடிய மேகரணத்தைத் தீர்க்க உள்ளே சாப்பிடுகிற மருந்து.

40 காப்ஸல்ஸ்களுள்ள பாட்டில்கள்.




மெர்கல் நல்ல ஜீரணசக்தியைக் கொடுக்கக்கூடியது. வயிற்றுவலியையாவது வயிற்று உளச்சலையாவது உண்டாக்கமாட்டாது. குண்டிக்காயிலும் எரிச்சல் உண்டாக்கமாட்டாது.

மெர்கலினால் சோஸ்தப்படுத்தப்படும் வியாதிஸ்தர்களுக்கு யாதொரு வலிகளையாவது கெடுதல்களையாவது உண்டுபண்ணுகிறதில்லை. இதில் நிரம்பவும் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால் இந்தமாதிரியாக வைத்தியஞ்செய்வதானது ஒருவனுடைய அவஸ்தையை வெளிப்படுத்தாமல் செய்கிறது.

இது எல்லா ரசாயன மருந்து ஷாப்புக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**HOLZ MULLER & SCHMIDT,**
7, Colootola Street,
**CALCUTTA.**

*Stocked by:—*
T. V. GEORGE & CO.,
*CHEMISTS,*
**MADURA.**

☞ எழுதும் நண்பர்கள் இப்பத்திரிகையிற் கண்டதாக எழுதவேண்டுகிறேன். 

# பி. சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை

## ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்கோவில் சந்நிதி, தஞ்சாவூர்.

என் ஆயுர்வேத ஔஷதசாலையை பறங்கிப்பேட்டையிலிருந்து ஸ்திரமாக தஞ்சாவூருக்கு மாற்றியாய்விட்டது.

32. **இரத்த சுத்தி:**—தேகத்தில் இரத்தம் கெட்டு போகுவதால் உண்டாகும் வாய்ப்புண், கண்ணோய், புண், புரைகள், மேஹரணங்கள், மேதடிப்பு, அரிப்பு, படை, குஷ்டம், முதலிய சருமவியாதிகள், பல ஹீனம், அசதி, வாதப்பிடிப்பு, தலைவலி, அக்கினிமாந்தம், அரோசிகம், வாய்கசப்பு, தேகத்தில் நாற்றம், மகோதரம், தோல்நிறம் மாறுதல், தோலில் சொறணையற்றுப்போகுதல், புத்திமந்தம், முதலிய பற்பல வியாதிகள் குணமாகும். இரத்தத்திலுள்ள நஞ்சைப்போக்கி, சுத்தப்படுத்தி, தேக வலிவு, தேஜஸ், நல்ல பசி தாதுபுஷ்டி, உண்டாக்கும். 20 நாளைக்கு போதுமான மருந்து டப்பா 1-க்கு ரூபாய் 2. வி. பி. செலவு 1, அல்லது 2, டப்பாக்கள் அனுப்ப அணா 5. பிரத்தியேகம்.

33. **சித்த மகரத்துவஜம்:**—இது மகரத்துவஜத்தை விடச் சிறந்த ஔஷதம். இதனால் தீராத வியாதி ஒன்றுமில்லை. சர்வ சுரங்கள், காசம், இருமல், க்ஷயம், அக்கினிமாந்தம், காலரு, சீதபேதி, இரத்தபேதி, சகல வாயுவு, இன்னும் எல்லா வியாதிகளும் தீரும். இம்மருந்து உபயோகித்தவருக்கு ஆயுசு 100-வருஷமானாலும் பூரண புருஷத்தன்மை குறையாமலிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. தோலா 1-க்கு ரூபா 80. எழு வேளைக்குள்ள மருந்து ரூபா 3. வி. பி. செலவு பிரத்தியேகம்.

34. **வாயு சம்ஹாரி:**—கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், கடுப்பு, கால்முடக்கு, தேகத்தில் உளைச்சல், குத்றல், குடைதல், தலை நோய், பக்கசூலை, பார்சவாயுவு, திமிர்வாயுவு, அஜீரணம், குன்மம், அண்டவாயுவு, சூலைவாதம், மலஜலக்கட்டு, முதலிய அநேகவித வாயுவு ரோகங்களும் தீரும். டப்பா 1-க்கு விலை ரூபாய் 1. வி. பி. செலவு 1முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

35. **காலரா என்னும் வாந்திபேதிக்கு மருந்து:**—இக்கொடிய நோய்க்கு, இது கைகண்ட ஔஷதம். டப்பா 1-க்கு ரூபா ஒன்று. வி. பி. செலவு 1-முதல் 6-டப்பாக்கள் வரையில் அனுப்ப அணா 5. பிரத்தியேகம்.

36. **மலபந்த நிவாரணி:**—மலஜலக்கட்டு, அக்கினி மாந்தம், வாயுவு, குடல்புரட்டல், மூலச்சூடு, காந்தல், இளைப்பு, மூலம், செரியாமை, புளித்த எப்பம், தீரும். தினம் தப்பாமல் காலாகாலங்களில் மலம் உதயமாகும். டப்பா 1-க்கு விலை அணா 10. வி. பி. செலவு 1, அல்லது 2, டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

37. **சந்திராமிருதரசம்:**—அசாத்தியமானகாசம், இருமல், க்ஷயம், முதலிய நுரையீரலைப்பற்றிய வியாதிகளைக் குணப்படுத்தும், நல்ல பசியும், தேக பலமும் உண்டாக்கும். டப்பா 1-க்கு ரூபா 1, வி. பி. செலவு 1முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5. பிரத்தியேகம்.

# குந்தல கௌமதி.

என்னும் கூந்தலை வளர்க்கும் தைலத்தை இடைவிடாமல் உபயோகிப்பதினால் மயிர்க்கு ஏற்படக்கூடிய தொந்தரவுகள் நீங்கும். இது மயிருடன் சேர்ந்த கபாலத்தோலை ஜிலுஜிலுப்பாகவும், குளிர்ச்சியாகவும் செய்கிறது. மயிர்க்கால்களுக்கு ஊக்கமும் வளரும்சக்தியையும் ஏற்படுத்தி மயிரை மிகவும் நல்ல ஸ்திதியில் வைக்கிறது.

பெரிய அளவு புட்டி 1-க்கு 12-அணா தபால் சார்ஜ் உள்பட ரூ 1- 3-0
ஷை ஷை 3-க்கு ரூ 2 ஷை ஷை ரூ 2-11-0

வேண்டுவோர், சென்னை ஏஜண்டுகளாகிய, எம். ஷாஹீயர்தயால் அண்டு கம்பேனி, 144—5, சினாபெஸார் ரோட்டு, சென்னைக்கு எழுதிக்கொள்ள வேண்டியது.

**Kaviraj. R. C. Sen L. M. S.**

**கவிராஜ் ஆர். ஸி. ஸென். எல். எம். எஸ்.**

**216 Cornvallis Street,**

காரன்வாலீஸ் தெரு,

**CALCUTTA.**

கல்கத்தா.

உ

கடவுள்துணை.

## மஹாமாட்சிமை தங்கிய
## ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்களது
# * முடிசூட்டு மங்கல வாழ்த்து.

(1) ஓங்குபெரு வாழ்வனைத்து முயிர்களெலா
மொருங்கடைய வோது நீதி
தாங்கியரு ளாட்சியினாற் சகமுழுதும்
புரக்கவல்ல சயங்கொள் சீலர்
தேங்குகலை செல்வமெலாந் திகழுகின்ற
சீமைதனிற் செங்கோ லோங்கு
மாங்கிலமா வேந்தரன்றி யவனியிலே
யாவருள ராயுங் காலே.

(2) இன்னவர்தம் பேராட்சி யிருங்கடல்சூ
ழுலகமெலா மிலக னோக்கி
மன்னுகதி ரொளியென்று மறையாத
நாடெனும்பேர் வழங்கி னாரா
லுன்னுபெரு வேந்தரிவர்க் குரிமைபெறுந்
தேயத்தி லொன்று யென்றும்
பன்னுவளஞ் சுரக்கின்ற பாரதநா
டாமிதுவும் பணிந்த தன்றே.

(3) மாவாழ்வு தருமிந்த மாட்சிபெறு
மாட்சிமுனம் வாயா னாளி
லோவாது நம்மவர்க ளுற்றபரி
பவமுழுது முரைக்க லுற்றாற்
பாவாரு மோர்பெரிய பாரதமா
மற்றதனைப் பகர்தற் கிந்தப்

* இது மதுரை Coronation Durbar celebration னில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தாராற் படிக்கப்பட்டது.

பூவாருஞ் சுபசமயஞ் பொருந்தாத
காலமெனப் புகன்றி லேமால்.

(4) வாரிபுடை சூழ்ந்தருளால் மனுமாந்தா
தாதியர்கள் மகிழ்வி னுண்ட
வாரியநா டாமிதுபின் னடைந்தபெருந்
துயரகல வளவி லாற்றல்
வீரியராய் மேனாட்டு விளங்குபிருட்
டானியராம் வேந்தர் நம்மை
நேரியலு மாட்சிசெய நேர்ந்ததுநம்
மீசனரு ணெறியே யம்மா.

(5) வேற்றரசர் முன்புகுந்து விளைத்தபெருங்
கொடுமையெலாம் விலகி நாட்டி
லாற்றுமிவ ராட்சியினு லாருயிர்கள்
சுகவாழ்வி லமர்ந்த தோடு
மேற்றிசையி னுகரிக விளைவான
தந்திதபால் மிக்க வேக
மேற்றிடுநீ ராவிரத மென்றிவற்று
னுற்றநல மெண்ணற் பாற்றே.

(6) நல்லறிவின் வளமோங்க நாடெங்குங்
கலைக்கழக நாடு மக்க
ளொல்லுமுடற் பிணியகலற் குரியமருத்
துவசாலை யோது நீதி
செல்லவுரை நியாயசபை திகழ்சட்ட
சபைமுதலாச் செப்பு கின்ற
சொல்லரிய முறைமையெலாந் துரைகள்செயு
மாட்சியிலே துலங்கிற் றன்றே.

(7) அன்னையெனக் குடிகளிட மருள்செலுத்து
மாங்கிலரி னுட்சி மேன்மை
தன்னையெலா மெடுத்துரைத்தல் சாத்தியமோ
விவ்வரசின் சார்பி னுலே

மன்னுறயா மனுப்விக்கு மாவாழ்வுஞ்
சுதந்தரமு மாட்சி சேரெம்
முன்னவர்கள் கனவிடையு முயன்றுணரா
தவையென்றே மொழிய லாமே.

(8) மாட்சிபெறு மித்தகைய மாதேசந்
தான்வாழ வந்த செல்வி
காட்சிமிகு மாராணி காருண்ய
விக்டோரியா காதற் பேர
ஞட்சிபெறற் குரிமையுறும் ஐந்தாம்ஜார்ஜ்
இந்திரன்போ லரசு மேவி
நீட்சிபெறு மோர்குடைக்கீழ் நீடாழி
யுலகளித்து நிற்கின் றானே.

(9) பூவேய்ந்த புகழ்ப்பரத கண்டஞ்செய்
புண்ணியத்தின் புதுமை யென்னே!
பாவேந்து பாரதராம் பாண்டவர்க
ளாண்டபழம் பதியாய் மேவுங்
காவேய்ந்த டில்லிதனிற் காவலரெல்
லாம்பணியக் காட்சி தந்து
மாவேந்த னிவனின்று மணிமகுடம்
புனைகின்றான் வாழி மன்னே.

(10) முந்துகுடி முப்பத்து முக்கோடி
யாருமக்கு முதல்வ னாகி
யிந்திரமா பிரத்தமதி லெழின்மகுடம்
புனையுமிந்த விறைவன் கோலஞ்
சுந்தரமார் விண்ணாட்டுச் சுரரெல்லாந்
தொழுதேத்தச் சுதன்மை தன்னி
லிந்திரனார் முடிசூடு மியற்கையதென்
றுலகமெலா மேத்து மன்றே.

(11) இவ்வரச னமையாளு மிந்தியசக்
கரவர்த்தி யென்றே யின்று

தெவ்வரசர் தொழுமாறு செகம்புகழ
வணிகின்ற சீர்கொள் மௌலி
திவ்வியநன் முடிசூடிச் சீராம
மூர்த்தியன்று திகழ்ந்த நாள்போ
லவ்வவர்தஞ் சிரமணிந்த வணிமகுட
மாயிற்றிவ் வவனிக் கம்மா.

(12) பெருமகிப னும்ஜார்ஜுப் பெருமானும்
பிராட்டியுடன் பெரிது வாழி
யருமையுறு மக்களொடு மொக்கலெலாந்
திருவருளா லமர்ந்து வாழி
தருமதுரைத் தனம்வாழி சகம்வாழி
வாழியென்று தழையு மன்பால்
திருமதுரைத் தமிழ்ச்சங்கஞ் செப்பியவாழ்த்
தெப்பொழுதுஞ் சிறக்க மாதோ.

---

௨

## *மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பட்டாபிஷேகமும், டில்லி தர்பாரும்.

பூமேவு பல்லுயிர்க ளூனமற மேன்மையொடு பொருந்தி வாழ
நாம்வாழ நாடனைத்தும் வாழவுல கெங்குமுயர் நடுவு வாழ
மாமாது மகிழ்ந்தொருகாற் றிங்கள்குல மன்னர்முடி மருவி வாழ்ந்த
சீமேவு மத்தினமா நன்னகரிந் நாள்வாய்ந்த சிறப்பைக் கேண்மின். (1)

தேவகியும் கோசலையும் போன்றமர்ந்த விக்டோரியாச் செல்வி யீன்ற
பூவலனே ழாம்எட்வர்ட் புண்ணியவான் பெற்றவரும் புதல்வ னிந்நாட்
காவலனைந் தாம்ஜார்ஜென் கண்மணிவிண் ணோர்வியந்து களிக்க வன்பாய்
மேவிடில்லி மாநகரில் பொன்மகுடம் பூண்டவுயர் விந்தை யென்னே. (2)

---

* இது மகா-ள-ள-ஸ்ரீ, பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களா லியற்றப் பெற்று மதுரை பிரம்மக்ஞான சபையில் படிக்கப்பெற்றது.

ஞாலமிசை வெற்றிபுனை மன்னரெலாம் கைகூப்பி நயந்து போற்றச்
சாலநிதி யம்பெருகும் செல்வரும்வந் தானவுயர் சபைமீ தார்ந்த
சீலமுட னைந்தாம்ஜார்ஜ் மன்னர்மணி பட்டாபி ஷேகம் பூண்ட
கோலமதைக் கண்ணுறவா யிரம்விழிபோ தாவெனவே கூறல் நோம். (3)

நம்மரசன் முடிபூண்ட நாட்புனித நாட்குருதன் நட்பு வீடாம்
செம்மைநிறை விருச்சிகத்தி லேபரிதி புந்தியுடன் சேர்ந்து லாவ [கப்
விம்முமிட பத்திருந்தன் ஞேரையும்சிங் கத்தையுஞ்சேய் விரைந்து நோக்
பம்மலறு மாதிரைசேர் திவ்வுலகம் மோதமுறப் பலித்த நாளே. (4)

அந்தநா ளேசுபிறந் திருபத்தாம் நூற்றாண்டி லைந்தோ டாறாய்
வந்தவரு டம்டிசம்பர் மாதமதில் ஏழாநாள் மற்று மீரா
றுந்துதினம் கூடுவிரோ திகிர்தாண்டில் தேளிலினன் உலவு மாதத்
தந்தமொடு குருவாரம் சேய்வார மிருநாளி லமர்ந்த தன்றே. (5)

வேறு

இம்முறை நிகழ்ந்த வண்ணம் இனிஇந்த நாட்டிற் கெல்லாம்
உய்ம்முறை யல்லால் மற்றோர் துயர்முறை யுறுவ துண்டோ
நம்முயி ரெல்லா மோம்ப நாடிநந் நாடு வந்து
செம்மையாய் ஜார்ஜு மன்னன் றிகழ்முடி தரித்த லாலே. (6)

பண்டைநாட் பெருமை மிக்க படர்தூநட் சேத்ரந் தன்னில்
மண்டலம் புகழும் அத்தி னபுரி மகிழ்வுற் றோங்கக்
கண்டகண் களிக்க ஜார்ஜென் காவலன் மகுட மங்கு
கொண்டதிந் நாட்டின் க்ஷேமக் குறியெனத் துணிந்து சொல்வாம். (7)

மன்னவ ராணை போற்றும் மாண்புளார் நிறையும் பண்பால்
முன்னையர் அரச நீதி முதிர்ந்தநன் னாடீ தென்று
மன்னிஅன் பாக டில்லி மாநகர் தன்னில் மன்னன்
துன்னுநன் மகுடம் சென்னி சூடிய தவர்க்கும் மேலாம். (8)

கதிரவன் மறையா தோம்பும் கண்ணகல் புவனந் தாங்கித்
துதிபெறு மாங்கி லேயத் துரைத்தனத் தார்க்கிந் நாடு
மதிவிலை யொன்றில் லாத மாமணி யாதல் பற்றிப்
பதிபுனை முடிமேற் சூடும் அணியெனப் பலித்த தஃதே. (9)

ஒய்விலாத் திரிதல் வாய்ந்த உலகினில் முன்னாள் தொட்டுப்
பாயுநீர் நிறைந்த மத்யத் தரைக்கடல் பதவி மேலாய்
தூயவோர் பினீஷி யாக்ரீஸ் துலங்குரோம் ஒன்றின் பின்னொன்
றாயுல காண்ட காலம் ஆனதிங் கறிவர் ஆரும். (10)

பின்னகல் அத்தி லாண்டிக் பெரியசா கரம்மாண் புற்றுப்
பன்னுயர், ஸ்பெயின்,போர்ச்சுக்கல் பரிவுசேர் அமெரிக் காவின்
துன்னுயர் ஐக்யநாடு தாயவங் கிலநா டோர்கால்
உன்னியொன் றோடொன் றார்ப்பாய் உயர்வுற முயன்ற காலம். (11)

சென்றிட, ஸ்பெயின்,போர்ச்சுக்கல் தேய்வுற ஸ்பெயினு மந்நாள்
வென்றிடத் தொகுத்த ஆர்மே டாப்படை மெலிந்து வீய
இன்றுயர் ஐக்ய நாடும் இங்கிலாந் தரசும் வெற்றி
ஒன்றிடப் பொருது மேனும் அங்கில முயரு மன்றே. (12)

அங்கிலம் கடலுக் கெல்லாம் அரசியாய் அமையும் பண்பால்
மங்கிடா தவளே மேலாய் வளர்வுறு நாட்ட மேலாய்த்
திங்களுங் கதிரு முள்ள நாளெலாந் திகழ்வ ளென்னச்
சங்கையே தொருத்தி யாயித் தாணியை யாள்வ ளன்றோ. (13)

திண்ணமாய்ப் பனாமாக் கால்வாய் திறந்திடில் பஸிபிக் ஆழி
தண்ணிலும் தரையின் மீதும் தலைமைவாய்ந் திடும்பின் ஜப்பான்
நண்ணுயர் ருஷ்யா ஐக்ய நாடு ஜர்மெனி. ஆஸ்ட்ரேல்யாக்
கண்ணலாம் இங்கி லாந்தன் றரசுறப் பொருது மம்மா. (14)

இவ்விதஞ் சிலநாட் போக இங்கிலாந் துலக மெல்லாம்
துவ்வியோ ராட்சி யாகத் துலங்கிநல் விசயம் பூணும்
ஒவ்வுறு மாங்கி லேய பாஷையே யுலக மெங்கும்
செவ்வறப் பரவி மேலாய்ச் சிறந்திடுந் திண்ணந் தானே. (15)

இப்பு விக்கா சாயமை யிங்கிலாந்
தொப்பி லாப்புக ழொன்றிடப் பின்னரும்
எப்ப டித்தலை யாம்நகர் என்றுயாம்
செப்ப லாமெழில் லண்டனைத் திண்ணமாய். (16)

அந்த நன்னக ரந்தொலை யானதால்
இந்தி யாஇடை யேயமை வுற்றதால் *
சந்த தம்புகழ் தாங்கிய டில்லியே
அந்த மார்தலை யாம்நக ராகுமே. (17)

என்று சம்பவம் இம்முறை யாகுமோ
அன்று தான்நமக் காந்தவத் தின்பயன்
வென்றி யாம்பெறு நாளது வேறொரு
நன்றி வேண்டுவ ரோசொலிந் நாட்டினர். (18)

டில்லி யென்னகர் தேவரும் யாவரும்
தொல்லை மன்னரும் எத்திடுந் தூய்மைசேர்
எல்லை யாங்குரு க்ஷேத்திரத் தெய்தலால்
நல்ல மங்களம் பெற்றதிந் நாடெலாம். (19)

---

* எதிர்பார்த்து மொழிந்தபடி பிந்தி டில்லிமாநகரானது இந்தியாகவர்மெண்டின் இராஜதானியாயிற்று. அம்முறையே இப்பாட்டுக்களினால் விரும்பப்பெற்ற எல்லா நன்மைகளும் குறைவின்றிக்கைகூடுமென்பதற்கு இதுவே நல்ல சகுனமென்று கருதலாம்.

XVII



ஈசன் மெய்யரு ளாலெம திந்தியா
மாசி லாப்புகழ் வாய்ந்திரு வையகம்
பேசு மோரார சாங்கப்ப்ர விர்த்தியை
ஓசு மேவி நடாத்திடு முண்மையே. (20)

ஐய மொன்றிலை யிவ்வித மாமெனத்
துய்ய நம்மர சன்சுப மாகநாம்
உய்ய டில்லியி லேமுடி யுற்றதே
எய்யுஞ் சூசக மாகுமி தற்கெலாம். (21)

வேறு

பின்னுமொரு சூசகந்தான் வேண்ட லேனோ
பேதமிலா வன்புமழை பெய்ந்திந் நாட்டிற்
கன்னையுயர் விக்டோரியா யரசி யான
ஆயிரத்தெண் ணூற்றைம்பத் தெட்டாம் ஆண்டில்
துன்னுவிளம் பரமொழியால் துயரம் போக்கி
தோன்றுசுதந் தரநமக்குத் துலங்க நல்கிக்
கன்னனிகர் வாக்களித்த போதே நல்ல
காலமெமக் குற்றதெனக் கருதி னோமால். (22)

அன்றுமுதல் நமையாண்ட அருளாம் செல்வி
ஆயிரத்தெண் ணூற்றெழுபத் தேழா மாண்டில்
நன்றுதவச் சக்கரவர்த் தினியென் பட்டம்
நாடுவக்கத் தான்வகித்த நன்னா ளிந்தத்
தொன்றுபுக ழாரியநா டாங்கி லேயத்
தோடுகலந் தொருநாடாய்த் துலங்கி யென்றும்
மின்றலுற வோர்குடைக்கீழ் உயிரை எல்லாம்
வாழ்வுபெற வைத்தனளம் மலராள் போன்றாள். (23)

அவ்வருடம் டில்லிநக ரமைந்த மன்றில்
அன்பினொடு லிட்டனெனு மரிய கோமான்
செவ்விதழி நம்மரசி தன்க ருத்தை
செப்பிநம்மைத் தன்வயிற்றுச் சேய்க ளாகத்
துவ்விசையக் காப்பனெனத் துலக்கிச் சொன்ன
தூயவுபந் யாசமுஞ்சூ சகமாய் எங்கும்
தெவ்வறநன் னாடுசெழித் திலகு மென்று
தேற்றமளித் திட்டதைநாம் தெரிந்தி லோமா. (24)

பின்வரும்எ ழாம்எட்வர்ட் ப்ரபல பூபன்
பேருலகந் தாங்கவென ப்ருதிவி மன்னர்
முன்னரோரா யிரத்தொடுதொள் ளாயி ரத்து
மூன்றாமாண் டினில்மகுடம் முடித்த காலை
நன்னயமாச் சொன்னசொலி னுறுதி யென்றும்
நாம்மறக்கற் பாலதுவோ நலமோ டன்னை
சொன்னஉயர் மாற்றமெலாம் நிலைநி றுத்தச்
சூழ்ந்துமொழிந் தானதுசூ சகம்நன் கிற்கே. (25)

XVIII



அத்தருணம் இப்பெரிய இந்து நாட்டை
ஆளரசுப் ப்ராதிநிதியா யமர்ந்த கர்ஸன்
புத்திவலி யோடெமது சக்ர வர்த்தி
புல்லுமெழில் வான்கருத்தைப் புகன்றிட் டேயாம்
நித்தமும்வாழ் வுறமொழிந்த வுபந்யா சத்தை
நெஞ்சமிசை தான்மறக்க நினையார் யாரும்
முத்தமழை பெய்திட விந் நாடு மேலாய
மோதமுறு மென்பதற்கம் மொழியே சான்றாம். (26)

இத்தனைக்கும் மேலாக விந்நாள் ஜார்ஜென்
எழிலரசன் முடிசூட விசைந்து லண்டன்
பத்தனத்தி லரசர்குழாம் பணிந்து கேட்கப்
பகர்ந்தளித்த வுபந்யாசம் பாலாய்த் தேனாய்ச்
சுத்தமுட னிங்கிலமும் உயிர்கள் யாவும்
சூழ்ந்தருந்த வானமுதாய்த் துலங்கி அன்னோன்
உத்தமனாய் அன்பினுரு வாயிந் நாட்டோர்
உய்யவருள் வானெனநல் லுறுதி செப்பும். (27)

செப்புமொழி தப்புறுமா திரைநீர் சூழ்நம்
தேசமுழு தும்செழிக்கச் சிதைவு றாத
நட்பினுட னுங்கிலரும் நாமு மோர்தாய்
நல்கியச கோதரராய் நறும்பால் தண்ணீர்
ஒப்பவுயர் ஐக்கியமா யுலகில் நோக்கம்
ஒன்றுபடத் தான்முயன்றே யுவந்திந் நாட்டில்
எப்பொழுதும் நற்சிறப்போ டினியாம் வாழ
ஈசனருள் வானெனப்பே சிடவே தையம்? (28)

வேறு

வாழ்க மன்னர் மரபின ரெங்கணும்
வீழ்க மாமழை வென்றிட நன்னெறி
தாழ்க நோவு சகந்தழைத் தோங்குக
சூழ்க மன்னன் சுகம்பெற யாருமே. (29)

நல்லார் உயர்ந்திட நன்னு டிலங்கிட நல்லெழில்சேர்
வில்லார் விஜய னிகர்ஜார்ஜு மன்னவர் மேன்மையொடு
பல்லாண்டு வாழப் பிணியற் றகலப் பகைவர்நைய
எல்லா முதவும் பரஞ்சுடர் தன்னை இறைஞ்சுவமே (30)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

குறிப்பு:— மற்றும் நண்பர்கள் பாடியனுப்பியவை அடுத்த பகுதியில் வெளிவரும். ப-ர்.

XIX

உ

மஹாராகனந்தங்கிய ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களின்

# பட்டாபிஷேகச் சிறப்பு.

நாளது கி. பி. 1911௵மானது நந்நாட்டிலுள்ள வெல்லாச்சனங்களையும் ஒப்பற்ற ஆநந்தங்களையனுபவிக்கச்செய்தும், அவர்கள் இதற்குமுன்னர் எக்காலத்திலும் உணர்ந்தறியா மனமகிழ்ச்சியைப்பெறும்படியியற்றியும், முடிவுபெறவேண்டுமென்பது கருணாநிதியாகிய பரமேசுவரனுடைய திவ்ய சங்கற்பமென்று நாம் எண்ணலாகும். தருமத்தையே மேலாகக்கொண்டு சூரியகுலத்திலுதித்த இக்ஷுவாகுவம்சத்து மன்னர்களாலும் சந்திரகுலத்திலுதித்த பாதவம்சத்து மன்னர்களாலும் ஆண்டுமகிழப்பெற்ற நமது நாடானது நம்முடைய புராணங்களால் வியந்துகொண்டாடப்படும் அநசூயை, கௌசலை, தேவகி, அருந்ததி முதலிய பெண்மணிகளுக்கு நிகரான விக்டோரியா மஹாராணியவர்களுடைய சந்ததியிலவதரித்த மன்னர்களால் நீதிமுறைதவறாதாளப்பட்டு நாம் குறையின்றி வாழ்வுபெற்று வருகின்றோமென்பது அனைவரும் நன்கறிந்ததல்லவா? இவ் வருடம் டிசம்பர்மீ 7உ அந்த விக்டோரியா சக்கரவர்த்தினியவர்களுடைய பௌத்திரரும், தருமமே உருவெடுத்தமைந்ததுபோல வுயர்ந்த பண்புகளெல்லாம் புனைந்துவிளங்கும் புண்ணியசீலருமான ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் நமது நாட்டிற்கு விஜயமாகி அந்தமாசம் 12உ நந்நாட்டின் பழமையான தலைநகரமாகிய டில்லிமாநகரில் எல்லோருங்கண்ணுற்றுக்களிக்க மகுடாபிஷேகஞ்செய்துகொண்டது நமது நாட்டினர் பல நூற்றாண்டுகளாகச்செய்துவந்த கோடி புண்ணியங்களின் பலனுக்குமேயன்றி வேறல்ல. பட்டாபிஷேககாலத்தில் டில்லியிற்கூடியமர்ந்த சிற்றரசர்கள், பிரபுக்கள், தனவான்கள், பின்னும் மற்றையோர்களும் அந்தப்பட்டாபிஷேக மகோற்சவ விமரிசையைக்கேட்டு மனங்களித்தவேனையோர்களும் அக்காலத்தில் அடைந்த ஆநந்தம் இத்தன்மையுடையதென்று இங்கு விவரித்துரைப்பது அசாத்தியமாகும். அந்தப்பட்

டாபிஷேகமகோற்சவமானது இனிமேலும் நம் நாட்டினர் மேன் மேலும் மகிழ்வுற்று வாழ்வார் என்பதற்கு ஓர் ஐயமற்ற சூசகமாக அமைந்திருக்கின்றது. அம்மகோற்சவகாலத்திற்குமுன் நம் நாட்டில் காலமாரியின்றி நாமொருவாறுகொண்டிருந்த பெருங்கவலையானது தீரும்வண்ணம் பரமேசுவரன் அச்சமயம் முதல் நம் நாட்டிற்குச் சுபிட்சமுண்டாகும்படி, ஏராளமாக மழைபெய்ய அநுக்கிரகஞ்செய்தது ஒரு முக்கியமான சகுனமாகும். இஃதன்றியும் அந்த உற்சவச்சிறப்பைக்கண்ணுற்று மகிழ்வதற்காக டில்லிமா நகரத்திற்குச்சென்ற பற்பலவரசர்களும், தனவான்களும் தேகசௌக்கியம் முதலியவெல்லாச் சௌகரியங்கட்கு மொருகுறைவுமின்றி அவரவர்களுடைய இருப்பிடங்கட்குச் சுபமாகத்திரும்பிவந்து சேர்ந்ததும் மற்றொரு சகுனம். தூரதேசமிருந்து கடுமையான கப்பல் யாத்திரைமூலமாக நமது நாட்டிற்கு வந்து நம்மைச்சிறப்புற வாழ்வித்த மஹாகனந்தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களும் மடந்தையர்க்கரசியாகிய மேரிச்சக்கரவர்த்தினியவர்களும் அவர்களுடன்வந்த மற்றைய சீமான்களும், சீமாட்டிகளும் ஒருவிதக்குறைவுமின்றித் தங்கணாட்டிற்குத் திரும்பிச்சென்றதும் மற்றொரு சகுனம். பலமுறையாக மனக்குறையுற்று நமது குறைகளெல்லாமெவ்வண்ணம் நிவிர்த்திக்கப்படுமென்று அளவற்ற கவலைகொண்டிருந்த நம் நாட்டினர்களை நமது சக்கரவர்த்தியவர்களும், சக்கரவர்த்தினியவர்களும் அன்புமழைபொழிந்ததுபோல் வசனித்தருளிய மொழிகளாலும், நிகரற்ற ஔதாரியத்தினாலும் இராஜாங்கத்தின் அபிவிருத்தியைக்கருதிச்செய்த பற்பலவேற்பாடுகளினாலும் மகிழ்வுபெறச்செய்தது வேறொரு சகுனம். பங்காளதேசத்தைப்பிரித்ததுமுதல் அருந்துயரங்கொண்டிருந்த அத்தேசத்தினருடைய மனோவியாதியை முற்றிலும் பரிகரித்து அவர்கட்கு ஒப்பற்ற சந்தோஷத்தையளிப்பதற்குக்காரணமாயிருந்த நமது சக்கரவர்த்தியினது கருணைப்பிரவாகத்தை நாம் என்னென்று விளம்பலாம். பரதவம்சத்திலுதித்த மன்னர் மன்னர்கள் முடிதரித்து வாழ்ந்த அஸ்தினபுரமாகிய டில்லி நகரமே நமது நாட்டிற்குப் பிரதான நகரமாயமைவது மிக்க பொருத்தமுள்ளதென்று அவர்களுடைய திருவுள்ளத்திற்றோன்றியது நம்முடைய அரிய பாக்கியமன்றோ; நமது நாட்டிற்கு அவர்கள் வந்த கணம்முதல்

அவர்கள் திரும்பிச்சென்ற காலத்திற்குள்ளாக நமது நன்மையை யும் க்ஷேமத்தையும் அன்புடன் கருதியியற்றியிருக்கும் பற்பலவே ற்பாடுகள் அவர்களைப் பரிதியுமதியுமுள்ளகாலமெல்லாம் நம் நாட்டி னர் மறக்காமல் கிருதக்ஞதையோடு விசுவாசத்துடன் பூசித்துவரு ம்படிசெய்திருக்கின்றன. இம் முறையாகக்கீர்த்தியென்னுங் கிரண த்தினால் குன்றாத பிரகாசமுற்று நாம் மனமுவந்து எக்காலமுங்கொ ண்டாடத்தகும் கருணைவள்ளல்களான நமது சக்கரவர்த்தியவர்கட் கும் சக்கரவர்த்தினியவர்கட்கும் பூர்ணமான ஆயுளையும் குறைவற்ற பாக்கியத்தையும் சந்தோஷத்தையும் அளித்து அவர்களை நன்கு பரிபாலித்துவரவேண்டுமென நாம் முக்கரணங்களாலும் எல்லாம்வல்ல கடவுளை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றனம்.

நமது சக்கரவர்த்தியவர்கள் பட்டாபிஷேககாலத்தில் நம்நாட் டினரெல்லோரும் கேட்டு மகிழ்வுறும்வண்ணம் அவர்கள் பிரசித்தப் படுத்தலான அன்புநிறைந்த விளம்பரம் அடியில் வருமாறு:—

பெருமைபொருந்திய மகாராஜ சக்கரவர்த்தியவர்களின் மகுடாபி ஷேக மஹோற்சவம் கொண்டாடினதை அவர்களுடைய இராஜ்ஜியங்க ளுக்குள் பிரசித்தப்படுத்துவதற்காக மகாராஜ சக்கரவர்த்தி அவர்களால் வெளியிடப்பட்ட இராஜ விளம்பரம்.

## ஜார்ஜ் மகாராஜ சக்கரவர்த்தி அவர்கள்.—

நமது அரசாட்சியின் முதல்வருஷமாகிய நமது கர்த்தருடைய ஆயிரத்துத்தொள்ளாயிரத்துப்பத்தாம் வருஷம் ஜூலைமாதம் பத்தொ ன்பதாம் தேதியும், நவம்பர்மாதம் ஏழாந்தேதியுமுள்ள நம்முடைய இராஜவிளம்பரங்களினாலே, ஆயிரத்துத்தொள்ளாயிரத்துப்பதினோ ராம் வருஷம் ஜூன்மாதம் இருபத்திரண்டாந்தேதியில் நமது இராஜ மகுடாபிஷேக மகோற்சவத்தை சர்வசக்தியுள்ள கடவுள் கிருபையி னாலும், ஆசிர்வாதத்தினாலும் கொண்டாடவேண்டுமென்னும் நமது இராஜ உத்தேசத்தை நாம் பிரசித்தப்படுத்தி அறிவித்தபடியாலும்;

சர்வசக்தியுள்ள கடவுள் கிருபையினாலும் ஆசிர்வாதத்தினாலும் சென்ற ஜூன்மாதம் இருபத்திரண்டாந்தேதி வியாழக்கிழமை க்ஷே மகோற்சவத்தை நாம் கொண்டாடக்கூடியவர்களாயிருந்தபடியாலும்;

நமது அரசாட்சியின் முதல்வருஷமாகிய நமது கர்த்தருடைய ஆயிரத்துத்தொள்ளாயிரத்துப்பதினோராம் வருஷம் மார்ச்சுமாதம் இருபத்திரண்டாந்தேதியுள்ள நம்முடைய இராஜவிளம்பரத்தினலே மேற்படி மகோற்சவமானது அந்தப்படி கொண்டாடப்பட்டதென்று நம்முடைய இந்திய ராஜ்ஜியங்களுக்குள் நம்மிடத்தில் அன்புபாராட்டும் எல்லாக்குடி ஜனங்களுக்கும் நாமே நேரில் பிரசித்தப்படுத்துவதும், நம்முடைய கவர்னர்களையும், லெப்டெனென்ட் கவர்னர்களையும், நம்முடைய மற்ற உத்தியோகஸ்தர்களையும், நமது சம்ரட்சணையிலிருக்கும் சுதேச இராஜ்ஜியங்களின் அரசர்களையும், அதிபதிகளையும், பிரபுக்களையும், நமது இந்தியா ராஜ்ஜியத்தைச்சேர்ந்த சகல மாகாணங்களின் பிரதிநிதிகளையும் நமது சந்நிதானத்துக்கு வரவழைப்பதும் நம்முடைய கோரிக்கையென்றும் விருப்பமென்றும் நாம் தெரிவித்தபடியாலும்;

நமது இந்த இராஜவிளம்பரத்தினல் நாம் இப்போது அதைப் பிரசித்தஞ்செய்து, நம்முடைய சகல உத்தியோகஸ்தர்களுக்கும் இப்போது டெல்லியில் கூடியிருக்கும் சகல அரசர்களுக்கும் அதிபதிகளுக்கும் பலவகையான ஜனங்களுக்கும் நாம் மகாராஜாவாகவும், சக்கரவர்த்தியாகவும் வாழ்த்துக் கூறி, நமது இந்திய இராஜ்ஜியத்தில் நாம் ஆழ்ந்த அன்புவைத்திருப்பதையும், அதன் க்ஷேமத்திலும் அபிவிருத்தியிலும் நாம் இடைவிடாமல் அக்கரைகொண்டவர்களாயிருப்பதையும், இனி எப்போதும் அப்படியேயிருந்துவருவதையும் அவர்களுக்கு உறுதியாய்ச்சொல்லுகிறோம்.

டெல்லியில் நமது இராஜசபையிலே நமது அரசாட்சியின் இரண்டாவது வருஷமாகிய ஆயிரத்துத்தொள்ளாயிரத்துப்பதினோராம் வருஷம் டிஸெம்பர்மாதம் பன்னிரண்டாந்தேதியில் கொடுக்கப்பட்டது.

மகாராஜ சக்கரவர்த்தி அவர்களைக்கடவுள்

ரக்ஷிப்பாராக.

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௧௦] விரோதிகிருது௵ கார்த்திகைமீ [பகுதி-௧

## தமிழ்வரலாறும் அதன் மகிமையும்.

உலகிலே தமிழின் றெய்வத்தன்மையும், பழமையும், பெருமையும் அதினிலக்கிய விலக்கண சாத்திரமுதலிய நூல்களின் மரபினையும், உள்ளவாறு நன்குணராதார்சிலர் தம்மறிவிற்குத் தோன்றியவாறு முறைபிறழவெழுதி வெளியிடுதலானும், அவருரைகளிலேமெய்ம்மையனவிவை பொய்ம்மையனவிவையெனத் தேறமாட்டாதார் அவருரைத்தனவெல்லா மெய்ம்மையனவாகக்கொண்டு தாமுமவ்வாறே யுரைக்கின்றாராதலானும், அறிவுடையோருண்மைதெரிந்து பயன்பெறுமாறு இங்கே கூறத்தொடங்கினேம். "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்-மெய்ப்பொருள் காண்ப தறிவு".

ஆதியிலே ஆரியமுந்தமிழும் பரமதயாநிதியாகிய சிவபிரானா லுண்டாக்கப்பட்டன; இவ் விரண்டுஞ் சிவபிரானா லுண்டாக்கப்பட்டனவென்பதற்குச் சிற்றறிவுடைய மனிதர் முதலாயினோரறிவினா லியற்றமுடியாத வேதாகமமுதலிய நூல்களே சான்றாகும்.

தமிழ் சிவபிரானா லுண்டாக்கப்பட்டதென்பதற்குத் திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் அச்சிறுபாக்கப்பதிகத்தில் "மைமலர்க்கோதை மார்பினரெனவு மலைமகளவளொடு மருவினரெனவுஞ், செம்மலர்ப்பிறையுஞ் சிறையணிபுனலுஞ் சென்னிமேலுடையரெஞ் சென்னிமேலுறைவார், தம்மலரடியொன்றடியவர் பரவத்தமிழ்ச்சொ

லும் வடசொலுந்தாணிழற்சேர, வம்மலர்க்கொன்றையணிந்த வெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே" எனக் கூறியிருத்தலானும், "முத்தமிழு நான்மறையுமானன் கண்டாய்" எனத் திருநாவுக்கரசு நாயனுர் தேவாரத்தினும், திருமூலநாயனுர் திருமந்திரத்தில், ஆகமச்சிறப்பில், "மாரியுங்கோடையும் வார்பனிதூங்கநின், றேரியுநின்றங்கிளைக்கின்றகாலத்து, வாரியமுந்தமிழும் முடனேசொல்லிக், காரிகையார்க்குங் கருணைசெய்தானே" எனக் கூறியிருத்தலானுங் காண்க. ஏரிஎன்றது கடலை. காரிகையாரென்றது-உமாதேவியாரை.

இவ்விரண்டு பாஷைமாத்திரமோ பதினெண் பாஷையுஞ் சிவபிரானுலுண்டாக்கப்பட்டனவென்று அத் திருமந்திரத்திலாகமச்சிறப்பில், "பண்டிதராவார் பதினெட்டுப்பாடையும்.....அண்டமுதலானரன் சொன்னவாறே" எனக்கூறியிருத்தலுங் காண்க.

இவ் விருமொழியையு நந்திபெருமான் அகத்தியமுனிவர் முதலாயினுர்க்குக் கருணைசெய்துரைத் தருளியவாறன்றி, அவரினுமேம்பாடுடைய வுமாதேவியார்க்குங் கருணைசெய் துரைத்தருளினுரென்பதுதோன்றக் காரிகையார்க்கும் என உம்மைகொடுத்துக் கூறினுரென்க. பெரியபுராணந் திருக்குறிப்புத் தொண்டநாயனுர் புராணத்தில், "வெள்ளிமால்வரைக் கைலையில் வீற்றிருந்தருளித் - துள்ளுவார்புனல் வேணியாரருள்செயத்தொழுது - தெள்ளுவாய்மையினுகமத் திறனெலாந்தெளிய - வுள்ளவாறு கேட்டருளினுளுலகையாளுடையாள்" எனக் கூறியிருத்தலானுங் காண்க.

ஆயின், நந்திபெருமான் முதலாயினேர் தமக்குச் சிவபிரானுபதேசித்தருளியவாறே * அநேக மாணுக்கருக்கெல்லா நூல்களையுமுபதேசிப்பதற்கு ஆசிரியத் தலைமையுற்றிருந்தது போலவே வேணையோரு மாசிரியத்தலைமை பூண்டிருந்தனரோவெனின்? "திருமாலிந்திரன்பிரமனுபமனியன்றபனனந்திசெவ்வேளாதி - தருமமுதுகுரவ

---

* நந்திபெருமான் மாணுக்கராவார் - சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனுதனர், சிவயோகமுனிவர், பதஞ்சலிமாமுனி, வியாக்கிர பாதமாமுனி, திருமூலர் இவ் வெண்மருமாம். இவர்வழியிற் சந்தானமும், ஆதீனமும் பலவாயின. இவ் விவாத்தை ஞானமிர்தத்திற் காண்க.

ருக்குந்தன தருளாலாசிரியத் தலைமைநல்கி - வருமெவர்க்குமுதற்குரு வாய்மெய்ஞ்ஞானமுத்திரைக்கைமலரும்வாய்ந்த - வுருவழகுங்குறுநகையுங்காட்டியருடருஞ்சிவனையுளத்தில்வைப்பாம்” எனச் சிவதத்துவ விவேகத்திற் கூறியவாறு திருமால்முதலாயினோருமாசிரியத் தலைமை பூண்டிருந்தனரென்க.

இனி ஆரியமொழி தமிழ்மொழி யிரண்டுந் தம்முட் சமத்துவமுடையனவாய் வழங்கிய தெய்வமொழியென்பதனை, “இருமொழிக்குங்கண்ணுதலார்முதற்குரவரியல்வாய்ப்ப - விருமொழியும் வழிப்படுத்தார்முனிவேந்தரிசைபரப்பு - மிருமொழியுமான்றவரேதழீஇயினாரென்றாலிவ் - விருமொழியு நிகரென்னு மிதற்கையமுளதேயோ.” “வடமொழியைப்பாணினிக்குவகுத்தருளியதற்கிணையாத் - தொடர்புடையதென்மொழியையுலகமெலாந்தொழுதேத்துங் - குடமுனிக்குவலியுறுத்தார்கொல்லேற்றுப்பாகரெனிற் - கடல்வரைப்பினிதன்பெருமையாவரேகணித்தறிவார்” எனக் காந்தத்திற் காளிகா கண்டத்திற் கூறியவாறு காஞ்சிப்புராணத்திற் கூறியதனாற் காண்க.

இவ் விருமொழிநூல்களாலுணர்த்தும் ஞானத்தால் இறைவனையடையலாமென்பதனை, “தமிழ்ச்சொல் வடசொல்லென்னு மிவ்விரண்டு-முணர்த்துமவனை யுணர்தலுமாமே” எனத் திருமந்திரத்தில் ஆகமச்சிறப்பிற் கூறியதனாற்காண்க.

இவ் விருமொழியு முலகமெங்குந் தொன்றுதொட்டு வழங்கியிருந்தனவாயினும், உலகில் வடபாகத்திலே ஆரியமொழிப் பயிற்சி மிகுதியாயுந், தென்பாகத்திலே தமிழ்மொழிப்பயிற்சி மிகுதியாயுமிருத்தலினால் இவற்றை வடமொழியென்றுந் தென்மொழியென்றும்வழங்குவராயினர்; இக் காரணத்தானு மொன்றற்கொன்றெதிரியதாய்ச் சமத்துவமுடைமை காண்க.

“கண்ணிற்சிறந்த வுறுப்பில்லை” என்றபடி ஒருவனுக்குக் கண்களிரண்டுமே எல்லாவுறுப்புக்களினுஞ் சிறப்பாயிருத்தல் போலப் பதினெண்பாடைகளில் ஆரியமுந் தமிழுமே சிவபிரானுக்குச் சிறப்புற்ற மொழிகளென்க. இக் கருத்தைப்பற்றி ஆதிகாலத்திலே சிவபி

ரான் பாஷைகளையுண்டாக்கும்போது முதலிலே "ஆரியமுந் தமிழும் முடனே சொலி" என்று பிரித்தும் "பதினெட்டுப் பாடையும்" என்று பின்பு கூட்டியுந் திருமந்திரத்திற் கூறியிருத்தல் காண்க.

இத் தமிழ்மொழி ஆதிகாலந்தொடங்கிப் பயின்றிருத்தல் போலவே விந்தமலை இமயமலைவரை தமிழர்கள் பயின்றிருந்தாரென்பர். இதன் விவரத்தைச் செந்தமிழ்ப் பத்திரிகை ஏழாந்தொகுதி யெட்டாந்தொகுதிகளிற் றமிழ்ப்பழஞ்சரிதமென்பதனுட் காண்க; இவ்வாறன்றிச், சேரமான் பெருமாணாயனார் பொன்வண்ணத் தந்தாதியும், ஞானவுலாவும் இயற்றியருளித் திருக்கைலாயமலையிற் சிவபிரான்றிருச்சபையில் அரங்கேற்றியதனால் திருக்கைலை வரையினுஞ் சென்று நின்று நிலவியுலாவியதென்பதுங் காண்க.

இன்னுமித் தமிழ்மொழி ஆதிகாலத்தி லிறைவனாலுண்டாக்கப் பட்டுத் தெய்வத்தமிழாய் என்றுநிலவிய மொழியென்பதனைப், பெரியபுராணம் மூர்த்திநாயனார் புராணத்தில், "ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழென்றார்; கம்பரும், அகத்தியப் படலத்தில் "தழற்புரை சுடர்க்கடவுடந்த தமிழ்தந்தான்" என்றும், "என்றுமுளதென்றமிழியம்பியிசைகொண்டான்" என்றுங் கூறியிருத்தல் காண்க.

ஆயின், பாஷை பதினெட்டெனக் கூறியதென்னை? பிரயோக விவேகநூலார் பாஷைபத்தொன்பதென்றும், அவற்றுள்ளே ஆரியமொழி தெய்வமொழியென்றுந், தமிழ் திசைச்சொல்லென்றுங்கூறினரே யெனின்? அவ்வாறு கூறுதல் பொருந்தாது. என்னை? ஆரியந் தமிழென்னு மிரண்டின் சிறப்புடைமைநோக்கி அவற்றைச்சிவபிரானாதிகாலத்தி லுமாதேவிக் குபதேசித்தாரென்றும், அச் சிறப்பின்மைநோக்கி யேனைய பாஷைகளைப் பின்னர்க் கூறியருளினாரென்பது தோன்ற அவ் விருமொழியுடன் ஏனையபாஷைகளையுஞ் சேர்த்துப் பதினெண் பாஷையுஞ் சிவபிரானுரைத்தருளினாரென்றுந் திருமந்திரத்துக் கூறுதலானும், அவ் விருமொழியையும் முனிவேந்தர்கள் வழிப்படுத்தாரென்றும், ஆன்றோர்களே தழுவிக்கொண்டாரென்றும், ஆரியமொழி பிராகிருத முதலிய பாடைகளுக்கு மூலமாகவிளங்கி யுலகில் வடபாகத்திற் பயிற்சி மிகுதியாயிருத்தலின் வடசொல்,

வடமொழியெனப் பெயர்பெற்றிருத்தலானும், தமிழ் ஆந்திரம், கன்னடம், கேரளம், துளுவமுதலிய பாடைகளுக்கு மூலமாயுலகிற் றென்பாகத்திற் பயிற்சி மிகுதியாயிருத்தலிற் றென்சொல், தென்மொழியெனப் பெயர்பெற்றிருத்தலானும், பிறவாற்றானு மித்தகைய பெருமைவாய்ந் தொன்றற்கொன்று சமத்துவமுடையதா யென்றுநிலவிய மொழியென்பது வெள்ளிடை மலைபோல விளங்கவிருத்தலையுணர்ந்தும், நடுவுநிலை விளங்கக்கூறாது, ஆரியத்தைத் தெய்வமொழியென்றுந் தமிழைத்திசைச்சொற்பதினேழுடன்சேர்த்துப்பதினெட்டென்றுங் கூறுதல் சுருதியுத்தியநுபவங்கட்கு மாறுபடுதலால் வாரபக்கமாகக் கூறிய மயக்கவுரையேயா மென்க. இவ் வுண்மையைத் திராவிடப் பிரகாசிகையிற் காண்க.

இன்னுந் திருமந்திரத்தில், "பண்டிதராவார்பதினெட்டுப்பாடையு" மென்றும், இராமாயணம் பம்பைப்படலத்தில், "ஆரியமுதலியபதினெண்பாடையிற் - பூரியரொருவழிபுகுந்தபோன்றன" என்றும், திருவிளையாடற்புராணம் நகரப்படலத்தில், "பதினெண்டேயமாந்தருங்கிளர்ந்தசொற்றிரட்சிதான்" என்றும், இவ்வாறு பலவான்றோருங் கூறியிருத்தலாற் பாஷை பதினெட்டேயென்பது நன்கு புலப்படுதல் காண்க.

இனி, இலக்கணக்கொத்துடையாரும், "பத்தோடொன்பது பாடைநூல்களும்" என்றும், "ஐந்தெழுத்தாலொருபாடை" யென்றுங் கூறினரெனின்? அந்நூலாரும் பிரயோகவிவேகநூலாருமொரேகாலத்துப் பயிற்சியுற்றிருந்தவராதலால் அவருரைத்தவாறு தாமுமுரைத்தனரென விடுக்க.

இனித், திசைச்சொற்களாவன, "செந்தமிழ்சேர்ந்த பன்னிருநிலத்துந் - தங்குறிப்பினவேதிசைச்சொற்கிளவி" யெனத் தொல்காப்பிய மெச்சவியலிற் கூறியதனாற் காண்க. பன்னிருநிலமாவன:—பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டி, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை எனத் தென்கிழ்பான் முதலாக வடகீழ்பாலீறாகவுள வென்பர்; இப் பன்னிரண்டையுஞ் சூழ்ந்து வேறு பன்னிரண்டு நிலமுண்

டென்பர்; அவை சிங்களம், பழந்தீவு, கொல்லம், கூபம், கொங்கணம், துளுவம், குடகம், கருநடம், குட்டம், வடுகு, தெலுங்கு, கலிங்கமென்பனவாம். இத் திசைச்சொற்களும், வடசொற்களும் பிற்காலத்துச் செந்தமிழ் மொழியோடு அருகிவழங்கப்பட்டு வந்தன.

இனி, நன்னூலார் "ஒன்பதிற்றிரண்டினிற்றமிழொழிநிலத்தினுந் - தங்குறிப்பினவேதிசைச்சொல்லென்ப" எனத் தமிழொழிந்த பதினேழ் நிலத்து மொழியினையுந்திசைச்சொல்லெனக் கூறினரேயெனின்? அவ்வாறு ஆசிரியர் தொல்காப்பியனாரும் உரையாசிரியர் முதலாயினோருங் கூறாமையால் நம்மனோர்க் குடம்பாடன்றென்க.

இனிப், பிரயோகவிவேகநூலார் திரமிளம் என்னுமாரியமொழி தமிழ்எனத் திரிந்துவந்தது எனக்கூறினாரா லெனின்? அது பொருந்தாது. என்னை? எல்லா முதன்மையு முற்றுணர்ச்சியுமுடைய இறைவன் இத் தமிழை ஆதிக்கண்ணே தோற்றுவித்தபோது தன் சொல்லாற் பெயரிடுதற்கு முடியாமைகருதிப் பிறபாடை மொழியெடுத்துத் திரிவுபடுத்திப் பெயரிட்டானென்றல் அசம்பவமாய் முடியுமல்லது உண்மையாகாதென்க.

தமிழ் என்பதனை வழங்கவேண்டி ஆரியத்துள்ளே திரமிளம் எனத் திரித்துக்கொண்டுரைத்தாரென்பர் சிலர்.

மற்றென்னையோ தமிழ் என்னுஞ் சொற்குப் பொருளென்னில்? இளமையினையுணர்த்தும் முருகு என்னுந் தருமவாசகம் முருகன் என்னுந் தருமியின்மேனின்றவாறுபோல, இனிமைப்பண்பை யுணர்த்துந் தமிழ் என்னுந் தருமவாசகந் தருமியாகிய பாஷையின்மேனின்றதென்க. முருகு என்பது இளமைப்பண்பை யுணர்த்துதலை "முருகு கள்ளிளமைநாற்றமுருகவேள்விழாவனப்பாம்" எனச்சூடாமணிநிகண்டு பதினோராவதினும், "முருகெனமொழியுமாயின்" என்ற ஐங்குறுநூற்றுள் உசஎ-ம் செய்யுளானும், தமிழ்என்பது இனிமையையுணர்த்துதலை "தமிழென்பதினிமை நீர்மை" எனச் சூடாமணி நிகண்டு பதினொராவதினும், "தன்பாற்றழுவுங்குழல் வண்டுதமிழ்ப்பாட்டிசைக்குந்தாமரையே" என இராமாயணங் கிஷ்

கிந்தா காண்டம் பம்பைப்படலத்தினும், தமிழ் தழுவிய சாயலவர் என்பதற்குச் சிந்தாமணியில் நச்சினார்க்கினியருரையினுங் காண்க.

வீரசோழியப் பதிப்புரைகாரருந் தனிமைப்பொருள் குறித்த தமியென்னும் வினையடி வினைமுதற்பொருள் குறிக்கும் விகுதிகுன்றி ழகரம் விரிந்துநின்றது எனக்கூறி வழுவிப்போயினர். வினைமுதற் பொருண்மையுணர்த்தும் அலரி, பறவை, எச்சம், காய், தளிர் முதலிய பதங்களநேக முள்ளன; அவற்றிலொன்றேனும் இவ்வாறு விகுதிகுன்றி ழகரவொற்றுப் பெற்றாயினும் வேறொற்றுப் பெற்றாயினு நின்று வழங்கிவரு மொழியைக் காணவில்லை. இன்னுமவர் கூறிய வழுவுரையெல்லாந் திராவிடப் பிரகாசிகையிற் காண்க.

இனித், தமிழ் என்பது ஒருமொழியெனவுந், தென்மொழி யென்பது அடையடுத்து நின்ற தொடர்மொழியெனவுங் கொள்க. ஈண்டுத் தென் என்பது இசை, அழகு எனப்பொருள்கொள்க.

தென் என்பது வடமொழி என்பதிலேயுள்ள அடைமொழி போலத் திசைகுறித்து நின்றதன்றோவெனின்? ஆரியமொழி தென்னாட்டினும் வழங்குதலால் அதனைத் தென்னாட்டவராகிய தமிழர்வடசொல் எனக்கூறுவர்; அங்ஙனம் வடநாட்டினுந் தமிழ்வழங்குதலால் அதனைக்கண்ட வடநாட்டார் தக்ஷிணபாஷையெனத் தம் மொழியினாற் பெயர் கூறுவரன்றித் தமிழினாற் றென்மொழி எனப் பெயர் கூறுவது பொருந்தாதென்க; தென்னாட்டவருந் தமிழெல்லைக் குளிருந்துகொண்டு அவ்வடைமொழிக்குத் திசைப்பொருள் குறித்துத் தென்மொழி எனப் பெயர்கூறுதலும் பொருந்தாதென்க.

இனித், தென்னாட்டவர் வடநாட்டிற் சென்று பயிலுங்காலத்தில் ஆரியந் தமிழிரண்டும் பயின்ற வடநாட்டாருக்குத் தென்னாட்டவர் யாமிருப்பதுந் தென்னாடு, யாம்பயிலுமொழியுந் தென்மொழியெனவுரையாடுங் காலத்துத் திசைப்பொருள் குறித்து வருமெனக் கொள்க. அன்றி வடமொழி தென்மொழி என ஒன்றுடன் மற்றொன்றை யெதிராகக்கொண்டுகூறி யுரையாடுங்காலத்துந் திசைப்பொருள் குறித்துவருமென்க. இவ்வாறன்றித் தனித்துக் கூறுங்கால் தென்மொழி என்பதற்கு அழகுடையமொழி, இசையுடைய மொழி எனவே பொருளாமென்க.

இத் தமிழ்மொழி விந்தம் இமயமுதலிய வெங்கும் வழங்கிய மொழியாயினும், மிகுதியாய் வழங்கிய தமிழ்ப்பொதுவெல்லை தொல்காப்பியமுனிவர் காலத்து "வடவேங்கடந் தென்குமரி - யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து" எனக் கூறப்படுதலால் வடக்கே வேங்கடமுந் தெற்கே குமரியாறு முள்ளிட்டநாடுகளெல்லாமென்க. பிற்காலத்துக் குமரியாற்றைக் கடல்கொண்டது; அதனுடன் நாற்பத்தொன்பது நாட்டையுங்கொண்டது.

செந்தமிழின் சிறப்பெல்லையாவது சோணாடென்றுஞ், சேர சோழ பாண்டியருடைய மூன்றுநாடுமே யென்றுங் கூறுவராயினும், நன்னூல் விருத்தியுரையிலே, "சந்தனப்பொதியச்செந்தமிழ்முனியுஞ் - சௌந்தரபாண்டியனெனுந்தமிழ்நாடனுஞ் - சங்கப்புலவருந் தழைத்தினிதிருக்கு - மங்கலப்பாண்டிவளநாடென்ப" எனக்கூறுதலானுஞ், சிவபிரானு முருகவேளுஞ் சங்கப்புலவராயிருந்து தமிழாராய்ந்தமையானுஞ், சிவபிரான், உமாதேவியார், முருகவேளாகிய மூவரும் அரசாட்சிசெய்திருந்தமையானும், "உயர்மதிற்கூடலினாய்ந்த வொண்டீந்தமிழின் - றுறைவாய்நுழைந்தனையோ" எனத் திருக்கோவையாரிற் கூறியதனானும், "மும்மைப்புவனங்களின்மிக்கதன்றேயம்மூதூர்............எம்மைப்பவந்தீர்ப்பவர்சங்கமிருந்ததென்றால்" எனப்பெரியபுராணம் மூர்த்திநாயனார் புராணத்திற் கூறியதனானும், "அத்திருத்தகுநாட்டினையண்டர்நா - டொத்திருக்குமென்றுலுரையொக்குமோ - வெத்திறத்தினுமேழுலகும்புகழ் - முத்துமுத்தமிழுந்தந்துமுற்றலால்" என இராமாயணங் கிஷ்கிந்தா காண்டத்திற் கூறியதனானும், பாண்டிவளநாடே அவற்றுள்ளே சிறந்த செந்தமிழ் வழங்குஞ் சிறப்பெல்லையாயிருந்த தென்பதற் கையமின்றென்க.

இனி, அகத்தியமகாமுனிவர் தென்னாட்டிற்கு வந்து தமிழைப் பரவச்செய்ததனாலே தமிழுண்டாய் விருத்தியாயினதென்பர்; அது பொய்ம்மொழியேயாம். அம் முனிவர் தென்னாட்டிற்கு வருவதற்கு முன்பே சிவபிரான் ஆதியிலே யுலகத்தைத் தோற்றுவிக்குங்காலத்தே ஆரிய மொழியையும் தமிழ் மொழியையுந்தோற்றுவித்தாரென்பதும், இருமொழியையும் உமாதேவியார்க்குக் கூறியருளினாரென்பதும், பின்னரேனைய மொழியையுந்தோற்றுவித்தாரென்பதும், இரு

மொழியையு மிரண்டுமுனிவர்க்குங் கூறியருளினரென்பதும் முற் கூறப்பட்டிருக்கின்றன.

அகத்தியமாமுனிவர் காசியிலிருந்து தவம்புரிந்து வசித்திருக் கின்றகாலையில், விந்தமலை விண்ணுறவோங்கி வளர்ந்து நின்றது; அதனாலுலகிற்குக் கேடுற்றமை நோக்கி வியாசமுனிவர் முதலாய தேவர்கள் பிரமனிடஞ்சென்றுரைப்ப அப் பிரமன் அவருடன் காசிக்குவந்து அகத்தியமாமுனிவரிடந் தெரிவித்து விந்தவரையின் வீற டக்குமாறு கூற அம் முனிவரெழுந்துவந்து விந்தவரையைப் பூமியி லழுத்திவிட்டுக் காஞ்சிபுரத்துக்குவந்து ஏகம்பநாதரை வழிபட்டுப் பல வரம்பெற்று அடியேன் கருத்து வேட்கையாலொழியாது மேன்மேலெழுகின்றதொன்று அதனையருள்புரியவேண்டும் அஃது யாதோவெனில்? "எவ்வினையுமோப்புதலாற்றிராவிடமென்றியல் பாடை - யெவ்வமறப்புதிதாகயான்வகுப்பநல்கியது - வெவ்வருண த்துள்ளார்க்குமெளிதாகப்புத்தேளி - ரெவ்வெவர்க்குஞ்சுவையமிழ் தினினிதாகச்செய்தருளாய்." எவ்வகைப்பட்ட வினைகளையுமோட் டுதலாலே திராவிடமென்று நாமம்பெற்றுப் பழையதாகி நடக்கி ன்ற பாஷையைப் பின்னர்ப் புதுக்கிப் புதியதாக யானுலகத்திற் குபகரிக்கத் தேவரீரருளியது எல்லா வருணத்தார்க்கு மிலேசாக வும், தேவர்கள் யாவர்க்குஞ்சுவை யமிழ்தினுமினியதாகவுஞ் செய் தருளவேண்டுமென்றும், இன்னுந் தமிழ்ப்பாஷைத் துதிகொண் டுன்னைப் பரவுவார்க்கு இங்கே கேட்ட வரமெல்லாங் கொடுத்தரு ளவேண்டுமென்றும் வரம்பெற்றுத், தமிழை விருத்திசெய்தங்கிருக் கும்போது, இமயமலையிலே சிவபிரான் உமாதேவியாரைத் திரு மணஞ்செய்யத் தொடங்கினர்; அப்போது அகத்தியமகாமுனிவரும் அத்திருக்காட்சி காணும்படியாக இமயமலைக்குச் சென்றாரென்று காந்தங் காளிகாகண்டஞ் சனற்குமாரசங்கிதையிற்கூறியபடி காஞ் சிப்புராணத்திற் கூறியிருக்கிறது; இதனானும் அகத்திய மகாமுனி வர் தென்னாட்டிற்கு வருவதற்குமுன்னே தமிழ்ப்பாஷையுள்ளதென் பது தெள்ளிதின் விளங்குதல் காண்க.

இனி, அத் திருமணக்காட்சி காணும்பொருட்டாகத் தேவர்முத லாயினர் யாவரும் இமயமலையிற் கூடியிருக்கும்போது வடதிசை தா

ழ்ந்தது, தென்றிசையுயர்ந்தது ; அக்காலையிலே சிவபிரானைத் தேவர் முதலாயினோர் வேண்டிக்கொள்ளச், சிவபிரான் உலகைச் சமன்செய் தற்கு நமக்குச்சமானமுள்ளோர் இங்கே குறுமுனியன்றி வேறொரு வருமில்லையெனத் திருவாய்மலர்ந்து, அம்முனிவரை யழைத்துத் தென்றிசையிற் சென்றிருக்குமாறு கட்டளையிட்டருளினார் ; அப் பொழுது விடைபெற்றுக்கொண்டு போகுமுனிவர், "விடைகொடு போவானென்றைவேண்டி னானேகுந்தேயந் - தொடைபெறுதமிழ்நா டென்றுசொல்லுபவந்தநாட்டி - னிடைபயின்மாந்தரெல்லாமின் றமிழாய்ந்துசெவ்வி - யுடையவரென்பகேட்டார்க்குத்தரமுரைக்கல் வேண்டும்." என ஆலாசியமான்மியமாகிய திருவிளையாடற்புராணங் கீரனுக்கிலக்கணமுபதேசித்த படலத்திற்கூறியபடி, அடியேன் செல் லுந்தேசந் தமிழ்நாடாயிருக்கின்றது ; அங்கேயுள்ளாரெல்லாந் தமி ழையாராய்ந்து சிறப்புடையராயிருக்கின்றார்கள் கேட்டவர்க்குத்த ரஞ் சொல்லல்வேண்டும் ; ஆதலாலடியேனுக்கிலக்கணமுதலிய நூல் களை ஐயாற இன்னுமுபதேசித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்யச் சிவபிரான்றாமியற்றிய செந்தமிழிலக்கண முதலிய நூல் களை அவரையந்தீர வுபதேசித்தருளினாரென் றிருத்தலானும், சந்த புராணத்து மிவ்வாறு கூறுதலானும், அம்முனிவர் தென்னாட்டிற்கு வருவதற்குமுன்னரே தமிழ்மொழிநூல்கள் நன்காக வழங்கியிருந் தனவென்பது வெள்ளிடைமலைபோல விளங்குகின்றது.

இன்னும், அம்முனிவர் வேங்கடமலையில்வந்து முருகக்கடவுளைத் தரிசித்து இலக்கணமுதலிய நூல்களிற் பின்புமுண்டாகிய ஐயநீங்க வுபதேசித்தருளுமாறு வேண்ட, அம்முருகக்கடவுள் உபதேசித்தரு ளினாரென்று பழனித் தலபுராணத்திற் கூறுதலானுஞ், சிவதரு மோத்திரமுதலிய நூல்களினுங் கூறியிருத்தலானுந், தொல்காப்பி யப் பாயிர விருத்தியிலும் "வடவேங்கடம்" "என்று முதலிற்கூறி யது அகத்தியமாமுனிவருக்குச் செந்தமிழையறிவுறுத்திய பரமாசா ரியன் வரைப்பாதலாற் காலையோதுவார்க்கு நன்மையுண்டாகவேண் டி" எனக்கூறியிருத்தலானும் அம் முனிவர் வருவதற்குமுன்பே தென்னாட்டிற் றமிழ்மொழி வழங்கியிருந்ததென்பது விளங்குகின் றது.

இன்னும், பாண்டியர் சோழர் சேரர்கள் சந்திரன் முதலியோர் வம்சத்தவராதலானும், இவர்கள் தமிழரசரென்பதற்கையமில்லையா தலானு மிவர்கள் நாடுண்டாயகாலத்தே தமிழுண்டாயிருந்ததென்ப தற் கையமில்லையென்க. துவாபரயுகமாகிய பிற்காலத்திலும் பெரு ஞ்சோற் றுதியனென்னுஞ் சேரன் பாண்டவர் சேனைகளுக்கு அன்ன மிட்டதாகவும், ஒரு பாண்டியன் மகளை அருச்சுனன் விவாகஞ்செய்த தாகவும் முறையே புறநானூற்றிலும் மகாபாரதத்திலுங் கூறப்பட் டுள்ளன.

இங்ஙனமாதலால் அகத்திய மகாமுனிவருக்குச் சிவபிரானுப தேசிப்பதற்கு முன் உமாதேவியார் முருகக்கடவுண் முதலியோர்க் குபதேசித்திருப்பதனாற் சிவபிரானாலே இயலிசைநாடகமுதலிய வெ ல்லாந் தமிழிலுண்டாகி யுலகில் விளங்கியிருந்தனவென்பது வெளி யாகுகின்றது; பின் குமரக்கடவுளும், அகத்தியருக்குபதேசிப்பத ற்கு முன் குமரம் என்னுமிலக்கணமுதலிய நூல்கள் செய்தாரென் றுங் கூறுவர்.

ஆயின், அகத்தியமகாமுனிவருக்குச் சிவபிரானுரைத்தருளிய இலக்கணமுதலிய நூல்கள் யாவையெனில்? "வடமொழிக்கியல்பா ணினிமகாமுனிக்குத் - திடமுறநன் குதெரித்தமைபோல - விந்தமும் வேலையும்வீறுபோய்க்குன்றக் - கந்தமென்கமலக்கரத்தினைவிதிர்த்த- வருந்தவக்கொள்கையகத்தியமுனிக்குத் - திருந்திசைநுணுக்கச்செந் தமிழியலினைச் -செப்பினன்" எனத் தாண்டவராயசுவாமிகளிலியற் றிய வாக்கால் இலக்கணநூல் இசைநுணுக்கமெனத் தெரிகின்றது; இன்னும் வேறுநூலாயினுமாகுக; சிவபிரான் முமேயுண்டாக்கிய இலக்கணமுதலிய நூல்களை யுபதேசித்தருளினாரென்பதற் கையமி ல்லை. இவ் விசைநுணுக்கமும் வேறே, சங்கத்தார் காலத்து அவராய் ந்த இசைநுணுக்கமும் வேறேயென்பர். சிவபிரானுண்டாக்கியுபதே சித்தருளிய நூல்களெல்லாஞ் சின்னாட்பல்பிணிச் சிற்றறிவினார்க்குக் கற்க இயலாமையாற் காலாந்தரத்தின் மறைந்துபோயின.

இம் முனிவர் இசைமுதலிய நூல்களுமுபதேசஞ் செய்யப்பெற்று வல்லராய்வந்தாரென்பதனை அவர் வருங்காலத்து இராவணன் முத லிய அரக்கர் தமிழ்நாட்டை யாண்டிருக்கக்கண்டு அவ் விராவணனைக் கந்தருவத்தாற் செயித்துப் பிணித்துத் தமிழ்நாட்டைத் தம்வய

மாக்கியிருந்தாரெனக் கூறியிருக்கின்றது; இதனை "இடுசிலைபார் புரக்குந்தஞ்சைவாணனிசைக் குருகப் - படுசிலை" யென்ற தஞ்சைவாணன்கோவை ௬௨-ம் செய்யுளானும் திருநெல்வேலித்தல புராணத்தானுமுணர்க. இவ்வாறு தொல்காப்பியப் பாயிரத்தில் நச்சினார்க்கினியாருரையினுங் காண்க.

இன்னுமவர்வருங்காலத்துத் துவாரகையில்வந்து பலவரசர்களை யழைத்துக்கொண்டுவந்து சிலவிடங்களைத் திருத்தஞ்செய்து நன்னாடாக்கி யாளவைத்தாரென அப்பாயிரவுரையிற் கூறினர். அதுபோலவே விரிந்துகிடந்த தமிழ்நூல்களைச் சுருக்கித் திருத்தஞ்செய்து சின்னாட்பல்பிணிச் சிற்றறிவினோரெளிதினுணருமாறு முத்தமிழும் விளங்கிய அகத்தியமென்னுநூலுஞ், சோதிடம், வைத்தியஞ், சிற்பமுதலாய பலவகைநூலுஞ் செய்தருளித், தொல்காப்பியமுனிவர் முதலிய பன்னிருமாணாக்கர்க்குங் கற்பித்தருளிப் பொதிகையில் வீற்றிருந்தார். பன்னிருவராவார், "தொல்காப்பியனதங்கோட்டு முனிதுராலிங்கமுனி - மல்துசெம்பூட்சேய்வையாபிகன்வாய்ப்பியன்வாமனனூல் - வல்பனம்பாரன்கழாரம்பன்மாட்சியவிநயனே - வெல்காக்கைபாடினிபன்னுபர்நத்தத்தன்மேலவரே" எனக்கூறியவராம். இவர்களுந் தனித்தனியே யிலக்கணமுதலிய நூல்களைச்செய்திருக்கின்றார்கள். அகத்தியத்தினுள்ள இயற்றமிழை வேறுபிரித்து வழிப்படுத்தார் தொல்காப்பியமுனிவர் முதலாயினோர். இசைத்தமிழை வேறுபிரித்து வழிப்படுத்தார் பெருநாரை, பெருங்குருகு முதலிய நூலுடையார். நாடகத்தமிழை வேறுபிரித்து வழிப்படுத்தார் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் முதலிய நூலுடையார்.

வியாசமகாமுனிவர், தொல்காப்பியமுனிவர்தொல்காப்பியஞ் செய்தபின்பு சின்னாட்பல்பிணிச் சிற்றறிவினோர் எளிதினுணருமாறு, விரிந்துமுறைபிறழ்ந் திருந்த தைத்திரியமும், பௌடிகமுந், தலவாகாரமுஞ், சாமமுமெனப் பெயர்பெற்ற நான்குவேதங்களையுஞ் சுருக்கி யொழுங்குபடுத்தி இருக்கும், யசுவுஞ், சாமமும், அதர்வணமுமென நான்கு கூறாக்கியும், புராணமுதலிய வேனைய நூல்களையுமவ்வாறாக்கியும் வைத்தமைபோல அகத்தியமாமுனிவர் முதலாயினார் காலந்தோறுமாராய்ந்து அங்ஙனஞ்செய்தாரெனக் கொள்க. வியாசமா

முனிவர் அங்ஙனஞ்செய்தாரென்பதனை நச்சினார்க்கினியருரையாலறிக. இவராலே சம்ஸ்கிருதமென்னும் பெயருண்டாயிற்றென்பர். சம்ஸ்கிருதம் என்பதற்கு நன்றாகச்செய்யப்பட்டது என்பது பொருளாம்.

நம்மனோர்போலச் சின்னாட் பல்பிணிச்சிற்றறிவு முற்காலத்தார்க்கில்லையோவெனின், யுகவேறுபாட்டினாற் றருமந்தவமுதலிய மிகுதிப்பாடுற்றவர்களாதலால் அவர்க்கில்லையென்க; இது வருகின்ற சங்கவரலாற்றானும் விளங்கும்.

இவ்வகத்தியமுனிவர் காலத்தில் வடமொழிகள் தமிழில் வந்து கலக்கப்பெற்றன. இதனைச், சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை தண்ணுமையோனமைதியிலே, “தமிழ் என்பது வடவெழுத்தொரீஇ வந்த வெழுத்தானே கட்டப் பட்டவாச்சியக கூறுகளும், இயலிசை நாடகமென்று சொல்லப்பட்ட மூவகைத் தமிழ்களும்” எனக்கூறியிருத்தலானுங் காண்க.

சிலர் வடமொழியிலிருந்து தமிழ் வந்தது என்பர்; அங்ஙனமாயின், தமிழ்ப்பாஷைக்கு முதலெழுத்து முப்பது, வடமொழிக்கு முதலெழுத்து ஐம்பத்தொன்று இவ்வைம்பத்தோரெழுத்தும் முப்பதெழுத்தாக வந்ததெவ்வாறு? எ, ஒ, ழ, ற, ன, என்னுமெழுத்துக்களெங்கேயிருந்துவந்தன. ழ, ற, ன, எழுத்துக்களுள்ள பதங்கள் வடமொழிநூல்களி லெங்கேயிருக்கின்றன. இன்னும் வடமொழியிலிருந்து தமிழ்வந்ததுண்மையாயின் வடமொழிப்பதங்கள் யாவையுந் தமிழிலமைத்துக் கொள்ளலாமே. தெலுங்குமொழிக் கிலக்கணஞ்செய்தோர் வடமொழிப் பதங்களையெல்லாம் ஆட்சிக்கு வரும்படி எழுத்துக்களை யமைத்துக்கொண்டாற்போலத் தமிழிலக்கணத்திற் செய்யவில்லை. ஏனெனில்? வடமொழிப் பதங்களெல்லாந் தமிழினு முற்காலத்திலிருந்தமையால் அவ் வடமொழிப் பதங்கள் தமிழுக்கு வேண்டுவனவாகாவென்று நீக்கிவிடப்பட்டனவென்க. பிற்காலத்தே சில வடமொழி தமிழில்வந்து கலந்தனவாதலால் அவற்றைப்பிற்காலத்தார் தற்பவம், தற்சமம் என வேறுபாடுகள் கூறியமைத்துத் திசைச்சொற்களைப்போலத் தழுவிக்கொண்டாரென்க. இங்கே பிற்காலமென்றது, அகத்தியமாமுனிவர் காலமுதலாய காலமென்க.

இவ்வாறுயின், அகத்தியத்துள்ளே "ஏழியன்முறையதெதிர் முகவேற்றுமை - வேறெனவிளம்பான்பெயரதுவிகாரமென்- றோதிய புலவனுமுளனொருவகையா - லிந்திரனெட்டாம்வேற்றுமையென்றனன்" எனக்கூறுதலால் இந்திரனாற்செய்த விலக்கணமாகிய ஐந்திரம் என்னுமிலக்கணத்தை நோக்கி அகத்தியஞ்செய்தாரெனின்? அங்ஙனமன்று. என்னை? "பெயரது விகாரமென்றோதிய புலவனுமுளன்" "இந்திரனெட்டாம்வேற்றுமை யென்றனன்" என்ற இவ்விரண்டுபட்சமும் பிறன்கோட்கூறலாம். இவற்றுளொன்றைத் தாமெடுத்துக் கொண்டமையால் ஒருதலை துணிதலென்னுமதமும் யுத்தியுயாமென்க. இங்கே புலவனென்றது பாணினிமுனியையென்க.

இனிப், பாணினி வியாகரணத்திலே பாண்டவர்கள் பெயர்கூறப் பட்டிருத்தலால் அவ் வியாகரணம் பாண்டவர் காலத்திலேயுண்டாயதென்பர். அக்காலம் மூன்றாவது யுகமாயிருத்தலால் அதற்குமுன்பு வியாகரணமின்றோவெனின்? ஆதியிலே சிவபிரானாலுண்டாக்கப்பட்டுத் துடியொலிமூலமாக மகேசசூத்திரமென விளங்கியதை இந்திரன் முதலோர்க் கநுக்கிரகஞ்செய்ய அவ் விந்திரன்முதலோர் ஐந்திர முதலாகிய விலக்கணங்கள் செய்திருந்தனரென்க; பின்பு பாணினி முனிவருக்குச் சிவபிரானுபதேசிக்க அவர் அம் மகேசசூத்திரம், ஐந்திரமுதலியவற்றை யாராய்ந்து தொகை வகை விரியாகப்பாணினீய மென்னுமிலக்கணஞ் செய்தாரென்க.

இனிச், சங்கவரலாறு கூறுங்கால், தலைச்சங்க, மிடைச்சங்கங், கடைச்சங்கமென்னு மிம்மூன்றையுந் தாபித்தவர்கள் பாண்டியரே. அவருள், தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாருந், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளுங், குன்றமெறிந்த முருகவேளும், முரிஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனுமென் றித்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்றுநாற்பத்தொன்பதின்மரென்பது; இவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்பது; இவர்களாற் பாடப்பட்டன வெத்துணையோர் பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகுங், களரியாவிரையுமென்றித் தொடக்கத்தன. அவர்கள் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்து தமிழாராய்ந்தார். அவர்களைச் சங்கமீரிஇயினார்காய்சினவழுதி முதலாகக் கடுங்

கோன்வழுதி யீறாகவெண்பத்தொன்பதின்மர். இவருட் கவியரங் கேற்றினாரெழுவர் பாண்டியரென்ப. இவர் சங்கமிருந்து தமிழா ராய்ந்தது குமரியாற்றருகேயிருந்த கடல்கொள்ளப்பட்ட தென்மது ரையென்ப. குமரியாற்றைக் கடல்கொள்ளுங்காலத்து அங்கே நாற்பத்தொன்பது நாட்டையுங் கடல்கொண்டது. இவருக்கு நூலகத்தியமென்ப. தலைச்சங்கமழிந்தகால முதலூழியினிறுதியெ ன்பர் சிலப்பதிகார வுரையாசிரியர். முதலூழியினிறுதி - முதல்யுக முடிவு.

இனி, யிடைச்சங்கமிருந்தார் அகத்தியனாருந், தொல்காப்பிய னாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க் காப் பியனுஞ், சிறுபாண்டரங்கனுந், திரையன்மாறனுந், துவரைக்கோமா னுங், கீரந்தையுமென்றித் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்ம ரென்ப. இவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடினாரென்ப, அவர்களாற் பாடப்பெற்றன கலியுங், குருகும், வெண்டாழியும், வியாழமாலை யகவலுமெனறித் தொடக்கத்தனவென்ப; அவர்க்கு நூல கத்தியமுந், தொல்காப்பியமும், மாபுராணமும், இசைநுணுக்கமும், பூதபுராணமுமெனவிவை. அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங் கமிருந்தாரென்ப; அவரைச்சங்கமிரீஇயினர் வெண்டேர்ச் செழி யன்முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன் பதின்மரென்ப. அவருட் கவியரங்கேற்றினர் ஐவர் பாண்டியரென்ப. அவர் சங்கமி ருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்பது. அக்காலத்துப்போ லும் பாண்டியநாட்டைக் கடல்கொண்டது. இச் சங்கமிருந்தது இரண்டாம் யுகமுடிவுவரையென்பர் சிலப்பதிகாரவுரையில்.

இனிக், கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியா ருஞ், சேந்தம்பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங்குன்றூர் கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியனல்லந்துவனாருப், மரு தனிளநாகனாருங், கணக்காயனார்மகனார் நக்கீரனாருமென்றித் தொ டக்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறுங், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூ றும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும்,

எழுபது பரிபாடலுங், கூத்தும், வரியும், பேரிசையுஞ், சிற்றிசையு மென்றித்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமுமென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டென்ப. அவர்களைச் சங்கமிரீஇயினர் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரையென்ப. அவருட் கவியரங்கேற்றினார் மூவர் பாண்டியரென்ப; இச் சங்க வரலாற்றை இறையனாரகப் பொருளுரையிற் காண்க.

இச் சங்கத்திலே சோமசுந்தரக்கடவுள் தாமுமொரு புலவராக விருந்து தமிழாராய்ச்சிசெய்து மகிழ்ந்ததன்றிப், புலவர்களுடைய தாரதம்மியந் தெரிவதற்கு ஒரு பலகையொன்று கொடுத்தருளினார்; அது கல்வியிலுயர்ந்த புலவர் வந்தால் ஒருமுழம் வளர்ந்திடங்கொடுப்பது; இதனைத் திருவிளையாடற்புராணத்திற் சங்கப் பலகையிட்ட படலத்திற் காண்க. இதுவன்றியும் இறையனாரகப்பொருளென ஒரு நூலுமியற்றியருளினர்.

இனிச், சங்கத்தார் தொகையையும் ஆயுண்மிகுதியையு நோக்குங்கால் அக் காலத்திருந்த நூல்களை அளவிடமுடியாது; அவைகளையெல்லாங் கடல்வளைந்து தன் வயிற்றடக்கிக்கொண்டது. "ஏரணமுருவம்யோகமிசைகணக்கிரதஞ்சாலந் - தாரணமறமேசந்தம்பநீர்நிலமுலோக - மாரணம்பொருளென்றின்னமான நூல்யாவும்வாரி - வாரணங்கொண்டதந்தோ வழிவழிப்பெயருமாள" என்றவொருபழங்கவியினுங் காண்க. வாரணம் - கடல்.

இம்மூன்று சங்கமும் விளங்கியகாலத்து உலகிலுள்ள தமிழ்ப் புலவர்களெல்லாந் தாம்பாடிய இயலிசை நாடகமமைந்த பலவிதமான நூல்களையெல்லாம் அச் சங்கத்திலே அரங்கேற்றுவார்கள்; அங்ஙன மரங்கேற்றிச் சிறப்புப்பாயிரம்பெற்று வெளிவந்த நூல்களை மட்டுமே யுலகிலெல்லாரும் பாராட்டுவார்கள். பாண்டியர்களு நல்லறிவுடைய நாவலர்களாயிருத்தலினாற் சங்கப்புலவர்களையும் நூல்களியற்றிவரு நாவலர்களையு நன்குமதித் துடனிருந்தாராய்ந்து மகிழ்ச்சியுற்று வேண்டுவனவுதவிக்காத்து வந்தார்கள். இக்காலத்து அவ்

வாறு சங்கப்புலவரும், நூலியற்றுநாவலர்களுங் காத்துவிருத்திசெய்யுமரசருமின்றித் தெய்வமொழியாகிய நந் தமிழ்மொழி வரவரக் குன்றிவருகின்றது. ஆயினுங், காத்துவிருத்திசெய்யுமரசராயினும் பலபிரபுகுல சிகாமணிகளாயினுமிக்காலத்து வெளிப்படுவராயின் அவ்வாறு புலவர்களும் வெளிப்படுவார்களென்பதற் கையமில்லை.

கடைச்சங்கம் உக்கிரப்பெருவழுதி யென்னும் பாண்டியனுடனொடுங்குவதாயிற்று. பின்பு சமணர்கால மாயினபடியால் அவர்கள் தம்முடைய சமயநூல்களையே மிகவும் விருத்திசெய்து வந்தார்கள். பின்பு துருக்கர் அரசாக்ஷியான காலமாதலால், அவர்களாலே நூல்களெல்லாந் தீவாய்க்கிரையாகிவிட்டன. அவர்களுக்குத் தப்பிக்கிடந்த நூல்களே பின்பு சிற்றரசர்களானு மடாதிபதிகளாலுமாதரிக்கப் பட்டுவந்தன. இக் காலத்துச் சிற்றரசர்களு மடாதிபதிகளு மிகப் பராமுகமாயிருக்கின்றார்கள்; இதுவுமோர் காலகதியேயாம்.

இத்தெய்வத்தமிழுணர்ந்த புலவர்களைச் சிவபிரான் றிருமால்முதலாயினோர்கள் வேண்டிய வேண்டியாங்குதவிக்காத்து வந்திருக்கின்றார்கள். இடைக்காட்டுப் புலவரென்னுமொரு புலவர், குலேசபாண்டியனிடஞ்சென்று நல்லகவிகளைப்பாடிச் சொல்லியபொழுது அவன் எக் கலைகளையும் வரம்புகண்டவனாய்ச், சங்கப்பலகையிடங் கொடுக்கப்பெற்றவனாயிருந்துங் கருவத்தாற் பராமுகமாயிருந்துவிட்டான். உடனே அப் புலவர்வருத்தமுற்றாலயத்திற்சென்றுசொக்கலிங்கமூர்த்தியைப் பணிந்து பாண்டியன் அவமதித்த விஷயத்தை விண்ணப்பஞ் செய்து "என்னையிகழ்ந் தனனோசொல் வடிவாய்நின் னிடம்பிரியா விமயப்பாவை, தன்னையுஞ்சொற்பொருளான வுன்னையுமே யிகழ்ந்தனனென்றனக்கியாது" என்று முறையிட்டுப்போகச் சுவாமியுந் தனது லிங்கவடிவத்தை மறைத்துவிட்டு அங்கயற்கணம்மையுடனெழுந்து வையைநதிக்குத் தென்பாகத்தில் ஓரிடத்தி லெழுந்தருளியிருந்தார். சங்கப்புலவர்களுங் கூடப்புறப்பட்டுச் சுவாமியுடன் போயிருந்தார்கள். அவ்விடத்துக்கு உத்தரவாலவாயென வின்று நாமமுளது. இதனையறிந்த பாண்டியன் பயந்து வருந்திவந்து பலமுறை பணிந்து மறுபடி சுவாமியையும், உமாதேவியாரையுஞ், சங்கப்புலவர்களையுங் கோவிலுக்கு வரும்படிசெய்து, இடைக்காட்டுப்புலவர்செய்யுளை விதி

ப்படி யரங்கேற்றி மிருந்த திரவியமுதலியவைகளைக் கொடுத்துபசரித்தான். இதனைத் திருவிளையாடற்புராணம் இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்திற் காண்க.

இதுவொன்றோ, பாணபத்திரர்க்குச் சேரமான் பெருமாணுயனரைத் திரவியங்கொடுக்கும்படி "மதிமலிபுரிசைமாடக்கூடல்" என்ற திருப்பாசுரமெழுதிக் கொடுத்திருக்கின்றார். தருமியென்னு மாதிசைவனுக்குப்பொற்கிழிகொடுக்கும்படி "கொங்குதேர்வாழ்க்கை" யென்ற திருப்பாடலெழுதிக் கொடுத்திருக்கின்றார். பெற்றான்சாம்பானுக்குத் தீக்ஷைசெய்து முத்தியிற்சேர்க்கும்படி உமாபதிசிவாசாரிய சுவாமிகளுக்கு "அடியார்க்கெளியன்"என்னும்வெண்பாவை வரைந்து கொடுத்திருக்கிறார். இம்மட்டோ? பல அற்புதங்களையுஞ் செய்திருக்கின்றார். சமயாசாரியர்களாகிய நால்வர் சுவாமிகளுக்கும் அவர்கள் திருப்பாடலால் வேண்டிக்கொண்டவாறே எலும்பைப் பெண்ணாக்கியும், கடலிற் கன்மிதக்கச்செய்தும், முதலையுண்ட மூவாண்டு சென்ற பாலனைவரவழைத்தும், நரியைக் குதிரையாகச்செய்தும் இவைபோன்ற பல அற்புதங்களைச் செய்துமிருக்கின்றார் ; அவைகளையெல்லாம் பெரியபுராணந், திருவிளையாடற்புராண முதலியவற்றாலறிய நன்குவிளங்கும்.

காஞ்சிபுரத்திற் திருமழிசையாழ்வார் தம்மாணுக்கனாகிய கணிகண்ணன் பொருட்டுத் திருமால் ஆலயத்திற்குச்சென்று "கணிகண்ணன்போகின்றான்காமருபூங்கச்சி - மணிவண்ணாநீயிங்கேவாவா - துணிவுடனே-செந்நாப்புலவனிதோசெல்கின்றேனுன்னுடைய - பைந்நாகப்பாய்சுருட்டிக்கொள்" என்னும் வெண்பாவைக்கூற, உடனே திருமால் சர்ப்பசயனத்தையெடுத்துக்கொண்டு இலக்குமியுடன் சென்றனர். இதனையறிந்த காஞ்சிபுரத்திலிருந்த வரசன் நாங்கணிகண்ணனை விரோதத்தினாலிவ்வாறு நேர்ந்ததென வருத்தமுற்று வந்து தெரிசித்துப் பலமுறைவேண்டித் திருமாலையுமழைத்துப் பல சிறப்பளித்து மகிழ்ச்சியுறச் செய்தான் ; இதனைக் குமரகுருபரசுவாமிகள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் "கமலத்தணங்கரசொர்கையணைமுகந்துசெல்லப் - பணிகொண்டமுடவுப்படப்பாய்ச் சுருட்டுப்பணை

த்தோளெருத்தலைப்பப் - பழமறைகண்முறையிடப்பைந்தமிழ்ப்பின் சென்றபச்சைப்பசுங்கொண்டலே'' எனக்கூறியிருத்தல் காண்க.

இவ்வாறே புலவர்கட்குபகரித்தமையைக் கணக்கிடமுடியாது. அவருள்ளே "செந்தமிழ்க்குத் தொண்டுசெய்தோர் பன்னிருவர்" என்னும் ஒருவியாசத்தை யாமுங்கூடவேயிருந்தெழுதி யெமதுதமையனார்பேருக்குச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கின்றேம். அதனைப்பார்க்கவே நன்கு விளங்கும். இன்னுமித் தமிழ் வரலாறும் அதன்மகிமையும் பலவிருக்கின்றன. போதுமான அவகாசமின்மையால் இம்மட்டாக வரைந்திருக்கின்றன.

சே. ரா சுப்பிரமணியக் கவிராயர்,
சைவநூற்பரிசோதகர்.
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

உ

# ஜைநர்களின் ஆதிபாஷை

வைதிகமதஸ்தர்களின் ஆதிபாஷை ஸம்ஸ்கிருதமேயாமாறு போல அவைதிக மதஸ்தர்களுள் ஒரு வகுப்பினராகிய ஜைநர்களின் ஆதிபாஷையும் ஸம்ஸ்கிருதமேயாம். ஜைநர், சிரமணர் (அமணர்), ஆர்ஹதர், ஸ்யாத்வாதிகள், அநேகாந்தமதஸ்தர்கள் என இவ்வகுப்பாரைச் சுட்டிக்காட்டும் பெயர்கள் யாவும் வடமொழிப்பெயர்களேயாகும். ஜைநர்கள், திகம்பரர் சுவேதாம்பரர் என இருவகைப்படுவர். திகம்பரர் சுவேதாம்பரர் என்ற இவ்விருசொற்களும் வடசொற்களே. ஜைநஸமயத்தில் ஜீவன், அஜீவன், ஆஸ்ரவம், பந்தம், ஸம்வரம், நிர்ஜரம், மோக்ஷம் எனத் தத்துவங்கள் ஏழு. இவற்றோடு தருமம் அதருமம் இவ்விரண்டனையுங் கூட்டி ஒன்பது பதார்த்தங்களென்பர் சிலர். மேலே காட்டிய இவ்வொன்பது பதார்த்தங்களைக் குறிக்குஞ் சொற்களும் அவற்றினுட்பிரிவுகளைக்காட்டுஞ் சொற்களும் வடசொற்களாகவே காணப்படுகின்றன. இது நிற்க, ஜைந

ஸமயக் கொள்கைகளை வெளியிட்ட தீர்த்தங்கரர்கள் யாவரும் ஆரியக்ஷத்திரியரே. ஆரிய க்ஷத்திரியரின் ஆதிபாஷை ஸம்ஸ்கிருதமென்பது எவருக்கும் உடன்பாடேயாம். வைதிக மதஸ்தர்களுக்கு வேதங்கள் எப்படியோ அப்படி ஜைநர்கள் கொண்டிருக்கும் மிகப்பழமையான ஜைநஸித்தாந்த நூல்கள் தென்கன்னடத்துள்ள மூடபிதுறைபிலும் வேறு சில இடங்களிலும் ஜிநாலயங்களில் சேமிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் யாவும் ஸம்ஸ்கிருதத்திலும் பிராகிருதத்திலும் ஏடுகளில் வரையப்பட்டிருக்கின்றன. வியாஸ முனிவர் அருளிச்செய்த பிரம்மசூத்திரத்திற்கொப்ப, ஜைநஸமயக் கொள்கைகளை முற்றுமுணர்த்துவதாகிய தத்துவார்த்த சூத்திரம் என்னும் ஜைநஸமய நூல் உமாஸ்வஸ்தி முனிவரால் ஸம்ஸ்கிருதத்திலேயே இயற்றப்பெற்றுள்ளது. கி. பி. இரண்டாவது நூற்றாண்டின் றுவக்கத்தில் இந் நூலுக்கு ஸமந்தபத்திரமுனிவர் கந்தஹஸ்தி மகாபாஷ்யம் என்ற பாஷ்யம் வகுத்தனர். தத்துவார்த்த சூத்திரத்திற்கும் மேற்கண்ட பாஷ்யத்திற்கும் பிற்காலங்களில் பல பல வியாக்கியாநங்களும் ஏற்பட்டுள்ளன. ஸமந்தபத்திரமுனிவர் வடதேசத்தவர். பாடலீபுத்திரநகரத்திலிருந்து தென்னிந்தியாவுக்கு வந்தவர். இவரே தென்னாட்டின்கண் திகம்பரஜைநர்களை ஆங்காங்கு நிலைநிறுத்தினவரென்பர். பண்டைக்காலந்தொட்டு ஜைநர்களுக்கு உபநயநமும் காயத்திரியுபதேசமும் உள்ளனவாகக் காணப்படுகின்றது. இவர்களது ஜிநாலயங்களிலும் வீடுகளிலும் செய்யப்படும் வழிபாடுகளும் ஸமயக்கிரியைகளும் இற்றைக்கும் ஸம்ஸ்கிருதபாஷையைக் கொண்டே செய்யப்படுகின்றன. இவர்களுடைய பழமையான ஸமயநூல்களேயன்றிக், கணக்கில்லாத பலபல பொதுநூல்களும் இவர்களால் ஸம்ஸ்கிருதத்தில் இயற்றப்பெற்றுள்ளன. பாணிநி வியாகரணத்திற்கு முற்பட்ட காலத்தினதாகிய சாகடாயந வியாகரணம் சாகடாயநர் என்னும் ஜைநரால் அமைக்கப்பட்டுள்ளது. "லங: ஶாகடாயநஸ்ய", "வ்யோர்லகுப்ரயத்நதர: ஶாகடாயநஸ்ய" என்னும் பாணிநிசூத்திரங்களே பாணிநிக்கு முற்பட்டவர் சாகடாயநர் என்பதற்குச் சான்று பகரும். சாகடாயந வியாகரணத்திற்கு உரையாசிரியரான யக்ஷவர்ம்மாசாரியர் என்பவர் தமதுரையின் றுவக்கத்தில் நூலாசா

ரியரான சாகடாயனர் ஜைனர் என விளங்கக் கூறியுள்ளார். அவ்வுரையின் றுவக்கத்தின் கண்ணுள்ள சுலோகங்களாவன:—

“𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀 𑌸𑌕𑌲𑌜𑍍𑌞𑌾𑌨 𑌸𑌾𑌮𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌪𑌦𑌮𑌾𑌪𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 ।
𑌮𑌹𑌾𑌶𑍍𑌰𑌮𑌣𑌸𑌙𑍍𑌘𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌰𑍍𑌯𑌃 𑌶𑌾𑌕𑌟𑌾𑌯𑌨𑌃 ॥
𑌏𑌕𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑌿𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌨𑍍𑌦𑌰𑍇𑌣 𑌪𑍍𑌰𑌮𑌥𑍍𑌯 𑌯𑌃 ।
𑌸𑌯𑌶𑌃𑌶𑍍𑌰𑍀𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌦𑌧𑍍𑌰𑍇 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌾𑌮𑍃𑌤𑌮𑍍 ॥
𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌂 𑌸𑍁𑌖𑍋𑌪𑌾𑌯𑌂 𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌯𑌦𑍁𑌪𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌂 𑌸𑌾𑌰𑍍𑌵𑌮𑌰𑍍𑌹𑌚𑍍𑌛𑌾𑌸𑌨𑌵𑌤𑍍𑌪𑌰𑌮𑍍 ॥
𑌤𑌸𑍍𑌯𑌾𑌤𑌿𑌮𑌹𑌤𑍀𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯𑍇𑌯𑌂 𑌲𑌘𑍀𑌯𑌸𑍀 ।
𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑌲𑌕𑍍𑌷𑌣𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌯𑌕𑍍𑌷𑌵𑌰𑍍𑌮𑌣𑌾”॥

மேலே காட்டிய சுலோகங்களின் கருத்து:—“எல்லா நல்லறிவும் வாய்ந்து பெருஞ்சிரமண சங்கத்தலைவராக விளங்கின சாகடாயனர் சொல்லென்னும் கடலைத் தம்மதியென்னும் மந்தரபர்வதத்தால் தன்னந் தனியே நின்று கடைந்து புகழெனும் சிதேவியுடன் கூடிய வியாகரணமாகிய திரண்டவமுதைத் திரட்டிக் கூட்டினர். அர்ஹக்கடவுளால் தரப்பெற்ற சித்தாந்தசாத்திரம் போன்று, இவராலியற்றப் பெற்ற இவ் வியாகரணம் சுளுவானவழியில் சுருக்கமாகவும் நிறைவுற்றதாகவும் எவர்க்கும் நலனே நாடுஞ் சிறப்புற்றதாகவும் வாய்க்கப் பெற்றுள்ளது. இதற்கேற்பட்டுள்ள பெரிய விருத்தியுரையினின்றும் சுருக்கமாகவெடுத்து, விருத்தியுரைக்குரிய இலக்ஷணங்களெல்லாம் வாய்ந்த இந்த இலகு விருத்தியுரை யக்ஷவர்ம்மனால் புகலப்படுகின்றது. இதுவுமன்றி, அமரகோசம் எனப்படும் புராதந நிகண்டுவும் ஜைனர்கள்செய்த நூலேயாம். அந் நூல் செய்தவர் அமரஸிம்மன் எனப்படுவர். அவர் வடமொழி யிலக்கிய விலக்கணம் கரைகண்டவர். இலக்கண நூலாசாரியரெண்மரில் இவர் ஒருவர். நாளடைவில் பிராம்மணர்களைப்போல ஜைனர்களும் தாம் போந்த விடங்களிலெல்லாம் பேச்சுவழக்கிலிருந்த பாஷைகளைக் கைக்கொண்டனர். என்றாலும், இறுதியாக அநேக ஆண்டுகள் திரிந்தும் தம் ஆதி பாஷையாகிய ஆரிய மொழியைக் கைவிட்டொழித்தனரல்லர். ஏனெனில், பிற்காலங்களிலும் இவர்கள் வடமொழிவாணர்களாயிருந்

தனரென்பது நன்கு விளங்குகின்றது. ஸம்ஸ்கிருதம் பிராகிருதம் இவ்விரண்டினுளும் இலக்கிய விலக்கணங்களில் இவர்கள் அடைந்திருந்த தேர்ச்சிக்கோரளவில்லை. நியாஸம், காதந்திரவியாகரணம் எனப்படும் கௌமாரவியாகரணம், காசிகாவிருத்தி, ஹேமசந்திரசப்தாநுசாஸநம், திரிவிக்கிரமப் பிராகிருதவியாகரணம், தனபாலமுனிவர் செய்த ரூபஸித்தி முதலாகிய சத்தசாத்திர நூல்கள்; திரிகாண்டசேஷம், தநஞ்சயகோசம், ஹேமசந்திரகோசங்கள் ஆதிய பல நிகண்டுகள்; மகாபுராணம், பத்மபுராணம், பாண்டுபுராணம், ஹரிவம்சம் ஆதிய புராணங்கள்; கத்தியசிந்தாமணி, திலகமஞ்சரி முதலிய கத்திய காவியங்கள்; பார்சுவாப்பியுதயம், பார்சுவநாதசரித்திரம், காகுத்ஸ்த சரித்திரம், சந்திரப்பிரபசரித்திரம், தர்ம்மசர்மாப்பியுதயம், நேமிநிர்வாணகாவியம், ஜயந்தசரிதம், ராகவபாண்டவீயம் எனப்படும் த்விஸந்தானகாவியம், திரிஷஷ்டிசலாகாபுருஷசரித்திரம், யசோதர சரித்திரம், க்ஷத்திரசூடாமணி, முநிஸுவிரதகாவியம், பாலபாரதம், பாலராமாயணம், நாககுமாரகாவியம் ஆதிய வநேக பத்தியகாவியங்கள்; ஜீவதரசம்பு, யசஸ்திலகசம்பு, புருதேவசம்பு முதலிய பல சம்புகாவியங்கள்; வாக்படாலங்காரம், அலங்காரதிலகம், ஹேமசந்திர காவியாநுசாஸநம் ஆதிய அலங்காரகிரந்தங்கள்; விக்கிராந்த கௌரவ பௌரவீயம், அஞ்சநாபவநஞ்சயம், ஞானசூரியோதையம் முதலிய நாடகங்கள்; தர்க்கத்தில் பலவகை நூல்கள்; ஹேமசந்திர யோகசாஸ்திரம் முதலிய யோகநூல்கள்; ஆகிய இவைகளெல்லாம் ஜைநர்களால் இயற்றப்பட்டுள்ளன. இவர்கள் செய்துள்ள நூல்கள் ஆயிரக்கணக்காகக் காணப்படலின் அவைகளை யெல்லாம் இங்குக் காட்டத் திறனேது? முற்காலத்து ஜைநர்கள் தாம் குடியேறிய நாடுகளில் எங்கும் தம் மதக்கொள்கைகளைத் தாபித்தற்பொருட்டு பல பல அரிய பெரிய நூல்களை இயற்றினர்; தேசபாஷைகளைச் செழிக்கச் செய்தனர். இவர்கள் அப் பாஷைகளில் இயற்றியுள்ள நூல்களில் ஸம்ஸ்கிருதத்தைத் தழுவாதன சாலக்குறையும், இவர்கள் ஏது காரணங்கொண்டோ வரவரத் தலைதாழ்ந்து தொகையிலும் சுருங்கப்புகுந்தமையின், இவர்களது கல்வித்திறனும் மறைந்துபோயிற்று. ஆயினும் தற்காலம் செல்வப்பெருக்குடைய ஜைநர்கள் வடதேசங்களிலெங்கும் தலையெடுத்து வடமொழிப் பாடசாலைகளையும்

ஆங்கிலபாடசாலைகளையும் தம்மவர்க்கென்றே பிரத்தியேகமாக யேற்படுத்தித் தம்மவருள் யாண்டும் கல்வியைப் பரப்புகின்றனர். மேலே காட்டியவைகளை யெல்லாம் ஒருங்கே சேர்த்து ஆராயுங்கால், ஜைனர்களின் ஆதிபாஷை ஸம்ஸ்கிருதமென நன்கு தெளியலாகும்.

டி. எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரிகள்

---

உ

சிவமயம்.

## சுத்தாத்துவித சைவசித்தாந்த மகத்துவம்.

உலகத்திலே எண்ணிலாத நெடுங்காலமெண்ணிலாத பல சமயங்கடோன்றி, அவ் வொவ்வொன்றுந் தனித்தனி தானே மெய்ச்சமயம், தானே கடவுளாலருளப்பட்டது, தன்னையொழிந்தன வனைத்துங் கற்பனைகளேயாமெனச் சாதித்துத் தத்தங் கோட்பாட்டை நிறுத்தாநிற்கும். அவ்வச் சமயானுசாரிகளும், அங்ஙனமே தத்தஞ் சமயமே மெய்ச்சமையமாமெனச் சாதிப்பான்புகுவர். காலாந்தரங் களினெழுந்து வல்லமைபடைத்துச் சிறந்துள்ள வல்லாருடைய சமயங்களெல்லாஞ், சிற்சிலகாலத்து நின்றிலங்கிப் பின்னரன்னவரோடு தலைமடிவனவாயின. அச் சமயங்களுள்ளே சில சகல பொருள்களுந் தாமேதோன்றித் தாமேயழிவனவன்றிக், கடவுளென்றொருவ ரிலராமெனச் சாதிப்பனவேயாம். வேறு சில, கடவுள் உலகத்திலேவந்து பிறந்து வாழ்ந்துண்டிறந்து போபவரெனக் கூறுவனவேயாம். வேறு சில, கடவுள் உலகத்திலே வந்து பிறந்து வாழ்ந்துண் டிறந்து போபவரே யன்றி, ஆன்மாக்களையும் பாவத்தையு மிடையிலே சிருட்டிப்பவ ரெனவுங் கூறுவனவேயாம். வேறு சில, காணப்படுஞ் சகல பொருள்களுமே கடவுளாவதன்றிக், கடவுளென்று வேறாக ஒருவரிலரெனச் சாதிப்பனவேயாம். இங்ஙனமேயாகக், கரைகாணற்கரிய சமுத்திரமேபோலப் பரந்து விரிந்த சமயகோடிகளை யெல்லா நோக்கித், தக்க கருவிநூ லுணர்ச்சியுஞ் சமயநூ லுணர்ச்சியு மில்லாத நம்

மவரெல்லாம், அவற்றினுண்மை கண்டுணரும் வன்மையின்மை காரணமாக மயங்கி யிடர்ப்படுவராயினர். அஃதன்றி, இக்காலத்தரச பாஷை இங்லிஷேயாதலிற் சீவனோபாயநிமித்தமாக நம்மவரெல்லா மதனையே கற்றுவருதலின், அதுவாயிலாக நமது சமயநூலுணர்ச்சி யின்மையின் மாயாவாதிகளாகவும், நிரீச்சுரவாதிகளாகவும் வருதலை நோக்கிப் பச்சாத்தாபமுற்று, அவர்பொருட்டாகவே, விசேஷமாக இவ் விஷயத்தைச் செந்தமிழ்ப் பத்திரவாயிலாக எழுதி வெளிப் படுத்துமாறு துணிந்தோம்.

மனுடரைச் சிறப்பிப்பது யுத்தி, யுத்திக்காதாரம் தக்க கல்வி யறிவும், பிரமாண அனுபவமு முதலியனவேயாம். இங்ஙனமாய பிரமாணுனுபவங்களைக் கொண்டாராய்ந்து, மெய்யெனக்கண்ட சமயத்தையனுசரித்தொழுகி, அதுவாயிலாகப் பாசநீக்கத்துச் சிவத்துவப் பேறடைதலாகிய பரமுத்திபெறுதலே மானுடப்பிறவி பெறுதலா லடையும் பெரும்பேறும். அதனைத் தடையின்றித் தரவல்லது நமது சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயமேயா மென்பதனைப், பிரமாண சகிதமாக நமது சிற்றறிவுக்கெட்டியவாறு ஈண்டுமிகச்சுருக்கி விளக்கிக்காட்டுவாம்.

சரியை முதலிய நாற்பாதங்களுள்வைத்து ஞானபாதத்தோதிய பதி பசு பாசமென்னும் முப்பொருளையும், இலக்கண தருக்க தத்துவ சாத்திரங்கட் கொருமயிரிடை பிசகாதவாறு சுருதி யுத்தி யனுபவங்களைக் கொண்டாராய்ந்து, ஆன்மாப் பாசசம்பந்தத்தினின்று நீங்கித் தன் சுவரூபத்தைப் பெற்றுப் பதியாகிய சிவத்தோடிரண்டறக் கலத்தலாகிய சுத்தாத்துவித முத்தியையடையும் உபாயத்தை விளக்குதற்கெழுந்த சமயமே சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமயமாம். இச் சமயத்தை விளக்குதற்குத் தமிழிலே யெழுந்த நூல்கள் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய பதினன்கும், அவற்றின் வழித்தோன்றிய ஏனைய நூல்களுமேயாம். சித்தாந்தம் - முடிந்தமுடிவு. அஃதாவது, உபநிடதங்களாற் குறிப்பாக முடிக்கப்பட்டுள்ள பொருளைப் பரிபக்குவர் பொருட்டுத் தெளிவுற வெளிப்படையின் விளக்கிமுடித்தல். வேதங்களின்சாரம் உபநிடதங்களும், உபநிடதங்களின் சாரஞ் சித்தாந்தமுமா மென்பதே

யாம். ஆகவே, வேதமும், உபநிடதமுஞ், சித்தாந்தமும், அபக்குவர் பக்குவர் அதிதீவிர பக்குவரென்னும் மூவகையோர்க்கும் முறையே பயன்படுமாறு, முற்பிற்பாடு நோக்காது சிவபெருமானிடத்திருந்து ஏககாலத்தெழுந்த நூல்களேயாம். அதுநோக்கியே சுப்பிரமணியப் பெருமானது திருவருளைப் பிரத்தியட்சத்துப் பெற்றருளிய நங் குமரகுருபர சுவாமிகளும், "குடிலையென்னுந் தடவயனுப்ப, ணருள் வித்திட்டுக் கருணைநீர்பாய்ச்சி, வேதமென்னும் பாதவம்வளர்த்தனை, பாதவமதனிற்படுபயன்பலவே, அவற்றுள் - இலைகொண்டுவந்தனர் பலரேயிலையொரீஇத், தளிர்கொண்டுவந்தனர் பலரேதளிரொரீஇ, யரும்பொடுமலர்பிஞ்சருங்காயென்றிவை, விரும்பினர்கொண்டுகொ ண்டுவந்தனர் பலரே, யவ்வாறுறுப்பு மிவ்வாறுபயப்ப, வோரும் வேதாந்தமென் றுச்சியிற்பழுத்த, வாராவின்ப வருங்கனிபிழி ந்து, சாரங்கொண்ட சைவசித்தாந்தத், தேனமுதருந்தினர் சில ரேயானவர், நன்னிலைபெருதற் கன்னியனாயினு, மன்னவர்கமலப் பொன்னடிவிளக்கிய, தீம்புனலமுதமார்ந்தனனதனால், வேம்பெனக் கொண்டனன் விண்ணவரமுதே'' என அருளிச்செய்தனர். "வேதா ந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத்திறனிங்குத் தெரிக்கலுற்றும்.'' என்று அருளிச்செய்தார் உமாபதி சிவாசாரியரும். பதி பசு பாசங் களின் சொரூப தடத்தவிலக்கணங்களையும், முத்தியிலக்கணத்தையும் ஐயவிபரீதங்களற விளக்கவல்லன நமது சித்தாந்த சாத்திரங்களே யன்றிப் பிறிதொன்றன்றேயாம். தேவார திருவாசகமுதலிய பன் னிரு திருமுறைகளும் நமது சித்தாந்த சாத்திரங்களுக் கிலக்கியமா யமைந்துள்ளனவேயாம். மகா ஞானிகளெல்லாம் இச் சித்தாந்த வழியொழுகியே பரமுத்தி பெற்றருளினர்.

நமது சித்தாந்த சாத்திரமொன்றே ஏனைய சமய சாத்திரம் யாவுக்குஞ் சிரத்தானமாயமைந்துள்ள தொன்றென்பதனைச் சுருதி யுத்தி யனுபவங்களைக்கொண்டிங்கே சிறிதாராய்ந்து காட்டி நாட்டு வாம், நமது சித்தாந்தநூல், ஏனைய சில சமயநூல் கூறுமாறு, பசு பாசங்கள் இடையிலே சிருட்டிக்கப்பட்டனவெனக் கூருது, அவை அனாதியேயுள்ளவெனக் கூறும். சூனியோபாதானமாகப் பொருள் கட்குச் சிருட்டிகூறுதல் தத்துவ சாத்திர விரோதமாதலினாலும்,

காரணமின்றிக் காரியம் பிறத்தலே உலகத்து யாண்டுங்கண்டிலமாத லினாலும் சற்காரியவாதங் கூறுஞ்சித்தாந்த நெறியொன்றே யன்றி ஏனைய நூல்வழி சிறிதும் பொருந்தாததொன்றே யாமென்க. அது பற்றியன்றே, சித்தாந்த பானுவாகிய சிவஞானசுவாமிகளும், "நெற் கமுகாய் நீளாது நெல்லாய் நீளுதற்கேது வென்னையென்னுந் தருக்க மேயதனை வலியுறுத்துமென்க" எனக் கூறினர். பதியைப்போற் பசுவுமனாதியே யாதலிற் பதியினுக்குள்ள இலக்கணங்களெல்லாம் பசுவுக்குமிருக்கவேண்டுமேயென்னில், ஓரிலக்கணம் பொருந்தினால் ஒன்பதும் பொருந்தவேண்டுமென்பதெதனாற் பெறப்படும்? கரியன வெல்லாங் காக்கையாகவும், வெண்ணிறமுடையனவெல்லாம் பாலா கவும் பெறப்படினன்றோ அங்ஙனம் பொருந்துமென்க.

சித்தாந்த சாத்திரம், சோபானமுறையே பற்பல பிறவிகளினீ ட்டிய சிவபுண்ணியப் பேற்றினாலன்றி, ஒரே பிறவியினாலே ஞானம் வருதலும் முத்திபெறுதலு மரிதேயாமெனக்கூறும். ஏனையசிலநூல் கள் அதற்கு மறுதலையாகக் கூறுகின்றனவேயெனிற், குழந்தைப் பருவத்திறப்பார்க்குங் குருடூமைகளாய்ப் பிறந்திறப்பார்க்குங் கதி யாதென்பார்க்கு விடையிறுக்க வியலாதொழிதலி னது பொருந்தா தாமென்க. அஃதன்றி, நமது சாத்திரம், ஒருவனிறக்கும்பொழு துதிக்குமெண்ணமே அவனது வரும்பிறவிக்கேதுவாமென்றும், வலி யுறுத்தும். மதுவருந்தி மயங்கினோனுஞ், சித்தப்பிரமை கொண் டோனுஞ் சுவாதீனமொழிந்திருக்குமந் நேரத்துந் தமது நெடுங்கால அனுபவத்து மனத்தழுந்தியிருக்குமந்தரங்க விஷயங்களையே வாய் சோர்ந்து புலம்புதலைப் பிரத்தியட்சத்துக் கண்டிருக்கின்றோமாதலி ன், இறக்குங்காலத்துத் துட்டர்க்கெவ்வழியானுவது நற்பிறவிக்கே துவாகிய நல்லெண்ணமுதிக்க மாட்டாதேயாம். இங்ஙனமாதலிற் பிறந்த நாண்முத லிறக்குநாள்வரைக்குந் தீச்செயல்களையே புரிந்து கொண்டுவரினும் இறக்கும்பொழுது மாத்திரஞ் சிவத்தியானஞ் செய்து முத்திசேரலாமே யெனக்கொண்டு, நமது சாத்திரத்துக் குற்றமேற்றித் திரிவாரது போலிவாதமுமிதனால் அழிந்தொழிந்த மைகாண்க. இவற்றினுண்மையுணர்ந்தன்றே சிவஞானசுவாமிகளும், "ஆளுடையபிள்ளையார் முதலாயினார்க்குத் தவமின்றியும் ஞான நிகழ்ந்தவாறென்னையென்னுங் கடாவை விடுத்தற்கு மேற்செய்துழி

யென ஈண்டும் வலியுறுத்தார்" எனக்கூறினர். முற்பிறவியினீட்டிய இருவினையின்பயனாய் விதிக்கப்பட்டுக் கருவினுட் சூக்குமமாயமைந் துள்ள விதிப்பிரகாரமேயன்றி அதற்கு மறுதலையாக ஆன்மாக்க ளொன்றனையாவ தனுபவிக்கமாட்டாவென்று வலியுறுத்தி நிறுத்து தலையும், அதற்குத் துணைக்கருவியா யமைந்துள்ள முயற்சி தான் செய்யுந் தொழிலினின்றொழிந் தொருகணப்பொழுதாவது வாளா விருத்த லியலாதென்பதனையும், தளர்வின்றி முயற்சிசெய்வார் பொருள்வருவாய் யாதுமின்றியிருப்ப யாதொரு முயற்சியுமின்றி வாளா விருப்பார்க்கு வருவாய் கதித்துவருதலைக் கண்கூடாக எடுத்துக்காட்டி அதனை விளக்குதலையும் நமது சித்தாந்த சாத்திரவாயிலானன்றி வேறெந்நூல் வாயிலாகவாவது கண்டுணர்தலரிதேயாம்.

நமது சாத்திரங்களிலே தத்துவங்களது தோற்றமுமொடுக்கமுங் கூறிமுடிக்குமுகத்தால் நமது சமயத்தினுண்மையை விளக்கியிருக்குஞ் சிறப்பையும், அத் தத்துவங்களெல்லா மன்றுமுதலின்றுவரை அளவைகளைக்கொண்டாராயுந்தோறு மோரணுப்பரிமாணமாவது பிசகாதொருபடித்தாகவே யமைந்திருக்குமியல்பையும் அறிவாலமைந்த பெரியோரெல்லாங் கண்டுமகிழ்ந்து பாராட்டா நிற்பர். நீருக்குப் பிறைவடிவங்கூறிய நமது சாத்திரக் கோட்பாட்டை நிந்தித்துத் திரிந்த ஏனைய சமயானுசாரிகள், இப் பொழுதுதான் அதனுண்மையைச் சோதித்தறிந்து வாயடங்கி வாளாவிருக்கின்றார்கள். இன்னுமிதுபோலும் பலவரிய விஷயங்களினுண்மைகளைத் தாமாகக்கண்டறிந்த பின்னரன்றோ நமது சமயத்து மகத்துவங்களை ஒருவாறு புகழ்ந்துவருமாறாகவுந் தொடங்கியிருக்கின்றார்கள். இங்ஙனமேயாக இங்கே நாமெடுத்து விளக்கிக்காட்டிய இச் சில நியாயங்களை ஆதாரமாகக்கொண்டு, விரிவஞ்சியொழித்த ஏனையவற்றையுமுய்த்துணர்ந்துகோட லறிஞர்கடனேயாம்.

இங்ஙனமேயாக இனி ஏனையசமயிகளுந் தத்தஞ்சமய நூல்களையுங் கடவுளருள்பெற்றவரே யியற்றினரெனக் கூறுகின்றாரேயெனின், அந் நூல்களிலே, இலக்கண தருக்கவழுக்கண் மலிந்துள்ளனவாதலினாலும், இறைவனருள்பெற்றுப் பதிஞானத்தையடைந்துள்ளோர் அங்ஙனமாய வழுக்களுட்புகுந்து மயங்காராதலினாலும், நமது சித்

தாந்த நூல்களுளங்ஙனமாய வழுக்கள் யாண்டுங் காணப் பெறுமையி னுலு மன்னோர் கூற்றுப்பொருந்தாதென மறுக்க. அங்ஙனமாயின் இலக்கண தருக்கநூல்களில் வல்லார்செய்த நூல்களும் மெய்ந்நூல்க ளெனப்படுமாலோவெனில், அவரெல்லாம் எத்துணைக்கூர்ந்த மதியு டையரேயாயினுஞ் சிஞ்சிஞ்ஞரேயாதலின், யுத்திக் கதீதமாயுள்ள இறைவனதியல்பையும் முத்தியிலக்கணத்தையு முணர்த்து மாற்றல் பெற்றுள்ளாரல்லரேயாமென்க. அங்ஙனந் தமது சிற்றறிவுகொண்டு முற்றறிவுடைய முதல்வன திலக்கணமாகிய யுத்திக்கதீதமான விஷ யங்களையுணர்த்தப் புகுங்காற் றந்நெறிபிறழுவரே யாமென்பதொரு தலை.

இறைவனூல் யுத்திக்கதீதமாயிருப்பினு மொருவாற்றானும் யுத்திக்கு மாறுபடவேமாட்டாது. யுத்தியினுற் சிறந்த மனுடன், தக்க கருவிகொண்டளக்குங்கால் இது கடவுளாலருளிச் செய்யப் பட்டது, இது பிராந்தனுற் செய்யப்பட்டதெனப் பகுத்துணரும் ஆற்றலொன்றுமாத்திரம் பெற்றுடையனேயாம். சித்தாந்த சாஸ் திரங்களைக்கொண்டு மளவிட்டறிதற் கெட்டாவதீத விஷயங்களிருப் பதுண்மையேயாயின், சித்தாந்த சாத்திரமொன்று மாத்திரந்தான் முத்திநெறிகாட்டும் மெய்ச்சமயமெனக் கூறுதல் நியாயவிரோதமா மேயென்னில், ஆன்மாக்கள் உணர்த்த உணருமியல்புடையன வாத லினுலுஞ், சிற்றறிவுடையனவாதலினுலு மவற்றிற்கு முற்றுமுணரு மாற்றல் வருமாறு செய்தல் கடவுளாலுமியலாத தொன்றேயாம். இயற்கை விரோதம் யார்மாட்டும் எவ்விடத்துஞ் செல்லாதென்பது தத்துவநூல்வல்லார் யார்க்குமுடம்பாடேயாம். பிறவிகடோறு மீட்டிய புண்ணியப்பேற்றினுல் இருவினையொப்பும் மலபரிபாகமு மெய்திச் சத்திநிபாதமுற்ற பரிபக்குவர்க்குப், பதியே குருவை யதிட்டித்துவந்து, சோபானமுறையா லுணர்த்துங்காலத்துப், பாச ஞான பசுஞானங்களையொழித்துப் பதியறிவே கண்ணாகக்கொண்டு காணுமன்னோர்க்கே இவ் விரகசியங்களெல்லாம் புலப்படுமியல்பிற் றென்க.

இங்ஙனமேயாயின் ஏனைச் சமயானுசாரிகளுக்கெல்லாம் முத்தி யின்றேவெனின், "யாதொருதெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகியங்

கே, மாதொருபாகனார்தாம்வருவர்" என்றற்றொடக்கத்த திருவாக்குக்களினாலே யாரும் முத்திபெறத் தக்கவரேயாமென்க. ஏனைய சமயங்களெல்லாஞ் சித்தாந்தசிகரத்துக்கேறிச்செல்லும் படிகளேயாதலின், அச் சமயிகளெல்லாம் முப்பத்தாறு தத்துவங்களுளடங்கிய பதமுத்திகளை முறையே பெற்றுப், பின்னர்ச், சைவக்கூற்றின் முடிவாகிய சித்தாந்த நெறியினைத் தலைப்பட்டு, முன்னர்ச், சாலோகமுதலிய பதமுத்திகளைப்பெற்று, முடிவிலே முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து அப்பாலாய்நிற்குஞ் சொரூபசிவத்தோடிரண்டறக் கலத்தலாகிய சுத்தாத்துவித முத்தியை யடையப்பெறுவர். இங்ஙனமே யாக விளக்கிக்காட்டிய ஏதுக்களினாலே, சித்தாந்த சைவமொன்றே விசேடமுடையதென ஒருவாறர்த்தாங்கீகாரஞ் செய்யினும், இந் நிலையை அநுசரிப்போர் கற்றவராகிய மிகச்சிலரேயன்றி, ஏனையோரெல்லாம் வேறு நிலையினரும் வேறு சமயமுறையினருமாயிருத்தலென்னையோவெனில், வைரக்கற்கள் சிலவும் ஏனையகற்கள் பலவுமாயிருத்தல்பற்றி வைரக்கற்களைக் குறைவாக மதியாதவாறு போலவும், நல்லோர் சிலரும் தீயோர் பலருமாயிருக்கும் ஏதுப்பற்றி நல்லோரைக் குறைவாக மதியாதவாறு போலவுஞ், சித்தாந்தசைவர் குறைந்ததொகையினராயிருக்கும் ஏதுவொன்றே கொண்டு அதனைக் குறைவுபடுத்தத் துணிதல் நியாயவிரோதமேயாமென்க.

இனி நமது சித்தாந்தங்கூறும் முத்தியும், ஏனைய சமயநூல் கூறும் முத்திபோல ஓரிடத்திலேபோ யோருருவத்தோடிருந்து அநுபவிக்குஞ் சுகத்தைப்போல்வதொன்றன்றாம். அது, ஆன்மாப்பாச சம்பந்தத்துக்கத்தினின்று நீங்கிப் பரமசுகமடைந்திருத்தலே முத்தியாமெனக் கூறும். சொரூபசிவத்தோடிரண்டறக் கலக்கும் முத்தியே யாதலினது சுத்தாத்துவித முத்தியெனப்படும். அத்துவிதமென்ற சொல்லின துண்மைப்பொருளைச், சிவஞானபோதத் திரண்டாஞ் சூத்திரத்து மெய்கண்டதேவாது வார்த்திகப்பொழிப்பானுய்த்துணர்ந்துகொள்க. "கரும்பைத்தேனைப்பாலைக் கனியமுதைக்கண்டைக் கட்டியை யொத்திருப்பனந்த முத்தியினிற் கலந்தே" என்றருளிச்செய்தார்சகலாகமபண்டிதரும். சார்ந்ததன்வண்ணமாமியல்பினையுடைய ஆன்மாப், பெத்த தசையிலே சடத்தொடுகூடிச் சட

மா மாறுபோல, முத்திதசையிலே சிவத்தொடுகூடிக் கலந்துசிவமே யாம். ஆன்மாச்சிவமாவதுபோலச் சிவமொருகாலத்தாவது, மாயா வாதிகள்கூறுமாறு, ஆன்மாவாயாகமாட்டாது. அதுமாணிக்கத்தைச் சார்ந்த படிகம் மாணிக்கமேயாகவும், படிகத்தைச்சார்ந்த மாணிக்கம் அதுபோல ஒருகாலத்தாவது படிகமேயாகமாட்டாதவாறு போலு மாம். நமது சித்தாந்த சாத்திர வரலாறும், அதனை அனுசரித்து முத்திபெற்ற மகான்களினது வரலாறுமாகிய விரிந்த விஷயங்களை மதுரை வித்தியாபானுவின் பிரதமபத்திரிகைவாயிலாக வெளிப்படு த்தி யிருக்கின்றோமாதலி னவற்றை யீண்டு விரித்திலமாண்டுக்கண்டு ணர்க. இது, கலைஞானங்களிலே வல்ல பல வித்துவசிரோமணிகளா லெழுதப்படும் பற்பல வரிய விஷயங்களைக்கொண்டு வெளிப்படுமொ ரு பத்திரிகையே யாதலிற், சமுத்திரம்போலாழ்ந்து பரந்துள்ள நமது சித்தாந்த சாத்திரங்களி னுட்பங்களை விரித்தற்கிடம்பெறா தென வஞ்சிச் சிலவற்றை மாத்திரமிங்கே சுருக்கிக்கூறினோம். ஏனை யவற்றையு முய்த்துணர்ந்து கோடலறிஞர் கடனேயாம்.

இதுகாறுங் கூறிப்போந்த நியாயங்களினாலே, உலகத்திலே யுள்ள எண்ணிறந்தசமயங்களுளெல்லாம், ஞானபாதத்தோதிய பொ ருள்களை யாராய்ந்து, உலகமலையாதவாறிலக்கண தருக்கநெறிக்குஞ் சுருதி யுத்தியனுபவங்கட்குஞ் சிறிதும் மாறுபடாவண்ணம் விளக்கி முடித்தலிற் சித்தாந்தமாயமைந்து, வேதத்தினுண்மைப்பொருளைப் பரிபக்குவர்பொருட்டு, அம் முதனூற்குச் சிறிதும் மாறுபடாவாறு விளக்குதற்கெழுந்த நூல் நமது சுத்தாத்துவித சைவசித்தாந்த மொ ன்றுமேயா மென்பதூஉம், அதற்கு மறுதலைப்பட்டெழு மாசங்கைக ளாகிய பூருவபக்கத்துக்குச் சித்தாந்தமா யமைந்துள்ள விடைகளி வைகளேயா மென்பதூஉம், ஏனைய சமயங்களெல்லாம் நமது சித்தா ந்த சிகரத்துக் கேறிச்செல்லுஞ் சோபானங்களேயா மென்பதூஉ ம், உண்மைப் பரமுத்தியைத் தடையின்றித் தரவல்ல தஃதொன் றேயா மென்பதூஉம், அவ்வுயர்வழியொழுகிப் பரமுத்திபெற்றருளி னோர் மகாஞானிகளேயா மென்பதூஉம், இம்மை மறுமை இரண் டிற்கும் அஃதொன்றே ஏற்றவழியாமென்பதூஉம், பிறவுஞ் சுருதி யுத்தி யனுபவங்களைக் கொண்டொருவாறிங்கே சுருக்கி விளக்கிய வாறுயிற்று.

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்."

சு. சரவணமுத்துப்பிள்ளை,

உதயபாநு பத்திராதிபர்.

---

ஸ்ரீ:

# முத்தகச்செய்யுட்டிரட்டு.

யான்சென்ற செந்தமிழ்ப் பத்திரிகையின்கண் முத்தகச்செய்யுட்டிரட்டெனத் தலையங்கமிட்டு வெளியிடவேண்டுமென்றுத்தேசித்துத் தமிழ்ப்புலவர் பெருமக்களுக்கொரு விண்ணப்பஞ்செய்துளேன்; அதைச் செந்தமிழ்ப்பத்திரிகையைக் கண்ணுற்றயாவரும் அறிந்திருப்பாரென்பதற் கையமின்றும். இம் முத்தகச்செய்யுட் டிரட்டாலுண்டாகும் நன்மை எத்துணையோவுள்ளன ; அவற்றுட்சிலவற்றையீண்டு வரைகின்றேன். நம் புலவர் பெருமக்களது கல்வித்திறமையும் வாக்குச்சாதுர்யமும், இன்னகாலத்திருந்தனரென்பதும், இன்னவரசரையல்லது இன்னபிரபுவைப்பாடினரென்பதும், இவ் வண்ணங் கஷ்டத்தையாவது இன்பத்தையாவது அடைந்தனரென்பதும், இன்னாரிடத்தில் இன்ன பரிசு பெற்றனரென்பதும் பிறவும் வெளியாம். பெயர் காலம் முதலியனதெரியாது எத்தனை புலவர்சரித்திரம் மறைந்து போயின. அந்தோ ! இது நம்மவர் குறையன்றோ. இம் முத்தகச்செய்யுட்டிரட்டித்துணை நன்மைபயப்பதோடு பின்னர் இவ் விதமான பாட்டுப்பாடும்படி மாணவர்களைத் தூண்டி யவர்கள் புத்தியையு மிளிரச்செய்வதற்கு இஃதோர் வழிகாட்டியாகுமென்பது எனது துணிபு.

முன்னிருந்தபுலவர்கள் ஒவ்வோரமயங்களில் எவ்வளவு கவிகளியற்றியுள்ளார்கள். பிற்காலத்திலவ்விதமாய்க் கவிபாடுந்திறமை நாளடைவிற் குறைந்துகொண்டு வருகின்றதென்று துணிவாகக் கூறலாம். இவைநிற்க, சின்னாட்களுக்குமுன் பெரியகுளந்தாலுகாவைச்சேர்ந்த தேவாரமென்னுங் கிராமத்திலுள்ள மாதவச்-சின்னம்மாளென்றபார்ப்பனியார் இம் மதுரைமாநகர்வந்து தமிழ்ச்சங்கங் கண்ணுறும்பொழுது அம்முதியார் தாமியற்றிய முத்தகச்செய்யுட்களைச் செந்தமிழ்ப் பத்திராதிபர் முன்னிலையிற் சொல்லக்கேட்டேன். அச் செய்யுட்களை நோக்குமிடத்து எனக்குண்டாகிய மகிழ்ச்சிக்கோரளவில்லை. பெண்கல்வி வேண்டுமென்று வாதாடுமிக்காலத்தில் இத் தன்மையான நல்லிசைப்புலமை மெல்லியலார் வெளிப்படுவராயின் அக் கூட்டத்தார்க் கிஃதோர் பெருமதிப்பை யுண்டாக்குவதோடு அவர்களையுமிங்ஙனங் கல்விபயிலுமாறாக்குமென்பது எனது துணிபு. இவர்கூறியபாடல்களெல்லாஞ் சொற்சுவை பொருட்சுவை முதிரப்பெற்றிருப்பதோடு எதுகைத்தொடை மோனைத்தொடைநயங்களும் விளங்கிமிளிர்கின்றன. இவர் கல்வித்திறமையும், நுண்ணறிவும், வாக்குறுதியும் இவர்பாடிய செய்யுட்களாற் பலருமுணருமாறு வெளியிடுகின்றேன்.

இவர் கவிகேட்டு மகிழ்ந்து செந்தமிழ்ப் பத்திராதிபர் கூறிய சாத்துக்கவி வருமாறு:—

வெண்பா

சொல்லும் பொருளுஞ் சுவையினிது சொற்றொடர்ந்து
செல்லு மொழுக்குஞ் சிறந்ததே—வல்லுநர்கள்
பன்*னம்மை யார்பநுவற் பண்புளது தேவாரச்
சின்னம்மை யார்பநுவற் றேன்.

---

இவை இவரியற்றிய ஞானசாரியர் வணக்கம்.

கட்டளைக் கலித்துறை

மாத்தானவரைவதைத்தேயமரர்கள்வாழமுனங்
காத்தான்கழல்களைக்காதலியேனென்கருத்திருளைத்
தீர்த்தாளவெண்ணித்திருமந்திரவுபதேசஞ்செய்த
ஆத்தானழகப்பையங்காரடியிணைக்காட்செய்வனே. (க)

* அம்மை—செய்யுள்வனப் பெட்டனுளொன்று.

சந்ததமானந்தமாய்நித்யசூரியர்தாம்வசிக்கு
மந்தமில்பேரின்பவீட்டின்றிறவுகோலானதிரு
மந்திரந்தன்னையளித்தேதிறக்கும்வகையுஞ்சொல்லித்
தந்தெனையுய்வித்தவாத்தான்பொற்பாதந்தலைக்கொள்வனே. ()

---

இவ்வம்மையார் ஸ்ரீரங்கயாத்திரை செய்தபொழுது பாடியவை.

ஆசிரியவிருத்தம்

சந்திரசூரியர்களொளிமழுங்கவோங்கித்தயங்குமணிப்பிரணவவிமானத்துள்ளே, யிந்திரநீலங்கமலக்காடுபூத்தோரிரசதவெற்பிற்றுயிலுமியல்பையேய்ப்பச், சந்ததமானந்தமுறத்திகழனந்தசயனமிசைக்கண்வளருமரங்கன்பாதஞ், சிந்தைமகிழ்ந்திருவிழிகள்களிப்பக்கண்டு சேவித்தேனென்வினைகண்மாய்வித்தேனே. (௩)

## இதழகல்.

கட்டளைக் கலித்துறை

கஞ்சத்திருத்தங்ககலனரங்கன்கழலிணையை
நெஞ்சத்திருத்தடியாரடிதன்னைநினைதிசண்ட
னஞ்சத்திருத்தண்டஞ்சென்னியிடானழகார்ந்தகதிர்
செஞ்சத்திருத்தழியாக்கதிசேர்தல்திறனனெஞ்சே. (௪)

பூவேரிமிக்கதருநீழல்வைகும்புலவருங்கை
மாவேறுவோனுமயனுமரனும்வணங்கியுயர்
கோவேறிலையெனப்போற்றரங்கேசன்பொற்கோயிலைச்சூழ்
காவேரிதன்னிற்படிந்தேனென்றீவினைகண்டிலனே. (௫)

---

இவை இவர் திருவேங்கடந் தரிசிக்கச்சென்றபொழுது பாடியவை.

கட்டளைக் கலித்துறை.

நீபுரந்தன்னையெனவருள்வாயெனநெஞ்சிலெண்ணி
*மூபுரந்தீயச்சிரித்தோன்மகன்கைமுகிழ்த்திறைஞ்சு
நூபுரஞ்சேர்திருத்தாள்வேங்கடேசன்றனேன்மைபெறுங்
கோபுரந்தன்னைத்தொழுதேனெனக்குக்குறைவில்லையே. (௬)

---

* மூபுரம் - பழமையான திரிபுரங்கள்.

## ஆசிரிய விருத்தம்

வண்டுகள் துதைந்து தாதினையளைந்தாடியேவழிநறுவுண்டுபாடும்-வாசமிகு வண்டுளபமாலையணிமார்பனே வானளவுயர்ந்தபொழின்மேற் ; கொண்டல்கள் தவழ்ந்துதினமழைபொழியும்வேங்கடக்குன்றமிசைநீலமலைபோற் - கோகனகமலரின்மிசையுறைபிரமனைமுகன்கோலமயிலூர்திகுலிச ; னண்டரொடருந்தவர்கண்மலர்கொண்டருச்சனைசெய்தடிதொழக்கமலமாதோ - டழகாகநின்றருளுமமலனேநாயனேனங்கத்தில்வருபிணியெலா; மெண்டிசையுமிருளகலவருபரிதிமுன்னிமமெனத்தொலைத்தேபவங்க - ளெத்தனைசெய்தாலுமதகற்றியுயர்பரமபதமினிதாயுவந்தருள்வையே. (எ)

கொங்கார்மலர்த்தவிசின்மங்கைவாழ்மார்பமுங்கொண்டனிகர்மேனியெழிலுங் - குலவுமதிவதனமும்படியார்கள்மீதிலருள்குடிகொண்டகமலவிழியும் ; பங்கேருகன்றனைடிவ்வண்டங்கள்யாவும்படைக்குமுந்திக்கமலமும்-பரிதிநிகர்மௌலியும்வளையாழிவாள்வில்கதைபற்றியகரங்களுங்கும் ; கங்காசலம்பெருகுகழலுமென்னிருவிழிகள்கண்டுகளிகூரவெழில்சேர்-கலுழன்மிசைவந்தாவியுடலைவிட்டேகின்றகாலையிற்சேவைதருவாய் ; வெங்கோபமொடுபொருதவேழவெண்கோடுகள்வெடுக்கென்றொடித்தமாலே - விடநாகமுடிமீதுநடமாடுபாதனேவேங்கடத்துறைநாதனே. (அ)

---

இது இவர் சீவரமங்கலயாத்திரையிலியற்றியது.

## ஆசிரியவிருத்தம்.

இயக்கரினிதுறையளகாபுரியைநாளுமிருநிதியால்வென்றெழிலாலமராருரைச், செயிக்கவிண்ணிற்பறக்கநினைந்தளவிலாத்தன்சிறைகள்விரித்தெழுவதுபோற்கொடிகளார்க்கு, மயிற்குலங்கணடித்திடுமேன்மாடஞ்சூழ்சீவரமங்கலம்மெனுமாநகரில்வாழுங், கயற்கண்வரமங்கைபுணர்தெய்வநாதன்கழலிணையையென்னுளுங்கருதுவேனே.

---

இது இவர் ஸ்ரீவில்லிபுத்தூர் யாத்திரையிற் செய்தது.

ஆசிரியவிருத்தம்.

செந்தேனோடுந்தண்பணைகள்செழிக்கும்புதுவைநகர்க்கோதை-செய்யகமலமலர்போலுஞ்சீராரடியைத்தினம்போற்றிப்;பைந்தாதிலகுந்துளவணிந்துபணிந்துமகிழ்வோடவள்கோலப்-பவளக்கனிவாய்மலர்ந்தருளும்பண்சேர்திருப்பாவையைப்புகழ்ந்து; நந்தாவன்போடடிமைசெயுநற்பாகவதர்தமைக்கண்டு - நாடிவலம்வந்திறைஞ்சியவர்நவிலும்ஞானநூல்கேட்டுங்; கொந்தார்சோலைசூழ்திருமுக்குளத்திற்படிந்துபிறவியெனுங் - கொள்ளைக்கடலைக்கடந்தருளாம்வெள்ளக்கடலிற்கிடந்தேனே. (௧௦)

---

இவை இவர் திருத்தங்கலென்னுந் திவ்யதேசஞ்சென்று பாடியவை.

கட்டளைக் கலித்துறை.

காரானைகாத்தகரியானைவாசங்கமழ்துளபத்
தாரானையாவையுந்தானையிரண்டானசதப்
பேரானையார்க்கும்பெரியானைநற்றிருத்தங்கலெனு
மூரானைக்கண்டுதொழுதேனென்றீவினையோடியதே. (௧௧)

ஆசிரியவிருத்தம்.

கன்னல்கமுகெனவளருங்கழனிதோறுங்கடிகமலப்பூவிலனமினிதுவாழு, நன்னயஞ்சேர்திருத்தங்கலப்பன்றன்னைநவமணிகள்குயிற்றியபொற்கோயிலுள்ளே, மின்னுடனேபொலிந்திலகுமேகம்போலவிளங்குசெழுங்கமலமலர்மீதுவாழு, மன்னையுடன்கண்டுகொண்டேன்கருணைநீராலாட்டினனென்வினையையோட்டினனே. (௧௨)

---

இஃது இவர் திருமோகூர்ப் பெருமானைத் தரிசித்துப் பாடியது.

ஆசிரியவிருத்தம்.

மட்டவிழுமலர்ப்பொழில்களோங்கிவானவரம்பையளவிடுந் திருமோகூரினுளுஞ், சிட்டர்தொழுதிடுங்கனகக்கோயிலுள்ளேதிகழ்காளமேகமெனும்பெருமான்றன்னை, வட்டமதிநிகர்வதனமோகூர்வல்லிவஞ்சியிடைக்கோதைநாயகிதன்னோடு, மிட்டமுடனின்றருளக்கண்டேனென்றனிருவினைகளிரியநலமெய்தினேனே. (௧௩)

---

இவை இவர் கூடலழகரைத் தரிசித்தபோது பாடியவை.

ஆசிரியவிருத்தம்

பன்னகவயிரிதோண்மேற்பங்கயச்செல்வியோடு
மின்னுடன்பொலிந்துதோன்றுமேகமேபோலவந்த
நன்னலந்திகழுங்கூடல்நாதனை மதுரையென்னு
மிந்நகர்த்தெருவிற்கண்டேனென்வினைகண்டிலேனே. (கச)

கண்கனிவாய்கரங்கழலாங்கமலமலர்ந்தொருநீலக்கதிர்மாக்குன்றம்
விண்கிரணமணிசூடிவிளங்கியபோலட்டாங்கவிமானத்துள்ளே
பண்கனிந்தமொழிமதுரவல்லியுடனடியார்க்குப்பரிவுகூர்ந்து
தண்கருணைபொழிகூடலழகனிருதாண்மலரென்றலைப்பெய்தானே.

விண்டொடுமாமணிக்கனகமாடத்தும்பர்வெண்மதிதோய்தென் மதுராபுரியினைப்பண், கொண்டல்கிழித்தெழுந்துநவக்கோள்களோடுங்குலமணிவேறறிவரியகோயிலுள்ளே, தண்டரளநகைக்கோதைமதுரவல்லித்தாயொடினிதுறைகூடலழகன்செய்ய, முண்டகமாமலர்ப்பதத்தைத்தொழுதேனென்றன்முற்பவங்களிரியநலமுழுதுற்றேனே.

---

பலசந்தமாலையென்னும் பிரபந்தத்துக்கு இவ்வம்மையாரியற்றிய சாத்துக்கவி.

ஆசிரியவிருத்தம்.

கொண்டல்கிழித்தெழுந்துயர்காமரங்கள்பூத்தகுலமலரின்குழுவெனத்தாரகையைமோந்து, வண்டினங்கள்வெள்கியயர்மருதவேலிவளஞ்செறிசண்பகநல்லூர்வரதன்பாத, முண்டகங்கட்கணியெனயாவருங்கொண்டாடமுதுதமிழாற்பலசந்தமாலைவேய்ந்தான், வண்டமிழின்றுறையுபயமறைவேதாந்தம்வலவனுமனகர்ச்சீனிவாசன்றானே.

---

இன்னுமிவர்பாடியபநுவல்பலவுமிவர்க்கெழுதத்தெரியாமையாலிறந்துபடுகின்றன. மற்றும் புலவர்களியற்றிய அரிய பாடல்களைத் தமிழ்நேயர்கள் வெளியிடவேண்டுகின்றேன்.

ஒரு தமிழ்நேயன்.

---

உ

சிவமயம்.

# மேருமலை.

கந்தபுராணகாரர் பூமியை சம்புத்தீவுமுதலாக ஒன்பது தீவா கப்பகுத்து, அவற்றுள் சம்புத்தீவின் மத்தியிலே மேருமலை உள தென்று கூறுவர். அது:—

"பலவகைப் பிலங்கட் கெல்லாம் பாமதா யுற்ற தொல்பா
ருலகினுள் விரிவுமங்க ணுள்ளவு முரைப்பன் கேட்டி
குலவிய சம்பு சாகங் குசைகிர வுஞ்சங் கோதி
லிலவுகோ மேதகம்புட் காமிவை யேழு தீவே."

எனவும், "விண்ணுயர் சம்புத்தீவி னடுநின்ற மேருவரை செங்கம லப் பொகுட்டுப் போலநண்ணும்" எனவும் கூறியவாற்றுனே அறி யப்படும்.

இம் மேரு பூமியினெப்பகுதியிலுளதென்று நாமாராய்ந்து பார்க்குமிடத்து, ஐரோப்பிய சாஸ்திரிகளால் வடதுருவமென்றழை க்கப்படும் பகுதியே மேருவென்பது நன்கு நிச்சயிக்கப்படும். எங் ஙனமெனின்:—

ஸ்ரீராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த யுத்தத்திலே இந்திர சித்து இலக்குவன்மீது விடுத்த பிரமாஸ்திரத்தினுலே இலக்குவன் முதலியோர் இறந்துகிடக்கும்பொழுது, சாம்பவன் அவர்களை உயிர்ப்பிக்குமாறு மருத்துமலையைக்கொண்டுவரும்படி அனுமனை அனுப் பியபொழுது அனுமன் மேருமலைக்கு அப்புறஞ் சென்று மேற்கே சூரியனைக் கண்டானென்றும், அதனுல் விடிந்துபோயிற்று என்று சந்தேகமுற்றுனென்றும், பின்பு யோசித்து மேருவுக்கு வடக்கேவந் தமையால் இவ்வாறு தோன்றிற்றென்று தெளிவுற்றுனென்றும், இராமாவதாரத்துக் கூறப்பட்டிருத்தலின், அது:—

"அத்தடங் கிரியை நீங்கி யத்தலை யடைந்த வள்ள
லுத்தர குருவை யுற்று ளெளியவன் கதிர்க ளூன்றிச்

செற்றிய விருளின் ருக்கி விளங்கிய செயலை நோக்கி
வித்தகன் விடிந்த தென்ன முடிந்ததென் வேக மென்றான்."

என்பதனானும்,

"காற்றிசை சுருங்கச் செல்லுங் கடுமையான் கதிரின் செல்வன்
மேற்றிசை யெழுவா னல்லன் விடிந்ததுமன்று மேரு
மாற்றினன் வடபாற் றேன்று மென்பது மறைகள் வல்லோர்
சாற்றின ரென்னத் துன்பந் தணிந்தனன் றவத்தின் மிக்கான்."

என்பதனானும் அறியப்படும்.

இனி, இம் மேருவைச் சூழ்ந்துள்ள தீவே சம்புத்தீவென்பது, அனுமன் மேருமலையை அடைந்தபொழுது நாவலந்தீவென்று பெயர்வகித்தற்குக் காரணமாகிய நாவன்மரத்தைக் கண்டானென்றமையானே பெறப்படும். அது:—

"யாவது நிலைமைத் தன்மை யின்னதென் றிமையா நாட்டத்
தேவருந் தெரிக்கி லாத வடமலைக் கும்பர் சென்று
ணவலம் பெருந்தீ வென்ன நளிர்கடல் வளாக வைப்பிற்
காவன்மூன் றுலக மோதுங் கடவுண்மா மரத்தைக் கண்டான்."

என்பதனானும்,

"கடிகெழு நாவலொன்று தென்பானின்ற காரணத்தாற் பாரதன்றன் கண்டமுற்று - மிடனுடைய நாவலந்தீ வெனப்பேர்பெற்ற தித்தருவின் றீங்கனிநீ ராறாய் மேருத் - தடவரையைப் புடைசூழ்ந்து" என்பதனானும், "விண்ணுயர் சம்புத்தீவினடுகின்ற மேருவரை செங்கமலப்பொகுட்டுப் போல நண்ணும்" என்பதனானும் அறியப்படும்.

இனி மேருவுக்கு வடக்கே உத்தரகுருவையும், நீலமலையையுங் கடந்து மருத்துமலையை அனுமன் கண்டதாகக் கூறப்பட்டிருக்கின்றது. அது:—

"இருவரே தோன்றி யென்று மீறிலா வாயு ளெய்தி
யொருவரோ டொருவ ருள்ள முயிரொடு மொன்றே யாகிப்
பொருவரு மின்பந் துய்த்துப் புண்ணியம் புரிந்தோர் வைகுந்
திருவுறை கமல மன்ன நாட்டையுந் தெரியக் கண்டான்."

என்பதனானும்,

"விரியவன் மேரு வென்னும் வெற்பினின் மீது செல்லும்
பெரியவ னயனூர் செல்வம் பெற்றவன் பிறப்பிற் போந்தா
னரியவ னுலகமெல்லா மளந்தாள் வளர்ந்து தோன்றுங்
கரியவ னென்னநின்ற நீலமால் வரையைக் கண்டான்."

என்பதனானும்,

"அற்குன்ற வலங்கு சோதி யம்மலை யகலப் போனான்
பொற்குன்ற மனைய தோளா னோக்கினன் புலவன் சொன்ன
நற்குன்ற மதனைக் கண்டா னுணர்ந்தன னுகமுற்ற
வெற்குன்ற வெறியுந் தெய்வ மருந்தடை யாளமென்ன."

என்பதனானும் பெறப்படும்.

கந்தபுராணகாரரும் மேருவுக்கு வடக்கே நீலமலையென்று கூறுவர். அது:—

"நாற்றிசையின் வரைப்பரப்பும்.........வடபானீலஞ்சுவேத மியற்சிருங்கம்" என்றதனாலறியப்படும்.

மேருவுக்கு வடக்கே உத்தரகுருவும், நீலமலையும், மருத்துமலையும் உள்ளன என்று நிச்சயிக்கப்பட்டமையினாலே, உத்தரகுரு வட அமெரிக்காப்பதியாயிருத்தல் வேண்டுமென்பதும், நீலமலை அதில் வடபகுதியிலுள்ள ஒரு மலையாயிருத்தல் வேண்டுமென்பதும், மருத்துமலை வடஅமெரிக்காவின் தென்பகுதியிலுள்ளதாயிருத்தல் வேண்டுமென்பதும் உத்தேசம். பாரதத்திலும் அருச்சுனன் சென்று உத்தர குருவிலுள்ளாரோடு போர்செய்ததாகக் கூறப்படலின், குடகோளார்த்தத்திலுள்ளவர்களின் கொண்டாட்டம் குணகோளார்த்தத்திலுள்ளவர்களுக்கும் அக்காலத்தும் உளதென்பது நன்குணரக் கிடக்கின்றது. யாதோ ஒரு காரணம்பற்றி இடையில் இக்கொண்டாட்ட மொழிந்திருத்தல்வேண்டும்.

இன்னும் சம்புத்தீவின் பகுதியவாகிய குருவருடமும், இரணிய வருடமும், கிம்புருடவருடமும், வடகடல் முதல் நீலமலை வரைக்கும் மேருவுக்குவடக்கே உள்ளனஎன்றும், அரிவருடமும், கிம்புருட வருடமும், பாரதவருடமும், நிடதமலைதொடங்கித் தென்கடல்வரைக்

கும் மேருவுக்குத் தெற்கே உள்ளன என்றும் கூறப்பட்டிருத்தலாலே நிரட்சரேகைக்கிடையிலுள்ள பூமியே சம்புத்தீவென்பது நிச்சய மாகின்றது. அது:—

"கோதில்வடகடன்முதலாச்சிருங்கங்காறுங்குருவருடஞ்சிருங்கமுதற்சுவேதமட்டு, நீதியிரணியவருடஞ்சுவேதநீலநெடுங்கிரியினடுவெணிரமியமாமேருப், பூதாஞ்சூழ்வருடமிளாவிருதமாகும்பொலிந்தகந்தமாதனமேற்புணரிநாப்பண், கேதுமால்வருடமாலியவான்றொட்டுக்கீழ்கடலினிறுவாய்பத்திரமதாமே."

என்பதனானும்,

"அம்புவியினிசதமுதலேமங்காறுமரிவருடமேமமுதலிமையநாப்பண், கிம்புருடந்தென்கடற்குமிமையமென்னுங்கிரிக்குநடுப்பாரதமாங்கேதுமாலோ, டிம்பர்புகழ்பத்திரமுப்பத்துநாலாயிரநின்றதொன்பதினாயிரமாமெல்லை, யும்பர்தமதுலகனையபாரதமென்னுமொன்றொழிந்தகண்டமெட்டுமுற்றுளோர்க்கே."

என்பதனானும் அறியப்படும்.

இனி இம் மேருவுக்குத் தெற்கே நிடதமென்பதும், அதற்குத் தெற்கே ஏமகூடமென்பதும், அதற்குத் தெற்கே ஆயிரம்யோசனை தூரத்தில் திருக்கயிலாசமலை என்பதும், அதற்குத் தெற்கே எண்ணாயிரம்யோசனை தூரத்தில் இமயமென்பதும், அநுமன் இலங்கையினின்றுந் தென்கடலைக்கடந்து சென்று இமயத்தைக்கண்டு, அப்புறஞ்சென்று கயிலையைக்கண்டு, அப்புறஞ்சென்று ஆயிரம்யோசனையில் ஏமகூடத்தைக்கண்டு, அப்புறஞ்சென்று நிடதமலையைக்கண்டு, அப்புறஞ்சென்று மேருவைக் கண்டானென்பதனாற் பெறப்படும். அது:—

"இமயமால் வரையை யுற்று னங்குள விமைப்பி லோருங்
கமையுடை முனிவர் மற்று மறனெறி கலந்தோ ரெல்லா
மமைகவின் கரும மென்று வாழ்த்தின ரதனுக் கப்பா
லுமையொரு பாகன் வைகுங் கயிலைகண் டுவகை யுற்றான்."

என்பதனானும்,

"வடகுண திசையிற் றேன்று மழுவலா னுண்டு வைகுந்
தடவரை யதனை நோக்கித் தாமரைச் செங்கை கூப்பிப்
படர்குவான் றன்னை யன்ன பரமனும் பரிவிற் பார்த்துத்
தடமுலை யுமைக்குக் காட்டி வாயுவின் றனைய னென்றான்."

என்பதனானும்,

"நாமயோசனைகள் கொண்ட தாயிர நடுவு நீங்கி
யேமகூ டத்தி னும்ப ரெய்தினின் றிறுதி யில்லாக்
காமமே நுகருஞ் செல்வக் கடவுள ரீட்டங் கண்டான்
நேமியன் விசையிற் செல்வா னிடதத்தி னெற்றி யுற்றான்."

என்பதனானும்,

"எண்ணுக்கு மளவிலாத வறிவினே ரிருந்து நோக்குங்
கண்ணுக்குங் கருணைத் தெய்வ மனத்திற்குங் கடியனானன்
மண்ணுக்குந் திசைகள் வைத்த வரம்பிற்கு மலரோன் வைகும்
விண்ணுக்கு மளவை யாய மேருவின் மீது சென்றான்."

என்பதனானும் அறியப்படும்.

சாம்பவன் தென்கடலிலிருந்து ஒன்பதினாயிரம் யோசனைதூரத்தில் இமயமென்றும், அதிலிருந்து ஒன்பதினாயிரம் யோசனைதூரத்தில் ஏமகூடமென்றும் கூறினமையானும், கயிலையிலிருந்து ஆயிரம் யோசனைதூரத்தில் ஏமகூடத்தை அனுமனடைந்தானென்றுங் கூறப்பட்டமையானும், இமயமலைக்கு வடக்கே எண்ணாயிரம் யோசனை தூரத்திலும், ஏமகூடத்திற்குத் தெற்கே ஆயிரம்யோசனை தூரத்திலும் திருக்கயிலாசமலை உளதென்பது நிச்சயமாகும்.

இதுபற்றியே கந்தபுராணகாரரும்,

"போற்றிய கிம்புருடத்தோர்..................ஏமகூடத்தடவரைத் தென்பாலிமையவடபாறன்னிலேற்றமிகுங் கயிலை நிற்கும்" எனக்கூறியதூஉமென்க.

கந்தபுராணகாரரும், இராமாவதாரகாரரும் கூறியபடி இமயத்திற்குவடக்கேயும் ஏமகூடத்திற்குத் தெற்கேயுமுள்ள தேசத்திலே

யே கைலாயமுள்ளதாதலின் அத்தேசம் சீனதேசமென்பதே நிச்சயம்; ஆதலின், அதன்கண்ணேயே, கயிலாசமிருக்கவேண்டும். இமயத்திலிருந்து ஒன்பதினாயிரம் யோசனையில் ஏமகூடமென்றமையால் அம்மலை அல்த்தாய்மலையாயிருக்கலாம்.

அல்த்தாய் (altai - gold) என்பதன்பொருள், பொன். ஏமம் என்பதன்பொருளும் பொன்; ஆதலாலிரண்டு மொன்றாயிருக்கலாமென்பது உத்தேசம். அவ்வாறு கொள்ளுமிடத்து அதற்குத் தெற்கேயுள்ள தியான்ஷான்மலையைக் கயிலாசமென்பதும் உண்மையாயிருக்கலாம். ஏனெனில்,— ஏமகூடத்திலிருந்து தெற்கே ஆயிரம் யோசனையில் திருக்கயிலாசம் உளதென்றமையினாலும் தியான்ஷான்மலையே அல்த்தாய்மலைக்குத் தெற்கேயிருத்தலினாலும் என்க. தியான்ஷான் என்னுஞ் சீனச்சொல்லின் பொருள் கயிலாசமலை என்பது. இங்கிலீஷில் அதனை செலிஷல்மலை (celestial Mountain Heavenly Mountain) என்பர்.

பாரதத்திலும் அருச்சுனன் றவஞ்செய்யப் போனபோது இமயத்தைக் கடந்துசென்று திருக்கயிலாசத்தை அடைந்ததாகக் கூறப்பட்டுளது. அது,—

"அத்திசை யிமைய மென்னு மரசவெற் படைந்து மிக்க
பத்தியோ டம்மை தன்னைப் பயந்தகுன் றென்று போற்றி
சத்திய விரதன் றம்பி தபோவனந் தோறுந் தங்கண்
முத்தழல் வளர்ப்போர் பாத முளரிகண் முடிமேற் கொண்டான்."

எனவும்,

"சாரண ரியக்கர் விச்சா தரர்முதற் பலருஞ் செஞ்சொ
லாரணப் படியே சூழ வடவிக டோறும் வைகி
நாரணன் மலரோ னும்பர் நாயகன் பதங்க ணச்சிக்
காரணத் தவஞ்செய் வோரைக் கண்டுகண் டுவகையுற்றான்."

எனவும்,

"அரியும்வெங் கரியுந் தம்மி லமர்புரி முழக்கங் கேட்டுங்
கிரியினின் முழக்கங் கேட்டுங் கிராதர்போர் முழக்கங் கேட்டு
மெரிகிளர் முழக்கங் கேட்டு மெம்பிரா னிமவான் றந்த
புரிகுழ லோடும் வைகும் புண்ணியப் பொருப்பைச் சேர்ந்தான்."

எனவும் கூறியவாற்றானே அறியப்படும். நிற்க,

மேருமலையின் நடுவிலே பிரமாவினுடைய மனோவதி நகருள தென்றும், அதற்கு மேற்கே விஷ்ணுவினுடைய வைகுண்ட நகரமுளதென்றும், வடகீழ்த்திசையில் சிவனுடைய சோதிட்க நகரமுளதென்றும், எட்டுத்திக்குகளிலுந் திக்குப்பாலகர்களுடைய நகரங்களுளவென்றுங் கந்தபுராணகாரர் கூறுவர். அது,—

"மேருவரை யதற்குநடுப்பிரமன் மூதூர் மிக்கமனோவதியதற்கு மேலைத்திக்கி, னாரணன்வாழ் வைகுண்டம் வடகீழ்பாலிறைதனமர் சோதிட்கந்திசைகளெட்டுஞ்,சீரியவிந்திரன் முதலாமெண்மர்தேயம்"

என்பதனாலறியப்படும்.

இவ்வாறே,—

"அன்னமா மலையி னும்ப ருலகெலா மமைத்த வண்ண
னன்னக ரதனை நோக்கி யதனடு நாப்ப ணுமப்
பொன்மலர்ப் பீடந் தன்மே னான்முகன் பொலியத் தோன்றுந்
தன்மையுங் கண்டு கையால் வணங்கினன் றருமம் போல்வான்."

எனவும்,

"ஆயதன் வடகீழ் பாகத் தாயிர மருக்க ரான்ற
காய்கதிர் பரப்பி யைந்து கதிர்முகக் கமலங் காட்டித்
தூயபே ருலக மூன்றுந் தூவிய மலரிற் சூழ்ந்த
சேயிழை பாகத் தெண்டோ ளொருவனை வணக்கஞ் செய்தான்."

எனவும்,

"தருவன மொன்று வானோர் தலைத்தலை மயங்கித் தாழப்
பொருவரு முனிவர் வேதம் புகழ்ந்துரை யோதை பொங்க
மருவிரி துளப மோலி மாசிலக் கிழத்தி யோடுந்
திருவொடு மிருந்த மூலத் தேவையும் வணக்கஞ் செய்தான்."

எனவும்,

"சந்திர னனைய கொற்றத் தனிக்குடை தலையிற் றூகச்
சுந்தர மகளி ரங்கைச் சாமரை தென்ற லாவ
வந்தர வான நாட ரடிதொழ முரச மார்ப்ப
விந்திர னிருந்த தன்மை கண்டுவந் திறைஞ்சிப் போனான்."

எனவும்,

"பூவலர் மரத்தைப் போர்ப்பப் பொற்பகம் விரிந்து பொங்கும்
தேவர்த மிருக்கை யான மேருவின் சிகரச் சேர்ப்பின்
மூவகை யுலகுஞ் சூழ்ந்த முரட்டிசை முறையிற் றங்கும்
காவல ரெண்மர் நின்ற தன்மையுந் தெரியக் கண்டான்."

எனவும் இராமாவதார காரருங் கூறினர்.

இவ்வாறு பிரமன் முதலிய தேவர்களெல்லா மிருத்தல்பற்றியே இதற்குச் சுராலயமெனவுமொரு பெயர் வழங்குப.

இவ் விஷயத்தைப்பற்றி ஆராய்வது செந்தமிழ்ப்புலவர் கடன்.

சி. கணேசையர்.

---

# A MANUAL OF INDUSTRY
# கைத்தொழிற் கண்ணுடி

(செந்தமிழ்த்தொகுதி கூ: கூ0உ-ம் பக்கத்தொடர்ச்சி.)

---

ஸம்ஸ்கிருதமகாபாரதத்தைச் சுருக்கிப்பெர்ஷியன் பாஷையில் எழுதி 'ரஸம் நாமா' என்று பெயர்வைத்திருக்கிருர்களென்று முன்னரோ குறித்திருக்கிறோம். அந்தப் புத்தகத்தின் பிரதியொன்று ஜயப்பூர் ஸம்ஸ்தானத்துப் புத்தகபண்டாரத்தில் இருக்கிறது. அதனுள் 169-படங்கள் (ஒவ்வொன்று ஒவ்வொருபக்கமடங்கியது) இருக்கின்றன. அவற்றுள், ஆறுபடங்களைப்பொறுக்கியெடுத்துப் பெயர்த்தெழுதிப் பெரிதாக்கி ஜயப்பூர் ஸம்ஸ்தானத்துக்காட்சிச்சாலையில் வைத்தார்கள். அவற்றுள், இரண்டுபடங்களின் விஷயத்தை இங்கு விவரிப்போம்:—

1. யுதிஷ்டிரச்சக்கரவர்த்தியைத்தேவர்கள் நரகத்தின் வழியாக அழைத்துக்கொண்டுபோவது; அங்கே பாபிகளாயினோர் படுந்துன்பங்களைக்கண்டு அவர் உடல் நடுங்கிப் பின்திரும்ப யத்தனிப்பது; உடனே, கோரமான அந்தக் காட்சி மாறி இனிமையான புலங்களும் அழகிய சாலைகளும் தோற்றுவது; அவரைச் சுவர்க்கத்திற்கு அழைத்துக்கொண்டுபோவதற்காக அங்கிருந்து தேவர்கள்

வருவது. அவருடைய ஆயுளில் ஒரு தடவை யுதிஷ்டிரர் உண்மைபேசத்தவறியதற்குத் தண்டனையாக அவருக்கு நரகதரிசனம் நேர்ந்தது என்பார்கள்.

2. நாலாயிரம் வருஷத்திற்கு முன்னால் யுதிஷ்டிர சக்கரவர்த்தி தம் இஷ்டர்களுக்கு அளித்த ராஜாங்கவிருந்து; அது, அசுவமேதயாகம் செய்வதற்குமுன்னர், குதிரையைப்பிடித்து மடக்கக்கூடியவர் மடக்கலாம் என்று சீட்டு எழுதிக் குதிரையை விடுக்குந்தருணத்திற்செய்தவிருந்தாகும். அந்தப் படத்தில் செங்கல்லினுற்கட்டிய பெரிய மாளிகையொன்று புலப்படுகிறது. அதற்கு முன்புறத்தில் ஸம்ஸ்தானத்து வாத்தியக்காரர்கள் தத்தம் வாத்தியங்களை வாசித்துக்கொண்டிருக்கிறுர்கள். வெளிமண்டபத்தில் ராஜகுடும்பத்து ஆண்மக்களும் கிருஷ்ணனும் மற்றுமுள்ள சிநேகிதர்களும் விருந்து அருந்துகிறுர்கள்; அந்தணர், தோளினின்று பூணூல்தொங்கியாட, பலபல திவ்ய பதார்த்தங்களைப்பரிமாறுகிறுர்கள்; எல்லாரும் சித்திராலங்காரம்பெற்ற தட்டுகளையும் கிண்ணங்களையும் வைத்துக்கொண்டு சாப்பிடுகிறுர்கள். அந்தப் பாத்திரங்கள் கூஜாக்களில் ('ஸுராஹி' களில்) நிரப்பிய பரிமளநீரினுல் கழுவப்பெறுகின்றன. மற்றொருபக்கத்தில் இடைச்சியொருத்தி தயிர்ப்பானையைக்கூடையில் வைத்துக்கொண்டு வந்திருக்கிறுள்; அரமனைச்சேவகனொருவன் போய் அவளுடைய தலையிலிருந்து தயிர்ப்பானையை இறக்குகிறுன். உள் மண்டபத்தில் அந்தப்புர ஸ்திரீகள், விசித்திராலங்காரமான ஆடைகள் அணிந்து, நவரத்நகசிதமான திவ்யாபரணங்கள்பூண்டு விருந்துண்ணுகிறுர்கள்; பஞ்சவர்பத்தினியாகிய திரௌபதி அங்கே இருக்கிறுள்; காந்தாரி விசனப்பட்டுக்கொண்டு, கன்னத்திற்கையை வைத்துக்கொண்டு, ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறுள்; விவாககாலத்தில் அவள் தன் கண்களை மறைத்துக்கட்டிக்கொண்ட கட்டு அப்படியே இருக்கிறது. அவளுடைய கணவன் குருடனுதலின், அவன் அனுபவியாத கட்புலனை அவளும் அனுபவிப்பதில்லையென அவள் தன் கண்ணைக்கட்டிக்கொண்டாள்.

இந்தப் படம் 'ஜர்னல் ஆப் இண்டியா ஆர்ட்டு (Journal of India Art.)' என்னும் பத்திரிகையில் லண்டன் நகரத்திற் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அப்படிப்பட்ட படங்களின் பிரதிகள் வேண்டுவோர் ஜயப்பூர் ஸம்ஸ்தானத்து வைத்திய இலாகாத் தலைவருக்கு எழுதிப்பெறக் கூடும்.

அந்த மாதிரியான சிறு படங்கள், கடுதாசியில் எழுதியவை, டில்லியிலுள்ள தந்தச் சித்திரக்காரர்கள் இன்னும் செய்கிறார்கள். ஆக்பர் மகாசக்கரவர்த்தியின் ராஜசபைப்படமொன்று ரூபா 100-க்குக் கிடைக்கும்.

மேற்சொல்லிய முறையாகவே ஜயப்பூரிலும் படங்கள் எழுதுகிறார்கள். அவை காகித அட்டையிலும், தளமான கடுதாசியிலும், மெல்லிய தோல்களிலும் எழுதப்படுகின்றன.

பிரகாசமான வர்ணங்கள் பொருந்திய படங்கள் ஜயப்பூர் ஸம்ஸ்தானத்திற் பல இடங்களில் ஏராளமாகச் செய்யப்படுகின்றன. அவற்றுள், சிறந்தவைகளும் உள, மட்டமானவைகளுமுள, நடுத்தரமானவைகளுமுள, ஒவ்வொரு பிரபுவும் தம் பரிவாரத்தில் ஒரு சித்திரக்காரனை வைத்துக்கொண்டிருக்கிறார். ஜயப்பூர் பட்டணத்திலுள்ள சாமானியர்கள் (செல்வவந்தர்களுமல்லர், ஏழைகளுமல்லர்) பலர் சித்திரப்படங்களின் வியாபாரமே தொழிலாக இருக்கிறார்கள். கைதேர்ந்த சித்திரக்காரர்கள் ராஜதானியில் வசிப்பது இயற்கையே. அவர்களுள் பிரபலமானவர்கள் அரசனிடத்தில் உத்தியோகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வருஷாசனங்களோ மானியங்களோ ( பூமிகளோ ) விடப்பட்டிருக்கின்றன. அரமனையில் வேலையில்லாதகாலத்தில் அவர்கள் வெளியில் வேலைசெய்து சம்பாதிக்கச்சுதந்திரம் உண்டு. அந்த அரமனையுத்தியோகம் பெரும்பான்மை பரம்பரையாக வருவது; மகனுக்குச் சித்திரவேலை தெரிந்திருந்தால் தந்தையின் உத்தியோகம் அவனுக்குக் கிடைக்கும். இதர ஸம்ஸ்தானங்களில் சித்திரவேலைசெய்வதற்காக ஜயப்பூர் ஸம்ஸ்தானத்தார் தம் சித்திரக்காரரை அனுப்புவதுண்டு. ஜோத்பூர் (ஜோதிப்பூர்) ஸம்ஸ்தானத்திலுள்ள அழகிய அரமனை ஜயப்பூர் சித்திரக்காரனால் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. புராண விஷயமான படங்கள் சுலபமாக விற்பனையாகின்றன.

அந்தச் சித்திரக்காரருள் மிக முந்தினவர்கள் இப்பொழுது இந்தியதெய்வங்களுக்கு ஐரோப்பிய ஆடையணிந்து அதற்குரிய அலங்காரங்களை அமைக்கிறார்கள். அப்படி எழுதப்பெற்றவைகளுள், திரிமூர்த்திகளுள் சங்காரதத்துவமாகிய சிவபிரான் கண்ணாடிக்கூடுகளில் ஏற்றிய மெழுக்குவத்தி விளக்குகளினால் அலங்கரிக்கப்பெற்ற கொலுமண்டபத்தில் (ஹால்) உட்கார்ந்திருப்பதாக ஒரு படம் உளது; திரிமூர்த்திகளுள் ரக்ஷகதத்துவமாக விளங்கும் விஷ்ணுவின் அவதாரமாகிய கிருஷ்ணபகவான் 'பீடன்' வண்டியில் நண்பர்களுடன் பரிவார சகிதமாகச் சவாரிபோவதாக ஒருபடம் உளது.

அதிகமாக விற்பனையாகும் படங்களாவன:—விஷ்ணு அவதாரங்கள், சிவபடங்கள், துர்கா (சக்தி) பிம்பங்கள், சிக் (சிக்ஷக) ஜாதியாரின் குருக்கள்மார், ஜைனர்களின் தீர்த்தங்கர்கள், ரஜபுத்திரர்களுக்கு நடக்கும் ஒவ்வொரு ஸம்ஸ்காரத்தையும் விவரித்துக் காட்டும் படங்கள், ஜயப்பூர் மகாராஜாவின் படம், வாத்திய ஜமாக்கள், வியாபாரிகளின் படங்கள், தொழிலாளிகளின் படங்கள் (பலவகையான முகங்களுடன்—காசிப்பட்டணத்தில் ஒவ்வொருவகை வியாபாரிக்கும் ஒவ்வொருவிதமான முகம் எழுதுவார்கள்); பிரசித்த புருஷர்கள், ஆசாரியர்கள், அவரவர்களுடைய ஜாதிக்குரிய ஆடையாபரணங்கள் அணிந்த ஸ்திரீகள் முதலியவர்களின் படங்கள்—ஆகிய இவைகளாம்.

அவற்றுள், முதல்தரமான படங்கள் இங்கே குறித்திருக்கும் விலைகளுக்குக் கிடைக்கும்;—

| | | | ரூ |
|---|---|---|---|
| மகாகாளி (பராசக்தி) | ... | ... | 21 |
| ஜயப்பூர் இராஜா படம் | ... | ... | 8 |
| ருஸ்தாம் என்னும் பெயர்பெற்ற மல்லன் படம் | | | 3 |
| கிருஷ்ண படம் | ... | ... | 4 |

ஜயப்புரத்துப்படங்களைப்போலவே பிகானீரிலும் செய்கிறார்கள். பிகானீர் என்பதும் ராஜபுதனத்துச் சம்ஸ்தானங்களுள் ஒன்றாகும். விலைகள் ஒரு ரூபாமுதல் நூறுரூபா வரையில் இருக்கின்றன.

மத்திய இந்தியாவிலுள்ள அலிபுரத்திலும் (Alipura) தாத்தியா (Datia) விலும் விசித்திரமான நீர்ச்சாயைப்படங்கள் எழுதுகிறார்கள். புலியானது மானைப்பிடிப்பதாக எழுதியபடமொன்று (அது முழுதும் பெர்ஷியன் முறையிலெழுதியது) கலோனியல் அண்டு இண்டியன் எக்ஸிபிஷனுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

லாகூரிலுள்ள தோதாராம் (Tota Ram) என்பவன் வெகு நேர்த்தியாக நீர்ச்சாயைப்படங்கள் எழுதுகிறான். அவனுடைய படங்களின் விஷயங்களும் புராணசம்பந்தமானவைகளே. அவன் எழுதிய படங்களெல்லாம் இண்டியன் மியூசியத்திலிருக்கின்றன. அவற்றுள், ஒன்றில் ஆரியத் தவசிகள் தவம் செய்வதும், அதிசூக்ஷ்மமான குண்டலினிசக்தியையெழுப்புவதும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. மற்றொருபடத்தில் அவன், நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னால், குருக்ஷேத்திரத்தில் நடந்த யுத்தத்தை வர்ணித்திருக்கிறான். அந்தப் படம் மிக நுட்பமாகவும் வெகு அழகாகவும் எழுதப்பட்டிருக்கிறது; அதில் பலவகை வர்ணங்கள் (சாயங்கள்) மிகச் சிறப்பாக அற்புதமாய் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. லாகூர் நீர்ச்சாயைப்படங்களின் விலைகள் வருமாறு:—

| | | ரூ |
|---|---|---|
| குருக்ஷேத்திர யுத்தம் | ... | 80 |
| கௌரவராஜ சபை | ... | 70 |
| கம்ஸவதம் | ... | 40 |
| காளிநாக மதனம் | ... | 40 |
| சீதையின் சிறையிருப்பு | ... | 30 |
| வராக அவதாரம் | ... | 30 |
| நரசிம்மாவதாரம் | ... | 15 |
| வாமனாவதாரம் | ... | 25 |
| ஜகந்நாத படம் | ... | 7 |

தேசாசாரங்களை விளக்கும் படங்கள் பஞ்சாப் மாகாணத்தில் ஜலந்தர் ஜில்லாவில், ஜங்கு (Jhang) என்னும் ஊரிலும் நவாஷஹர் (Nawashahr) என்னும் ஊரிலும் எழுதுகிறார்கள்; புராண விஷயமான படங்கள் காங்க்ராவிலும் (Kangra), கபூர்த்தலா (Kapurthala) விலும் எழுதுகிறார்கள்.

நேபாளத்தில், கோவில்கள், மண்டபங்கள், மடங்கள், தேவர்கள், தேவதைகள் முதலிய விஷயங்களை வர்ணங்களோடு எழுதுகிறார்கள். அந்தப் படங்களெழுதும் சாதியாருக்கு 'நேவார்' என்று பெயர். சித்திரக்காரர்கள் என்பவர்கள் அவர்களே. அவர்கள் எழுதும் படங்கள் சுத்தமாகவும் அழகாகவும் இருக்கும். வர்ணங்கொடுத்திருப்பதும் கொஞ்சம் மனோஹரமாகவே இருக்கும். ஆனால், அவைகளில் ஆழ்ந்த கருத்து அகப்படாது.

அந்த மாதிரியான படங்கள் சென்னைராஜதானியில் ஹம்பஸாகரத்திலும் (பல்லாரி ஜில்லா), அனந்தப்பூரிலும் செய்கிறார்கள். நீர்ச்சாயையில் எழுதிய கிருஷ்ணபடமொன்று கல்கத்தா இண்டர்நாஷனல் எக்சிபிஷனுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதில் சிவப்பு, நீலம், தங்கவர்ணம் ஆகிய மூன்றும் அமைந்திருந்தன; கிருஷ்ணமூர்த்தி ஒரு கையினால் வெண்ணெய்த்தாழியை அணைத்துக்கொண்டு சிங்காதனத்தில் வீற்றிருக்கிறார்; இருபுறத்திலும் கோபிகைகளிருவர் ஸரஸமாடிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் படத்தில் ஜோடனைகள் மேலே ஒட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 132.

சில நாளைக்கு முன்னர் வங்காளத்திலுள்ள (Patua) பாட்வா என்னும் ஜாதியார் உயர்தரமான நீர்ச்சாயைப்படங்கள் எழுதிவந்தார்கள். அந்தப்பாட்வா ஜாதியார் பூஜை செய்வதற்கான தேவதாபடங்கள் எழுதுவதும் உண்டு. பூஜைப்படங்களில் வர்ணங்களின் அமைப்பு நன்றாக இருக்கும்; வர்ணங்களைக்கூட்டுவதிலும் வர்ணங்களைக்கிரமப்படி அமைப்பதிலும் அவர்கள் வெகு ஜாக்கிரதையாகவும் நுட்பமாகவும் வேலைசெய்வார்கள். ஆனால், இப்பொழுது கல்கத்தா சித்திரகலாசாலையிற்படித்துத் தேறிய சித்திரக்காரர்கள் தேவதாபடங்களெழுதி, (Lithograph) கல்லிற்பதித்துப் பிரதிகளெடுத்துச் சரசமான விலைக்குப் படங்களை விற்பதனால் பாட்வாக்களின் தொழில் க்ஷீணதசையிலிருக்கிறது. ஆயினும், பழையமாதிரியான படம் வேண்டுமானால் பத்துரூபாமுதல் அதிகமான விலைகொடுத்து எழுதுவிக்கலாம்.

(இன்னும் வரும்)

தேசசஞ்சாரி.

---

உ

# வானசாஸ்திரம்.

(செந்தமிழ்த்தொகுதி ௬: ௩௦௭-ம் பக்கத்தொடர்ச்சி.)

முன்னர்ப் பொதுவாகக் கிரகங்களைப்பற்றிப் பேசினோம். இந்தியர்கள் பூமிக்கு நடுவாயும், அதனைச்சுற்றியும் மற்றைக்கிரகங்கள் ஓடுவதாகக்கணக்கிட்டிருக்கின்றனர். ஆயினும், கோபிரனிக்கஸ் என்னும் ஐரோப்பிய வானசாஸ்திரியினது முறையைப் பின்பற்றி நடக்கும் முறைப்படி சூரியன் நடுவாகவும் அதனைச் சுற்றியே அதனுடைய அந்நியோந்நிய ஆகர்ஷணசக்தியால் மற்றைய கிரகங்கள் ஓடுவதாகக் கணக்கிட்டிருந்தாலும், கணிதத்தில் ஒன்றற்கொன்று வேறுபாடு காணப்படுவதில்லையென்று சொன்னோம். அவைகளைப்பற்றி அந்தந்தக் கிரகங்களை வியவகரிக்கும்போது விஸ்தாரமாகக் குறிக்கப்படும்.

இந்த வானசாஸ்திரமே இரு பிரிவாக ஏற்பட்டிருக்கின்றது; அவற்றில், ஒன்று சௌரகணம் என்றோம். அதாவது, சூரியன் நடுவாகநிற்க அதனைச்சுற்றி மற்றைய கிரகங்கள் மாத்திரஞ்சஞ்சரிப்பது. மற்றொன்று தாராகணம். அதாவது நக்ஷத்திரமுதலியவற்றைப்பற்றிச் சொல்லுவது. எல்லாவற்றிற்கும் ஆதித்தனது சக்தியே மூலமாயினும். ஆதித்தனைச்சுற்றி இத் தாராகணங்கள் ஓடாது; இவைகள் வெவ்வேறு கதியையுடையனவா யிருக்கின்றன. இவைகளைப்பற்றி வியவகரிக்கும்போது விரிவாய்ச் சொல்வோம். முன்னர்ச் சௌரகணத்தைப்பற்றி யாராய்வோம்.

1. மிக்க பிரகாசமுடையதாய், மற்றையவைகளைக் காட்டிலும் மிக்க குறைவான சலனமுடையதாய் எல்லாவற்றிற்கும் பெரியதாயிருப்பது சூரியன்; இது மத்தியிலுள்ளது.

2. இதனைச்சுற்றி வட்டமாக ஓடுவன சிறிதும் பெரிதுமான நூற்றைம்பத்துநான்கு கிரகங்கள். அவைகளுள்,

i சிறியனவாயும் சூரியனுக்கு அதிகச் சமீபத்திலுள்ளனவாயுமிருப்பன புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய்.

ii அதிக தூரத்திலிருப்பன குரு, சநி, விமந்தன், பிரமந்தன்.

iii செவ்வாய்க்கும் வியாழனுக்கும் நடுவிலிருப்பன அநேக நக்ஷத்திர மாலைகள்.

3. மேற்கூறியகிரகங்களைச்சுற்றியோடும் உபக்கிரகங்கள் பல. அவைகளுள், முக்கியமானவை பூமியைச்சுற்றிச் சந்திரன் ஒன்றும், குருவைச்சுற்றி நான்கும், சநியைச்சுற்றியெட்டும், வியாழனைச்சுற்றி நான்கும், பிரமந்தனைச்சுற்றி நான்கும் ஓடுகின்றன.

4. ஏறக்குறையப் பதினைந்து தூமகேதுக்கள், குறிப்பிட்ட காலங்களில் தோன்றுகின்றன. இவைகளும், சூரியனைச்சுற்றிப் பிரவர்த்தனம் செய்கின்றன என்பது நிதர்சனமாகின்றது.

இவைகளேயன்றி இராக்காலங்களில் ஆகாயத்திலிருந்து பூமியைநோக்கி விழக்காணும் எரிகொள்ளிகளும் இவைகளைச்சேர்ந்தன.

சூரியன் முதலாக எல்லாக்கிரகங்களும் உருண்டையாகவிருப்பதோடு, ஒருபுறம் சாய்வாகத் தட்டையாயுமிருக்கின்றன. இவைகள் பூமிசுற்றுவதுபோலவே எல்லாம் ஒரேபுறமாகத் தன்னைச்சுற்றியேயோடுகின்றன. இதற்குப் பிரமணம் அல்லது (Rotution) என்று பெயர். யந்திரசாலைகளில் ஒருசக்கரந் தன்னைச்சுற்றுமாயின் அதன்சம்பந்தமுள்ள மற்றொரு சக்கரமும் சுழலுவதுபோலவே, கிரகங்களும் தாமே சுற்றிக்கொள்வதுமன்றி மற்றொன்றையும் சுற்றச்செய்கிறதென்பதை யூகித்துக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்குப் பரிவர்த்தனம் (Revolution or Translation) என்று பெயர். கிரகங்களெல்லாம் வலமிடமாகவே வட்டரேகையிற் சுற்றுகின்றன. பூமியானது தன்னைத்தானே சுற்றும்போது, மேற்கிலிருந்து கிழக்கே செல்ல நாம் காண்கிறோம். சாதாரணமாக ரயிலில் ஏறிப் பிரயாணம் போகும்போது நமது வண்டியோட, நமக்குப் புலப்படும் தந்திமரம் முதலியவை ஓடுவதாகக் காண்கிறோம். அல்லாமலும், ஒருஸ்டேஷனில் வண்டிகள் இரண்டு நிற்கும்போது, ஒருவண்டியோ

டுமாயின், அந்தவண்டியிலிருப்பவர்களுக்கு நிற்கும்வண்டியோடுவ தாகப்புலப்படும்; அப்படியே பூமி சுழலுவது நாங்காணும் சூரியன் முதலிய கிரகங்கள் சுற்றுவதாகவும், கிழக்கிலிருந்து மேற்கே செல்லுவதாகவும் காண்கிறோம். உண்மையில் பூமி மேற்கேயிருந்து கிழக்கே செல்லுகின்றது. அதாவது வலமிடமாகச் சுழலுகிறது.

கிரகங்கள் விருத்தமாகவோ அல்லது சற்றேறக்குறைய வேறு விதமாகவோ சுழலினும், அவை சூரியனைச்சுற்றியோடும்போது அச்சுரேகையில் (Axis) சலனதலத்திற்கு நேரேநில்லாமற் சற்றுச் சாய்ந்திருப்பதால் ஒன்றையொன்று தொடாமல் ஓடுகின்றன.

சூரியகதிரேகைக்கு பூமி பாகை 23. கலை 30-ம்

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய் | ... ... 1. 51. | சுக்கிரன் | ... ... 3. 23. |
| புதன் | ... ... 7. 0. | சனி ... | ... ... 2. 29. |
| குரு ... | ... ... 1. 19. | பிரமந்தன் ... | ... 1. 47. |

விமந்தன் ... ... 0. 46-ம் சாய்வாக ஏற்பட்டிருக்கின்றன. எல்லாக்கிரகங்களும் ஒரே குறுகினவிடத்தில் ஒன்றையொன்று தட்டாது சஞ்சரிப்பதால் அதற்கு ஆகாயமண்டலமென்றும், அம்மண்டலத்தை 360-பாகமாக்கி அவற்றுள் 30-பாகத்தைப் பன்னிரண்டு இராசிகளாகப்பிரித்து அதற்கு இராசிமண்டலமென்றும் பெயரிட்டிருக்கின்றனர். இவ்வாறு பொதுவாக இவைகளைப்பற்றி இதுவரையிற் பேசினோம்; இனி ஒவ்வொன்றையுந் தனித்தனியாகவெடுத்துரைப்பது முறையாகையால் முதலாவது சூரியனை யெடுத்துக்கொள்வோம்.

### சூரியன்.

எல்லாவற்றையும்விடப்பெரியதும் மிக்க பிரகாசமுடையதும் பூமியையடக்கியாளுங் குணமுடையதும், நமக்கும் நம்மையடுத்திருக்கும் கிரகங்களுக்கும் ஒளி, உஷ்ணம் முதலியவற்றைக் கொடுப்பதும் சூரியனே இச்சூரியனுடைய சக்தி பூமியிலும் மற்றைக் கிரகங்களிலும் நடக்குங்காரியங்கள் சரிவர நடப்பதற்கு ஏதுவாகின்றது. இவ்வளவு காரியம் நடப்பதற்குச் சூரியனிடத்திருந்து எட்டும் சக்தியோ இரண்டாயிரத்து முந்நூறுகோடியிலொருபாகந்தான்; மற்

றையவை எங்குச்செல்கின்றனவோ ; இப்பூமண்டலம் கிரகிக்கக்கூடிய தவ்வளவுதான். அந்தப்பாகத்தாலுண்டாகுஞ் சக்தியாலேயே இவ்வளவுகாரியங்களும் நடக்கின்றன. இச்சூரியனுடைய காந்தியாலேயே குரு, சுக்கிரன் முதலிய கிரகங்கள் கட்டியாகிக் கிரகங்களாகின்றன. இச்சூரியனை ஒரு தகப்பனையும், மற்றைய கிரகங்களை யவனுக்குப் புத்திரர்களாயும் ஒப்பிடலாம். நமக்கு இப்போது தெரியவேண்டியது அச்சூரியனுடைய குணம், பரிமாணம், பிரமணம் முதலியவைகளேயாம்.

இச் சூரியனது ஒளியை நாம் நேரே கண்ணாற் பார்த்துச் சகிக்கமாட்டோமென்பது யாவருமறிந்த விஷயம். இதிலொரு ஆச்சரியமுமில்லை ; ஏனெனில், சூரியனது ஒளியானது சந்திரவெளிச்சத்தைக் காட்டிலும் எட்டு இலக்ஷம் மடங்கு அதிகமுடையதாக விருக்கின்றது. இதுவரையில் காணப்பட்டுக் கணக்கிடப்பட்டிருக்கும் தாராகணங்களுள் மிகப்பெரிதென மதிக்கப்படுவதும், திருவோண நக்ஷத்திரத்திற்குச் சிறிது வடமேற்காகக் காணப்படுவதுமான வேகா (vega) என்னும் நக்ஷத்திரத்தினது ஒளியைவிட இருபத்திராயிரம் கோடிபாகம் அதிகமாகவுமிருக்கின்றதென்று கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அதனை நாம்பார்க்கவேண்டுமானல் மப்புமாசுகள் மறைக்கும்போது பார்க்கலாம். சாதாரணமாகத் தூரதிருஷ்டிகொண்டு பார்க்கலாமென்றாலோ, கண்ணாடிக்கே சூரியகிரணங்களைக் கிரகித்து ஒருமைப்படுத்திக்காட்டுங் குணமுடைமையால் நிச்சயமாக அக்கிரணங்கள் கண்ணிற்பாய்ந்து கண்ணைக்கெடுத்துவிடும் ; அதற்காக வர்ணக்கண்ணாடிகளைப் பூட்டி அதற்குமேல் தூரதிருஷ்டிகொண்டு பார்ப்பது வழக்கம்.

இப்படிக் கண்கூடாகப் பார்க்கும்போது சூரியன் விருத்தவடிவாயிருப்பதாகத் தெரிகிறது. மேல்நாட்டிலுள்ள வானசாஸ்திரிகள் அதிநுட்பமான கருவிகள்கொண்டு சோதித்து சூரியன் இதேமாதிரியாகப் புலப்படுவதோடு, அது தன்னைத்தானே சுற்றிக்கொள்வது நிச்சயம் ; அது சுற்றும்போது பலபாகங்கள் தெரிகின்றன. அவைகளில் வித்தியாசம் காணப்படாமையால், சூரியனும் ஒரு கோளவடிவினது என்றே கொள்ளுகிறோம் என்கின்றனர். காலையில் சூரியன்

உதயமாகும்போதும், மாலையில் அஸ்தமிக்கும்போதும் மாசு மறைப் பின்றிச் சூரியனைப் பார்ப்போமாயின், அப்பொழுது மத்தியான்ன காலங்களிற் பார்ப்பதைவிடப் பெரிதாயும் விகற்பமுடையதாயும் புலப்படுகிறது; இது நமது கண்ணுக்குப் புலப்படும் தோற்றமே யொழிய உண்மையில், அப்படியில்லையென்பதைப் பின்னர் விவகரிக் கப்படும்.

சூரியன் ஒருமாதத்திற்கு ஒருமாதம் வித்தியாசமாகக் காணப் படுமென்பது ஒரு துணிபு. பூமி தன்னைத்தானே சுற்றுவதன்றிச் சூரியனையும் சுற்றுகிறதென முன்னரே சொல்லப்பட்டிருக்கிறது. உத்தராயண தக்ஷிணயனங்கள் உண்டாவதே இதற்குப்போதிய சான்றாகும். இந்துக்கள், பூமி நடுவாகவும், சூரியனும் மற்றைக்கிர கங்களும் பூமியைச் சுற்றியோடுகின்றனவென்றும் கொண்டிருக்கி ன்றார்கள்; ஆகையால், கிரகங்கள் சுழலுகின்றனவென்ப துண்மை; இவ்வுண்மையைக்கொண்டு சூரியன் நடுவிலிருக்கப் பூமி சுற்றுமா யின், அச்சூரியனுக்குச் சமீபமாக ஒருகாலம் செல்லும்; அதுபோ லவே, ஒருகாலம் தூரத்திற்செல்லும்; ஆகையால், அக்காலங்களில், காலத்திற்குத்தக்கபடி சிறிது பெரிதாகப்புலப்படும். இதுவன்றி ஒரு பொருளைச் சமீபத்திலோ தூரத்திலோ நின்று பார்ப்பதற்குத் தக்கபடி அதன்வடிவம் மாறிவருமென்பது நாமெல்லோரும் அறிந் ததே. அதன்படி சூரியன் பல கிரகங்களினின்று பார்க்கும்போது அததற்குத்தக்கபடி புலப்படும்.

புதனிடத்திருந்து பார்க்கும்போது எல்லாவற்றையும்விடப்பெரி தாயும், அந்த வரிசைக்கிரமத்தில், சுக்கிரன், பூமி, செவ்வாய், குரு, சநி, விமந்தன், பிரமந்தன் முதலியவற்றிலிருந்து பார்க்கும்போது வரவரச்சிறிதாயும் காணப்படும். இவைகளிற் பிரமந்தனிடமிருந்து பார்க்கும்போது மிகச்சிறிய நக்ஷத்திரம்போலும், குருவினின்று பார்க்கும்போது நமக்கு சுக்கிரன் புலப்படுவதுபோலவுங் காணப்படு கிறது.

இப்படிக் கிரகங்களினின்று நோக்குப்போது சூரியன் பெரிது சிறிதாகக் காணப்படினும், ஒளியும் உஷ்ணமும் வேறுபடுவதில்லை.

அக்கிரகங்களுக்கு எவ்வளவு சக்தியோ அவ்வளவுதான் வாங்குகின்றன. ஒரு கிரகத்தின் பரிமாணம் அறியவேண்டுமோயின், நாம் சாதாரணமாகப் பார்ப்பதைக்கொண்டே சொல்லிவிடக்கூடாது. நமக்கும் பார்க்கப்படும் வஸ்துவுக்கும் தூரம் எவ்வளவிருக்கிறதென்பதைத் தெரிந்துதான் அதன் பரிமாணத்தை நிச்சயம் செய்யவேண்டும். ஆகையால், முதலிற், சூரியனுக்கும் பூமிக்கும் எவ்வளவு தூரமிருக்கிறதென்றும், மற்றைக்கிரகங்களுக்கும் சூரியனுக்கும் எவ்வளவு தூரமிருக்கிறதென்றுங் கவனிக்கவேண்டும்.

(இன்னும்வரும்.)

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

---

உ

# புத்தகக்குறிப்பு.

மதனகாந்தி:—ஒரு தமிழ் நாவல். இது ஆரணி ஸ்ரீமத்-குப்புசாமி முதலியாரவர்களால், ஆங்கிலக்கவிகளியற்றிய நாவலின் கதைப்போக்கைத் தழுவி இனிய தமிழ்நடையிலெழுதப்பெற்றது. இது கற்பவருக்குச் சமயோசிதமான புத்திசாமர்த்திய முதலியவற்றை யுண்டாக்குவதோடு கடவுளை நம்பினோர் கைவிடப்பெறார் என்னும் மூதுரையைக் கடைப்பிடித்தொழுகிய மதனகாந்தியின் கலங்கா நிலைமையும், நற்குணங்களும், நற்சிந்தையு மெளிதிலுண்டாகுமென்று கூறுவதற் கையமின்றாம். இத்தமிழ்நடை யேனைய நவீன நடைகள் போலாது அரும்பொருளைப் பயப்பிப்பதோடு பாலர்முதல் யாவருக்கும் எளிதில்விளங்கும் வண்ணம் மிளிர்கின்றது. இது நல்ல காகிதத்தில் நல்ல லிபிகளாற் பதிக்கப்பெற்று உஉச-பக்கங்களடங்கியுள்ளது. வேண்டுவோர் புதுமண்டபம் புக்ஷாப் கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களிடத்திற் பெற்றுக்கொள்ளலாம். இதன்விலை ரூ 1.

**English-Tamil Etymological Dictionary:—** (ஆங்கிலத்தமிழ்ச்சொல்லகராதி) நம்மவர்க்குத் தாய்மொழி தமிழேயாயினும் இராஜபாஷை ஆங்கிலமாயிருத்தலினாலும், தேயமெங்கும் அப்பாஷையே பரவிவருதலினாலும், தற்காலத்திற்குவேண்டுவனவாகிய சயன்ஸ் முதலிய சாஸ்திரங்கள் அப்பாஷையிலேயே இருப்பதனாலும் நம்மவர் அதனையே மிகவும் பயின்றுவருகின்றனர். அதுவன்றியு மாங்கிலேயர்கள் தங்கணாட்டைவிட்டு நந்தேயத்தின்கண் வந்து உத்தியோகம் வியாபாரமுதலிய பல்வகையான தொழின்முறைகள் செய்துவருவதால், அவர்கள் நந்தமிழ்ப் பாஷையைக் கற்கவேண்டிய தவசியமாகின்றது. இவ்விருதிறத்தாரும் இவ்விருமொழியைப் பயிலும்போழ்து முட்டின்றிப் பொருள் தெரிந்துகொள்வதற்குச் சாதகமாக இவ்வகராதி ஸ்ரீமத்-P. சங்கரநாராயண வென்பவரால் திரிசொற்களான ஆங்கிலச்சொற்களுக்குத் தமிழர்க்குப் பயன்படுமாறு ஆங்கிலச்சொற்களாற் பொருள் கூறியும், தமிழ் கற்கப்புகும் ஆங்கிலேயர்கட்குப் பயன்படுமாறு ஆங்கிலச்சொற்கள் ஒவ்வொன்றற்குந் தமிழிலுள்ள பலவிதமான பொருள்களை விளக்குஞ்சொற்களை யெடுத்துக்காட்டியும் இயற்றப்பெற்றது. இது, ௧௩௭௮-பக்கங்களையுடையது. இவ்வருமையான புத்தகத்தைப் பன்னாள் முயற்சி செய்தெழுதி ஏழையர் முதல் தனவந்தரீறாக யாவரும் வாங்கிப் பயனடையுமாறு திக்கானகாகிதத்திலச்சிட்டது விலை ரூபா நான்கிற்கும், தின் காகிதத்திலச்சிட்டது விலை ரூபா மூன்றிற்கும், விற்பதாக வெளிப்படுத்தியுள்ளார்கள். இவர் இயற்கையில் தெலுங்கராயிருப்பினும் தமிழிற்கு வேண்டியதாகிய இப்பேருபகாரத்தை இயற்றியதற்குத் தமிழுலகம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுளது. இதற்கு முன்னர் இம்மாதிரியான சில அகராதிகள் வெளிவந்திருப்பினும் அவைகளிலொன்றும் இவ்வகராதிக்கிணையாகாதென்பது எமது துணிபு. அவைகளில் இல்லாத நூற்றுக்கணக்கான அருஞ்சொற்றொடர்கள் இதனுள் வந்துள்ளன. இப்பெரிய காரியத்தை நம்மவர்க்கும் பிறர்க்கும் பயன்படுமாறு செய்துதவிய கனம்-P. சங்கரநாராயண அவர்கட்கு யாவரும் நன்றிபாராட்டுவார்களென நம்புகின்றேம்.

ப—ர்.

51

# கையறு நிலை.

மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவரும் பாலவனத்தம் ஜமீந்தாருமான

## ஸ்ரீமான்-பொ. பாண்டித்துரைத் தேவ ரவர்களது காலஞ்சென்றமைக் காற்று திரங்கிச்

செந்தமிழ்ப் பத்திராதிபர் பாடியவை.

### கலிப்பா.

1. பூவாது காய்க்கும் பொழில்போற் புலவர்களுக்
கீவா னிருநிதிய மென்பதுகேட் டெஞ்ஞான்றும்
பாவாணர் சென்றடையும் பாண்டித் துரையரசை
ஆவா வுலகிழந்த தையகோ வையகோ.

2. தன்னைப் பொருவுதமிழ்ச் சங்கமே நம்பாண்டி
மன்னைப் பிரிந்தோம் வருந்தா யவனன்ப
ருன்னைப் புரப்பா ருனது துயர்தீரும்
என்னைப் புரப்பா ரினியா ரறியேனே.

3. செந்தமிழே யந்தோ சிறியை யுனைவளர்த்து
வந்தபாண் டித்துரைமன் வானடைந்த சோர்வொழிவாய்
முந்து தமிழுலகின் மூதறிஞ ராதரவு
தந்து வளர்ப்பார் தளரேல் தளரேலே.

4. கல்லூரி காளுமக்குக் கையுதவி செய்துவந்த
வல்லாளன் பாண்டித் துரைமன் மறைந்தனனே
எல்லோருங் கண்டிரங்கு மேழையரா னீர்பொருள்செய்
நல்லோ ரருள்வர் நலியீர் நலியீரே.

### வெண்பா.

5. சங்க நனிவளர்க்குந் தாளாளன் வானிலுள
சங்க நிதிகொணர்வான் சார்ந்தனனோ—அங்கிருக்கும்
சிந்தா மணிகொணர்வான் சென்றனனோ வொன்றுணரேன்
மைந்தார் புகழ்ப்பாண்டி மன்.

குறிப்பு:—மற்றும் நண்பர்கள் பாடியன அடுத்த பகுதியில் வெளிவரும். ப-ர்.

# The Late Mr. P. Pandithoraisami Thever Avergal,

## *Zemindar of Palavanatham.*

1911-ஞு டிசம்பர் மீ 2உ சனிக்கிழமையன்று மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகரும் முதலாவது பிரசிடேண்டுமான ஸ்ரீமான்-பொ. பாண்டித்துரைசாமித் தேவரவர்கள் திவ்யலோகம் சென்றார்கள். அவர் ஒப்பற்ற புண்யவானாகவும் நற்சீலம் பொருந்திய உத்தம குணவானாகவும் இம்மையில் பிரசித்தமாக வாழ்வுபெற்றிருந்தமையால் அவருடைய புனிதமான ஆன்மாவானது மறுமையிலும் நிகரற்ற வான்பதவிபெற்றுக் கருணாநிதியாகிய பரமேசுவரனுடைய பூர்ணமான அருளுக்குப் பாத்திரமாகி இனி மறுபிறப்பிற்கு உள்ளாகாது வாழ்வுற்று மகிழுமென்பதற்கு ஐயமில்லை. அவர் இருந்தவிடத்திலும் செல்லுமிடத்திலும் சிறப்புக் குன்றாது நிகரற்ற பெருமை வாய்ந்து விளங்கும் மேலான புண்ணியவானெனினும் அவரையிழந்த இவ்வுலகத்திற்கு நேர்ந்த துர்ப்பாக்கியம் இத் தன்மையுடையதென்று அளவிட்டுப்புகல முடியாதிருக்கின்றது. பிறவிச்செல்வமும், நுண்ணிய அறிவும், சாந்தம் தயை ஈகை முதலிய ஒப்பரிய பண்புகளும், வியக்கத்தக்க ஆசாரம், சீலம், ஈசுவரபக்தி முதலிய புனிதமான சுபாவங்களும் ஒருங்கே யமைந்து விளங்கி இனிய மொழியாலும், குணமறிந்து கொடையளிக்கும் ஔதாரியத்தினாலும் வேறுபாடின்றி எல்லோருக்கும் கண்ணுக்குக் கண்ணாய்த் திகழ்ந்து பிறருக்கு உதவுவதையே பெருங்கொள்கையாகப் பூண்டு அமர்ந்த அந்தப் புண்ணியசீலனை யிழந்த இத் தமிழ்நாடு படுகின்ற துயரத்தை நாம் எவ்வாறு மொழியத்தகும்! தமிழ்மொழி தழைத்த இந்நாடாகிய அம்பரத்தில் அவர் ஒரு பரிதிபோல உதித்து விளங்கித் தம்முடைய அறிவின் மாண்பினால் அறியாமையென்னும் இருளை யகற்றித் தமிழ் மொழியையும் அம்மொழியிற் சிறப்புற்ற பண்டிதர்களையும் அம்மொழியைக் கற்கவேண்டி முயல்வோர்களையும் தம்முடைய வண்மையென்னும் கிரணத்தினால் வாழ்வுறச்செய்துகொண்டு விளங்கி வந்திடினும், பகல்முழுதும் பிரகாசித்து மாலையில் அஸ்தமனத்தையடையாது விடிந்து பத்துநாழிகைவரை மட்டும் பிரகா

சித்து உடனே திடீரென்று மறைந்தாற்போலச் சொற்பவயதிற்குள் தம் காயத்தைவிட்டுப் பரலோகம் சென்றது வாயால் உரைத்தற்கரிய கொடுமை. இறக்கும் பொழுது அவருக்கு வயது நாற்பத்தைந்து. பிறப்பு, கல்வி, செல்வம், அறிவு முதலிய எல்லாப் பேறுகளையும் குன்றாது அவருக்கு அளித்த கடவுள் ஆயுளைமட்டும் தீர்க்கமாகப் பயக்காதது தமிழ் அபிமானிகள் செய்து குவித்திருந்த பாவங்களின் பலனாக அமைந்ததென்று நினைக்கவேண்டியிருக்கிறது. அவர் தமிழ்ப்பாஷையையும் அப் பாஷையை விளக்கும் மேலான இலக்கிய இலக்கணங்களையும் முறையாகப் படித்து ஐயமறப் பிறருக்கு உணர்த்தும் பாண்டித்தியமுடையவர். சைவசமயத்தின் நுட்பங்களையும் அச் சமயத்தை விவரித்தருளியிருக்கும் பற்பல ஆசார்யர்களுடைய அபிப்பிராயங்களையும் படித்து ஆழ்ந்து ஆராய்ந்து அச்சமயத்தின் அனுஷ்டானங்களில் நிகரற்ற பற்றுள்ளவராகவும் பக்தியும் சிரத்தையும் குன்றாது நடந்துவந்த உத்தமமான சைவராகவுமிருந்தார். அவ்வித மாட்சிமையுடைய புத்திமான் நிறைந்த ஆயுளோடு சிரஞ்ஜீவியாக இருந்தால் தமிழ் உலகும் சைவசித்தாந்தமும் எவ்வளவு பெருமை பொருந்தியிருக்கும்!

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க வதற்குத் தக."

என்னும் வசனத்தின்முறையாக கற்கவேண்டியவற்றை நன்குறக் கற்று அக் கல்விக்கு அனுகுணமாக ஆசாரமும்பொருந்திய புனிதராக விருந்தார். இனி யென்ன!

> வருந்துவள் தமிழ்மடந்தை; மருவியாங் கமர்ந்த சுற்றம்
> பொருந்திடும் கிலேசம்; மேலாம் புலமையை வியந்த சான்றோர்
> பெருந்துயர் மூழ்கி நின்றார்; பிரிவினை லயர்ந்து சங்கம்
> திருந்துமோர் முறைகாணாது திகைப்பதும் கொடிய தம்மா.

தமிழென்னும் மடந்தை தன் உடன்பிறந்தானை யிழந்தாளோ என்றும், தமிழ்ச்சங்கமும் பெற்ற தாயை யிழந்ததோ என்றும் ஒருவாறு எல்லோரும் ஐயுறும்படியான துர்ப்பாக்கியம் நேர்ந்தது. செந்தமிழ்ப் பத்திரிகையும், சேதுபதி கலாசாலையும் அவர் ஊன்றி அன்புடன் வளர்த்துவந்த பூஞ்செடிகளாய் அவருடைய ஆதாரவாகிய வான் மழையினால் செழித்திருந்தன. முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் மூன்று சங்கங்களும் தழைத்தோங்கி நடைபெற்ற இத் தமிழ்நாட்டில் மறைவுற்ற தமிழ்மொழி திரும்ப வல்லுயிர்பெற்று வாழும்படியாக நான்காவது சங்கமென்று எல்லாராலும்

வியந்து கொண்டாடப்பெற்ற இத் தமிழ்ச்சங்கத்தை விடாமுயற்சியுடனும் தமக்குள்ள அறிவு, பொருள், செல்வாக்கு இவைகளைத் தகுந்தவாறு விநியோகித்தும் இவரே ஸ்தாபித்தாரென்பது தமிழுலகம் நன்கறிந்தது. ஆயினும் கருணாநிதியாகிய பரமசிவன் பயத்தைச் செய்து பயத்தை நிவர்த்திக்கும் பான்மையுடையவராதலால் அந்தப்புண்ணியவான் நடத்திவந்த எல்லாச்செயல்களும் எப்பொழுதும் குறைவின்றி நடைபெற்றுவரும்படி அருள்புரிவார் என்று நாம் தேற்றம் அடைவதற்குங் காரணங்கள் உள்ளன. அந்தக்குணசீலன் மனமுவந்து செய்தவைகளெல்லாம் அவருடைய புனிதமான கையின் சுபாவத்தினால் என்றும் மேன்மைபெற்று வருமென்று நமக்கு உறுதி விளைவிக்கவும், இச் சங்கத்தையும் அதைச்சேர்ந்த கலாசாலை முதலிய கிளைகளையும் முன்போலவே வாழ்வித்து வரவும் தமிழை அபிமானிக்கும் பல புனிதர்களும், மன்னர்குலதிலகமான அந்தப்புண்ணியவானுடைய வம்சத்திற் பிறந்து தழைத்துவரும் பல ஸ்ரீமான்களும், மிகுந்த ஊக்கத்துடன் சங்கத்தின் அபிவிர்த்தியின்பொருட்டு முயன்றுவரும் சங்கற்பத்தையுடைய நிர்வாகசபை அங்கத்தினர்களும் இருப்பதால் நாம் கிஞ்சித்தேனும் அஞ்சுவதற்குக் காரணமில்லை.

ஆனால் இவர் பிரிந்துசென்றதை மனம் சகியாது வருந்தும் நண்பர்கள் பலருளர். இவருடைய வண்மையையும் ஆதரவையும் எண்ணியெண்ணிப் புலம்பித்தவிக்கும் வித்வான்களும் மாணாக்கர்களும் பலர். இவரால் உணவளிக்கப்பெற்று இவரையன்றி வேறொருதுணையையும் நாடாது காலக்ஷேபம் செய்துவந்த குடும்பங்கள் நூற்றுக்கணக்காயுள்ளன. இவர் பிரிந்த துக்கத்தைக் கிஞ்சித்தேனும் பொறுக்கமுடியாது வருத்தமுறும் பந்துவர்க்கங்கள் விஸ்தாரமாய் உள்ளன. குழந்தைப் பருவத்தில் வளர்ந்துவரும் இவருடைய குமாரன் சோமசுந்தரபாண்டிய தேவரவர்களும் இவரால் ஆதரவுடன் வளர்க்கப்பெற்று இவருடைய அன்புக்குப் பாத்திரமாயிருந்த இவர் தமயனார்புதல்வர் பாலையம்பட்டி ஜமீந்தார் ஸ்ரீமான்-இராமச்சந்திர தேவரவர்களும் அளவற்ற துக்கத்திற்கு உள்ளாயினர். இக் கொடுந்துக்கத்தை மனவலியுடன் சகித்து, பிறக்கும் மானிடப்பிறவிக்கு இறப்பது அகற்றவொண்ணாத இயல்பு என்னும் விவேகத்துடன் சமாதானம் பெற்றுத் துன்பக்கடலினின்று கரைசேர்ந்து சமாதானம் அடையும்படியாக எல்லாம்வல்ல கடவுள் அருள்புரிவாராக.

P. S. சுப்பிரமணிய ஐயர்.

---

### மதுரைத் தமிழ்ச் சங்கத்து

## 1911ஹூ செப்டம்பர்மீ 1உ முதல் 30உ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

| வரவு | தொகை ரூ. | அ. | ப. | செலவு | தொகை ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1911-ஹூ செப்டம்பர்மீ த்துக்குரிய புதுக்கோட்டைசமஸ்தானம் மாதச்சந்தாவரவு... | 50 | 0 | 0 | சங்கச்சிப்பந்திகளுக்குச் சென்ற ஆகஸ்ட்மீ த்திய பட்வாடா ரிஜிஸ்டர்ப்படி சம்பளம் செல்லாக்கிய வகையிற் செலவு ... | 355 | 2 | 11 |
| விரோதிகிருது ஹூ ஆவணிமீ த்துக்குரியமாதச்சந்தாத்தொகை மகா-ள-ள-ஸ்ரீ சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியார் அவர்களிடமிருந்து வரவு ... | 50 | 0 | 0 | கலாசாலைமாணவர்களின் ஆகாராதி போஷணை பட்வாடா ரிஜிஸ்டர்ப்படி 1911-ஹூ மே, ஜூலை, ஆகஸ்ட்மீ ங்களுக்குச் செல்லாக்கியது ... | 145 | 12 | 9 |
| செந்தமிழ்ச்சந்தா வரவு ... | 70 | 14 | 0 | கலாசாலைஉபயோகத்துக்குவாங்கியபுத்தகங்கள் | 2 | 0 | 0 |
| | | | | பைண்டிங் ஆபீசு கண்டின்ஜன்சிச்செலவு ... | 11 | 2 | 8 |
| பிரிண்டிங் ஆபீசு அச்சுக்கூலி வரவு ... | 277 | 15 | 6 | பிரிண்டிங்ஆபீசு ஸ்டேஷனரிச்செலவு 37-10-6<br>ஷை ஆபீசு ஆயில் எஞ்சின் சம்பந்தமாய் எண்ணெய்ச் செலவு 20—0—6 | | | |
| பைண்டிங் ஆபீசு வரவு ... | 41 | 0 | 6 | ஷை ஆபீசு கண்டின்ஜன்சிச்செலவு 12—12—2<br>ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ... | 70 | 7 | 2 |
| புத்தக விற்பனை வரவு ... | 107 | 1 | 0 | போஸ்டேஜ் வகையிற் செலவு ... | 27 | 0 | 0 |
| | | | | ரிபேர் வகையிற் செலவு ... | 1 | 12 | 0 |
| விளம்பரவகையிற் சார்ஜ் வரவு (Advertisement) ... | 9 | 8 | 0 | சங்கம்பிரஸ் ஆயில்எஞ்சினுக்கு 1911-ஹூ ஏப்ரல்மீ முதல் 1912-ஹூ மார்ச்சுமீ முடிய ஒருவருஷத்துக்கு லைசென்ஸ்செலுத்தியது... | 50 | 0 | 0 |
| சங்கம் காலி நிலம் மாக்கடைவாடகை நாளது விரோதிகிருது ஹூ ஆவணிமீ த்துக்குவரவு... | 35 | 0 | 0 | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சங்கம் ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷையிற் றேறியவர்களுக்கு மெடல்செய்த வகையில் ... | 57— 9—0 | | |
| | | ஷை பரீக்ஷையிற்றேறியவர்களுக்கு ரொக்கப்பரிசு அனுப்பியது | 88— 0—0 | | |
| | | செந்தமிழ் விஷயதானத்துக்கு பிரசிடெண்ட் டிரஸ்டியவர்கள் உத்தரவுப்படி அனுப்பியது | 8— 0—0 | | |
| | | சுதேசமித்திரன் பத்திரிகைக்கு 1911-ஹுஜனவரிமீ முதல் டிசம்பர்மீ முடிய எக்ஸ்சேஞ்சு போக பாக்கி சந்தா வி. பி. மூலம் செலுத்தியது | 6— 2—0 | | |
| | | ஆபீசு உபயோகத்திற்கு V. P. புக், போஸ்டேஜ் டியூ, மணியார்டர் கம்மிஷன், ரசீது ஸ்டாம்பு, பேபர் வகையிற் செலவு | 1—10—0 | | |
| | | மெடல்களை இன்ஷியூர் செய்தனுப்பிய வகையிற் செலவு | 0—11—0 | | |
| | | சுமைகூலி வகையிற் செலவு | 0— 2—9 | | |
| | | பிரிண்டிங் ஆபீசு பில்ப்படி சங்கம் ஆபீசு அச்சுக்கூலி வகைக்குச் செல் | 56—14—0 | | |
| | | ஷை ஆபீசு பில்ப்படி ஷை ஆபீசு பைண்டிங் வகைக்குச் செல் | 22—13—0 | | |
| | | ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ... | | 241 | 13 | 9 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆக வரவு ரூ | 641 | 7 | 0 | | | | |
| சென்ற ஆகஸ்ட்மீ 31ந் தேதியில் நின்ற பாக்கித்தொகை ... | 787 | 1 | 0 | ஆகமொத்தம் செலவு ரூ | 905 | 3 | 3 |
| ஆக மொத்தம் ... | 1428 | 8 | 0 | போக பாக்கியிருப்பு ... | 523 | 4 | 9 |
| | | | | ஆக மொத்தம் ... | 1428 | 8 | 0 |
| ஆக மொத்தம் ... | 1428 | 8 | 0 | ஆக மொத்தம் ... | 1428 | 8 | 0 |

திரு. நாராயணையங்கார்,

மானேஜர்.

*Audited and found Correct*

S. GOPALASAMY IYENGAR,

*Auditor.* 15—10—11.

63

64


# Hair Troubles Avoided

By continually using such a preparation as

# KUNTAL-KAUMADI

## THE NATIONAL HAIR OIL.

You keep the scalp moist and cool. The roots of the Hair are supplied with energy and nourishment and the hair maintained in the best possible condition.

PRICE 12 AS. PER BOTTLE.

Price per Big Phial As. 12 only. Per V.P.P. Rs. 1-3.
" " 3 Rs. 2. only. " " Rs. 2-11.

**TRY IT TO-DAY.**

*Sole Agents to Madras Presidency,*
M. Shaw Heerdayal & Co.,
*144-5. China Bazaar Road,*
Madras.

KAVIRAJ R. C. SEN L. M. S.
*216, Cornwallis Street, Calcutta.*

# YOUNG LADIES.

Suffer in silence from various disorders peculiar to the Sex. Dr. Syam's Ovarine is the only infallible remedy for them.

REMARKABLE VERDICT.

Dr. S. Z. Pa. M. A. M. B. B. S., de Paris etc. Consulting Physician and Surgeon, Occulist, Patiala State, Dr. Syam's Ovarine is undoubtedly an effective remedy in irregular menses and white discharge.

Miss. G. M. Bradley M. D. Brux, L. S. A. (Lord) Superintendent, St. John's Hospital and Port Plague Officer, Bombay.—Dr. Syam's Ovarine was successful in the two cases of female complaints I have used it for.

Miss. F. G. Wells, L. M. S., L. R. C. P., and S. C., Superintendent, Gosha Hospital, Madras.

The sample bottle of Ovarine has done good to my patient. Please send another bottle.

PER PHIAL RS. 2-8. 3 PHIALS RS. 6.

*Sole Agent:*—HARRIS & Co., Kalighat, Calcutta. *Telegrams:-* "OVARINE

( No. 2. )

# THE TEST OF TIME!

FOR OVER THIRTY SEVEN YEARS

**SCOTT'S EMULTION**

*has stood every rigid test that learned Physician could suggest.*

LUNG TROUBLES,
COUGHS,
COLDS,
LOSS OF FLESH,
POOR APPETITE,

and as a Tonic and Tissue Builder for both Father and Son




NOT TOUCHED BY HAND

*FOR SALE AT ALL CHEMISTS.*

SCOTT & BOWNE, Ltd.

MANUFACTURING

CHEMISTS

LONDON, ENCLAN

## No. 3.

# CHAMBERLAIN'S COUGH REMEDY.

## இருமலுக்கு சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த மருந்து.




இது,

இருமல், சீதளம், சளிமாந்தம்,
நெஞ்சிழைவு, கக்குவாய் இருமல்
முதலான: தொண்டை,மார் வியாதிகளை
எல்லாம் நீக்கும்.

இருமல் விஷயத்தில் அசட்டையாயிருக்கலாகாது. அது அபாயத்துக்கிடமான நோய். அது, கபவாதசுரம், இரத்தகாசம், க்ஷயரோகம் முதலியவைகளில் கொண்டு விடும்.

சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த இருமல் மருந்து, நெஞ்சிலிருக்கும் கபம் அல்லது கோழையை நீக்கும்; உப்பசத்தை ஒழிக்கும், மனதில் சிலியுண்டாக்கும், இருமலையும் போக்கும் நுரையீரலில் (மாரடைப்பு) கஷ்டமில்லாமல் சுவாசம் தாராளமாய்ப் போக வரச்செய்யும். இரவில் இருமலின் உபத்திரவத்தைக் குறைக்கும் நித்திரையைக்கொடுக்கும்.

சேம்பர்லேன் துரை செய்த இருமல் மருந்தில் அபினிக் கலப்பில்லை.

**☞ இது மூலிகைமயமான மருந்து.**

**☞ கைபடாமல் செய்த மருந்து.**

**எங்கும் கிடைக்கும்.**

**சின்ன புட்டி ரூ. 1—0—0 பெரிய புட்டி ரூ. 2—0—0**